புது முறை இலக்கணச் சுருக்கமும் உரைநடை ஆக்கமும்

(முதற் புத்தகம்)

வித்துவான் அ. மு. பரமசிவானந்த முதலியார் B.O.L., M.Litt.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 OCT 1949
MADRAS

HEAVEN'S LIGHT OUR GUIDE

966

...ல் பப்ளிஷிங் ஹவுஸ்
...ட் :: சென்னை.

P31:3
N49.1
112652

[விலை அணா 13.

புது முறை இலக்கணச் சுருக்கமும்

உரைநடை ஆக்கமும்

(முதற் புத்தகம்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 OCT 1949
MADRAS

வித்துவான்
அ. மு. பரமசிவானந்த முதலியார், B. O. L., M. Litt.
துணைத் தமிழ்ப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.

ஓரியண்டல் பப்ளிஷிங் ஹவுஸ்
286, எஸ்பிளனேட் (அப்பா பில்டிங்ஸ்)
சென்னை

காபிரைட்] 1949 [விலை அணா 13

முதற் பதிப்பு 1949

P31;3
N49.1

112652

Printed at the Rajan Electric Press, Madras—1.

முன்னுரை

யான் சில ஆண்டுகட்கு முன்பு, இடை நிலைப் பள்ளித் தமிழ் மாணவர்கட்கென்று தமிழ் இலக்கணப்புத்தகவரிசை எழுதினேன். அவ்வரிசையில் அமைந்த நூல்களைத் தமிழறிஞர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்று ஆதரித்து, என்னை ஊக்கினர்கள். இதற்கிடையில் அரசாங்கத்தார் இலக்கணப்பாட வியலைத் திருத்தியும் புதுக்கியும் முடிவுகட்டிச் சென்ற மாதம் வெளியிட்டனர். எனவே, புதிய இலக்கணப் புத்தகவரிசை எழுதும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. யான் முன்பு எழுதிய இடை நிலைப்பள்ளித் தமிழ் இலக்கணவரிசையை ஏற்ற வாறு திருத்தி அமைத்து, புதிதாக மொழிப்பயிற்சி, கட்டுரைப்பயிற்சி முதலியன சேர்த்து இப்பொழுது புதுமுறை இலக்கணச்சுருக்கமும், உரை நடை ஆக்கமும் என்னும் பெயருடன் இந்நூல்வரிசை வெளிவருகின்றது.

இந்நூல் வரிசையிற்காட்டப்பட்ட எடுத்துக்காட்டுகள் மாணவர்களுடைய தினசரிவாழ்வில் வழங்கப்படும் வாக்கியங்களே. தனி இலக்கணவிதிகளைமட்டும் மாணவர்கட்குக் கற்பித்தல் கூடாதென்றும், மாணவர்கள் திருத்தமாகப் பேசவும், எழுதவும் கற்பிப்பதே இலக்கணத்தின் நோக்கமாக இருத்தல் வேண்டும் என்றும் இக்காலப் புதுக்கல்விமுறை கூறுகின்றது. அதனை நோக்கமாகக் கொண்டே இந்நூல் வரிசை எழுதப்பட்டது. அந்நோக்கம் சிறி

தேனும் நிறைவேறுவதற்கு வேண்டிய துணை செய்யுமாறு தமிழறிஞர்களை வேண்டுகின்றேன்.

இந்நூல் வரிசையை யான் எழுதும் பொழுதும், அச்சிடும்பொழுதும் உடனிருந்து, சிறந்த கருத்துக்களைத் தெரிவித்து உதவி செய்த எனது நண்பர் வித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளையவர்களுக்கு யான் பெரிதும் கடப்பாடுடையவனாய் இருக்கிறேன்.

என் புத்தகங்களை ஆதரித்து, எனக்கு இது வரையில் ஊக்கமளித்தது போலவே இவ்வரிசை நூல்களையும் ஆதரித்து, என்னை மேன்மேலும் ஊக்கப்படுத்துமாறு தமிழறிந்த பெருமக்களை யான் வேண்டிக்கொள்கின்றேன்.

சென்னை,
25-5-49

அ. மு. பரமசிவானந்தம்

பொருளடக்கம்

பொருள்	இலக்கணம்	பக்கம்
I வாக்கியம்		
1.	வாக்கியத்தின் பொது இலக்கணம் ...	1
2.	வாக்கியத்தின் வகைகள் ...	4
3.	வாக்கியத்தின் உறுப்புக்கள் ...	5
II பெயர்ச்சொல்		
1.	அறுவகைப் பெயர்கள் ...	7
2.	திணை ...	8
3.	பால் ...	10
4.	எண் ...	11
5.	இடம் ...	12
6.	வேற்றுமை ...	13
III வினைச்சொல்		
1.	காலம் ...	21
2.	வினைமுற்று ...	23
3.	எச்சம் ...	25
IV எழுத்து	...	
1.	எழுத்துக்களின் வகை ...	27
2.	சில எழுத்துக்களின் உச்சரிப்பு ...	30
3.	உயிரெழுத்து வகை ...	32
4.	மெய்யெழுத்து வகை ...	33
5.	உயிர்மெய்யெழுத்து வகை ...	34
6.	சொற்களில் ர, ற; ல, ள, ழ; ன, ண எழுத்துக்கள் வரும்போது பொருள் வேறுபடுதல்	35
V. புணர்ச்சி	...	39

மொழிப்பயிற்சி

I வாக்கிய வகைகள் ... 47
II வாக்கிய உறுப்புக்கள் நிற்கும் முறை ... 50
III வாக்கியப் பொருத்தம் ... 53
IV இடம் விட்டு எழுதுதல் ... 56
V சேர்த்தெழுதுதல் ... 57
VI சொற் பொருத்தம் ... 58
VII நிறுத்தக் குறிகள் ... 60
VIII தனி நிலை வாக்கியங்களைத் தொடர் நிலை வாக்கியங்களாக மாற்றுதல் ... 65
IX வல்லெழுத்து மிகுமிடங்கள் ... 67

கட்டுரை

1. நூல் நிலையப் புத்தகங்களைப் படித்துக் கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்தல் ... 76
2. இனிய கதைகளைத் தேர்ந்தெடுத்தல் ... 78
3. படம் பார்த்துக் கட்டுரை எழுதுதல் ... 89
4. கோடிட்ட இடங்களில் நிரப்புதல் ... 93
5. நிகழ்ச்சிகளை வருணித்தல் ... 94
6. பயிர்த்தொழில் சம்பந்தமான கட்டுரை ... 96
7. கைத் தொழில்கள் ... 100
8. பண்டிகைகள், விழாக்கள் பற்றிய கட்டுரைகள் ... 104
9. மாணவர் கழகத்தில் சொற்போர் நிகழ்த்துதல் ... 109
10. நாட் குறிப்புப் புத்தகம் ... 114
11. பாடசாலைப் பத்திரிகைக்குக் கட்டுரை எழுதுதல் ... 116
12. கடிதம் வரைதல் ... 117
13. நிகழ்ச்சி நிரல் ... 125
14. கதைக்கு ஏற்ற தலைப்பு அளித்தல் ... 126

புது முறை இலக்கணச் சுருக்கமும் உரைநடை ஆக்கமும்

(முதற் புத்தகம்)

I. வாக்கியம்

1. வாக்கியத்தின் பொது இலக்கணம்

நம் மனத்தில் தோன்றும் எண்ணங்களைச் சொற்களின் மூலமோ, தொடர்களின் மூலமோ, பொருளமைதி பெறப் பிறர்க்குத் தெரிவிக்கிறோம். அவை, நம் மனக்கருத்தைப் பிறர்க்குத் தெளிவாகத் தெரிவிக்கும் முறையில் ஏற்றபடி அமைந்திருக்க வேண்டும்.

குதிரை ஓடுகிறது.
சுந்தரம் கல்லூரிக்குச் சென்றான்.
தச்சன் நாற்காலியைச் செய்தான்.
இது என் வீடு.

இத்தொடர்களுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்தைத் தெரிவிக்கும் முறையில், தகுந்தபடி அமைந்துள்ளது; ஆதலால், இவற்றுள் ஒவ்வொன்றும் வாக்கியம் அல்லது முற்றுத்தொடர் என வழங்கப்பெறும்.

பின் வரும் தொடர்களைப் படித்துப் பாருங்கள்; பொருட்பொருத்தம் இருக்கின்றதா?

1. புலவர் சிறந்த இளங்கோவடிகள்
2. கல்வி கயவர் அஞ்சுவர் கற்க
3. போய் கடைக்கு வாங்கினேன் நான் கற்கண்டு

இத்தொடர்களுள் சொற்கள் தொடர்ந்து நின்றும், முடிந்த பொருள் அமைதி இல்லாமையால், இவை வாக்கியங்கள் ஆகா. முடிந்த கருத்தைத் தரவேண்டுமானல், கீழ்க் காணுமாறு இவற்றை மாற்றியமைத்து எழுத வேண்டும்:

1. இளங்கோவடிகள் சிறந்த புலவர்.
2. கயவர் கல்வி கற்க அஞ்சுவர்.
3. நான் கடைக்குப் போய்க் கற்கண்டு வாங்கினேன்.

சொற்கள் தக்கபடி அமைந்து தொடர்ந்து நின்று முற்றுப் பெற்ற கருத்தைத் தெளிவாகத் தெரிவிப்பதே வாக்கியம் அல்லது முற்றுச்சொற்றொடர் ஆகும்.

1. பாரத நாடு சுதந்தரம்
2. சந்திரன் இரவில் ஒளி
3. சூரியன் கீழ்த்திசையில்
4. நான் காலையில் ஐந்து மணிக்கு

இத்தொடர்களுள் சில சொற்கள் தொடர்ந்து நிற்கின்றன; ஆனல், இவை முடிந்த கருத்தைத் தெரிவிக்கவில்லை; ஆகையால், இவை வாக்கியங்கள் அல்ல. இவைகளை எச்சத் தொடர் என வழங்கலாம். இவைகள் முடிந்த கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமானல், கீழுள்ளபடி அமைய வேண்டும்:

1. பாரத நாடு சுதந்தரம் பெற்றுவிட்டது.
2. சந்திரன் இரவில் ஒளி தருகிறுன்.
3. சூரியன் கீழ்த்திசையில் தோன்றுகிறுன்.
4. நான் காலையில் ஐந்து மணிக்கு எழுந்தேன்.

சொற்கள் தொடர்ந்து நின்று முடிந்த கருத்தைத் தெரிவியாவிட்டால், எச்சத்தொடர் என வழங்கும். அதைத் தொடர் எனவும் சொற்றொடர் எனவும் வழங்கலாம்.

பயிற்சி :

I. முற்றுச் சொற்றொடர்களையும் எச்சச் சொற்றொடர் களையும் பிரித்து எழுதுக:—

1. ஒழுக்கம் உயிரினும்
2. கோபாலன் கடைக்குச் சென்று
3. முருகன் நல்ல பையன்.
4. நான் வந்தேன்.

II. பின் வரும் சொற்றொடர்களை வாக்கியங் களாக்குக:—

1. எடிசன் பிடித்தார் தந்தியைக் கண்டு
2. நட பெரியோர்க்குக் கீழ்ப்படிந்து
3. நன்மையை உடலுக்கு செய்யும் உடற்பயிற்சி

III. பின் வருவனவற்றைத் தக்கபடி முடித்து வாக் கியங்களாக்குக:—

1. இளமையிற் கல்வி
2. இரண்டும் இரண்டும் சேர்ந்து
3. வைகறையில் துயில் எழுவது உடலுக்கு

2. வாக்கியத்தின் வகைகள்

1. கந்தன் கல்லூரிக்குச் சென்றான்.

2. முருகா, நீ நேற்று இங்கு வந்திருந்தாயா?

3. குழந்தைகளே, அமைதியாய் இருங்கள்.

4. அணுக்குண்டு போட்டு நாடுகளை அழிப்பது எவ்வளவு அநீதி!

இத்தொடர்களுள் முதலாவது, ஒரு செய்தியைத் தெரிவித்தலால், 'செய்தி வாக்கியம்' என வழங்கும். இரண்டாவது, கேள்வியாய் அமைந்திருத்தலால், 'வினா வாக்கியம்' எனப்படும். மூன்றாவது, கட்டளையிடுவதாய் அமைந்திருத்தலால், 'கட்டளை வாக்கியம்' என்று கூறப்படும். நான்காம் வாக்கியம், 'உணர்ச்சி வாக்கியம்' எனப்படும்.

வாக்கியங்கள், செய்தி, வினா, கட்டளை, உணர்ச்சி என்னும் காரணங்களால் நான்கு வகைப்படும்.

செய்தி வாக்கியம், ஒரு செய்தியை அல்லது விஷயத்தைத் தெரிவிப்பது.

வினா வாக்கியம், கேள்வி கேட்கும் முறையில் அமைவது.

கட்டளை வாக்கியம், உத்தரவைத் தெரிவிக்கும் முறையில் அமைவது.

உணர்ச்சி வாக்கியம், இரக்கம், கோபம், மகிழ்ச்சி முதலியவற்றைத் தெரிவிக்கும் முறையில் அமைவது.

பயிற்சி:

கீழ் வருவன இன்ன இன்ன வகை வாக்கியம் என்பதைக் குறிப்பிடுக:—

பெரியோரிடம் அமைதியாக நடந்துகொள்.

கரிகாலன் சோழ அரசருள் ஒருவனா?

துறவிக்கு வேந்தன் துரும்பு.

3. வாக்கியத்தின் உறுப்புக்கள்

[எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்]

முடிந்த கருத்தை உணர்த்தும் சொற்றொடரே வாக்கியமாகும் என்பதை அறிந்தோம். இப் பகுதியில் வாக்கியத்தின் உறுப்புக்கள் எவை என்பதை ஆராய்ந்து உணருவோம்:

1. மரம் வளர்கிறது.
2. முருகன் பாட்டைப் பாடுகிறான்.

முதல் தொடரில் எதைப்பற்றிப் பேசுகிறோம்? மரத்தைப்பற்றி அன்றோ? எதை அறிகிறோம்? வளர்கிறது என்பதை அறிகிறோம்.

இரண்டாந் தொடரில் யாரைப்பற்றிப் பேசுகிறோம்? முருகனைப்பற்றி அன்றோ? எதை அறிகிறோம்? பாடுகிறான் என்பதை அறிகிறோம்.

வாக்கியத்தில் எதைப்பற்றிப் பேசுகிறோமோ, அது எழுவாய் என வழங்கும். எழுவாயின் பயனைக் கொண்டு நிற்பது பயனிலை.

இரண்டாம் வாக்கியத்தில் முருகன் செய்யும் தொழிலை ஏற்பது எது? அது 'பாட்டு' என்பது. ஆகையால், 'பாட்டை' என்பது செயப்படு பொருளாம்.

வாக்கியம் எந்த உறுப்புக்களைப் பெற்று வரும்? அவை எழுவாயும் பயனிலையும் செயப்படு பொருளுமே ஆகும்.

[எழுவாய்-வாக்கியம் தோன்றுவதற்கு இடமாயிருப்பது. பயனிலை - வாக்கியத்தின் பயன் நிலைத்திருப்பது. செயப்படு பொருள்-எழுவாயின் செயலை ஏற்று நிற்பது.]

பயிற்சி :

எழுவாய் பயனிலை செயப்படு பொருள்களைக் குறிப்பிடுக:—

1. மழை பெய்கிறது.
2. பறவைகள் இனிமையாய்ப் பாடுகின்றன.
3. சீதை மல்லிகை மலரைப் பறித்தாள்.
4. புலி வீட்டில் வாழ்வது அன்று.
5. பூனை காட்டில் வாழாது.
6. வேலைக்காரன் மணி அடித்தான்.
7. மாணவர் பரீட்சையில் தேர்ச்சியடைவர்.
8. பாரத நாடு நம் தாய் நாடு.

II. பெயர்ச்சொல்

1. அறுவகைப் பெயர்கள்

கா, தா, பூ, வா, மணி, பாடம் என்பன பொருளைத் தருவன அல்லவா ? இவைகளையே பதம் அல்லது சொல் எனக் குறிக்கிறோம். இதனால், 'ஓரெழுத்தும் பதமாவதுண்டு; பல எழுத்துக்கள் தொடர்ந்தும் பதமாவதுண்டு,' என்பதை அறியலாம்.

காவேரி, திரிசிராப்பள்ளி, உச்சிப்பிள்ளையார், மலை-என்பன பொருளுக்குப் பெயராய் வருதலின், பெயர்ச்சொல் என வழங்கப்படும்.

கோவிந்தன், திரிசிராப்பள்ளிக்குப் போய்க் காவேரியில் நீராடி, மலைமேல் ஏறி, உச்சிப் பிள்ளையாரைத் தரிசித்தான்.

இதனுள் 'கோவிந்தன்' என்பது ஒரு மனிதன் பெயர் ; 'திரிசிராப்பள்ளி' என்பது ஓரிடத்தின் பெயர் ; 'காவேரி, மலை, உச்சிப் பிள்ளையார்' என்பன பொருள்களின் பெயர்.

ஆதலால், ஒரு பொருளுக்குப் பெயராய் வருவது பொருட்பெயராம். மனிதர், விலங்கு, பறவை முதலிய உயிருள்ள பொருளின் பெயரும் ; நாற்காலி, பொன், இரும்பு, மண், கல் முதலிய உயிரில்லாப் பொருளின் பெயரும் பொருட்பெயரே.

ஓர் இடத்திற்குப் பெயராய் வருவது இடப்பெயர் ஆகும்.

1. கோவிந்தன் காலையில் பள்ளிக்கூடம் போகிறான்.

2. அவன் பாடுதலில் வல்லவன்.

3. யானைத் தந்தம் வெண்மை நிறம் உடையது.

'காலை' என்பது ஒரு காலத்திற்குப் பெயராய் வந்தது; ஆதலால், காலப்பெயர்.

'தந்தம்' என்பது ஒருறுப்புக்குப் பெயராய் வந்தது; ஆதலின், சினைப்பெயர்.

'வெண்மை' என்பது நிறமாகிய பண்புக்குப் பெயராய் வந்தது; ஆதலின், பண்புப் பெயர். நிறம், சுவை, அளவு போல்வன எல்லாம் பண்புப் பெயராகும்.

'பாடுதல்' என்பது ஒரு தொழிலுக்குப் பெயராய் வந்தது; ஆதலின், தொழிற்பெயர்.

பொருட்பெயர்:—கோவிந்தன், சீதை, பொன், நாற்காலி, யானை.

இடப்பெயர்:—ஊருணி, தெரு, கலாசாலை, வீடு, காஞ்சீபுரம்.

காலப்பெயர்:—இளவேனில், சித்திரை, திங்கள், பகல், இரவு, நாழிகை.

சினைப்பெயர்:—கால், கை, தலை, காய், பழம், பூ, கொம்பு.

குணப்பெயர்:— இனிமை, கருமை, நெடுமை, குறுமை, அன்பு, வட்டம், வெண்மை.

தொழிற்பெயர்:—ஓட்டம், தூக்கம், நடத்தல், வருகை, செலவு.

2. திணை

1. *கோவிந்தன் ஓடுகிறான்.* 2. *நரி ஓடுகிறது.*
3. *மரம் வளர்கிறது.* 4. *மலை உயரமானது.*

இத்தொடர்களுள் கோவிந்தன், நரி, மரம், மலை என்னும் நான்கும் பொருட்பெயர்கள். ஆயினும், இவற்றுள் வேறுபாடுண்டு.

கோவிந்தன் பகுத்துணரும் அறிவுள்ளவன்; நரி பகுத்துணரும் அறிவில்லாதது. மரம் தொட்டாலறியும் உணர்ச்சியுள்ளது. கல் அறிவில்லாமையோடு உயிரும் இல்லாதது.

ஆதலின், பகுத்துணரும் அறிவுள்ள உயிர்களை ஓரினமாகவும்; உயிருடையனவும், உயிரில்லாதனவுமான பிறவற்றையெல்லாம் மற்றோரினமாகவும் முன்னோர் பகுத்திருக்கின்றனர். இப்படிப் பிரித்துக் கூறுவதற்கு இலக்கணத்தில் 'திணை' எனப் பெயர் வழங்குவர்.

பகுத்துணர்வு உள்ளவை உயர்திணையைச் சேர்ந்தவை. அவ்வறிவு இல்லாதவை அஃறிணை (அல்+திணை) யைச் சேர்ந்தவை.

மக்கள், கோவிந்தன் - உயர்திணை

கல், நரி—அஃறிணை

பயிற்சி:

கீழ் வருவனவற்றுள் உயர்திணை அஃறிணைச் சொற்களைத் தனித்தனி எடுத்து எழுதுக:—

ஆடு	பாட்டு	மாலை
ஆறு	பாண்டியன்	மன்னன்
ஊர்	சீதை	மூக்கு
எறும்பு	முருகன்	சேரன்
சுந்தரன்	மலர்	சோழன்

3. பால்

1. ஜயசிங்கு சிறந்த வீரன்.

2. மங்கம்மாள், நற்குணமுடையவள்.

இத்தொடர்களுள் ஜயசிங்கு, மங்கம்மாள் என்னும் பெயர்கள் உயர்திணைப் பொருளைக் குறிப்பனவே; ஆயினும், இவற்றுள் வேறுபாடுண்டு.

ஜயசிங்கு, ஆண்.
மங்கம்மாள், பெண்.

இவ்வாறு திணையில் உள்ள பிரிவுக்குப் பால் என்பது பெயர். இராமலட்சுமணர் என ஆண்களுட் பலரையும், மாதவி கண்ணகியர் எனப் பெண்களுட் பலரையும், 'கோவலன் கண்ணகி மாடலன் கவுந்தி நால்வரும் வரும்வழியில் கண்டு பேசினர்,' என அவ் விருவருட்பலரையும் குறிக்கும் பெயர்கள் பலர்பால் ஆகும். எனவே, உயர்திணையில் ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூன்று பால்கள் உண்டு.

அஃறிணைப் பொருள்கள் எல்லாவற்றையும் இவ்வாறு பிரிக்க முடியாதல்லவா? விலங்கு பறவை முதலிய சில பொருள்களை மட்டுமே ஆண், பெண் எனப் பிரித்து உணரலாம். மா, தென்னை, புழுக்கள் முதலிய பொருள்களிலும் ஆண், பெண் என்னும் பிரிவை உணர முடியுமா? முடியாது. ஆதலின், அஃறிணைப் பொருள்களை ஒன்று, பல எனப் பிரித்தனர்.

(உ - ம்.) அது, இது, சிறியது—ஒன்றன் பால்.
அவை, இவை, சிறியவை—பலவின் பால்.

குறிப்பு:—இவற்றுள் து என்பது ஒன்றன் பாலையும், வை என்பது பலவின் பாலையும் காட்டும் விகுதிகள் ஆகும்.

பால் பகா அஃறிணைப் பெயர்கள்:

ஒன்று, பலவா எனப் பிரித்தறிய முடியாத அஃறிணைப் பெயர்கள் **பால் பகா அஃறிணைப் பெயர்கள்** என வழங்கும். அவற்றை ஒருமை பன்மை எண்கள் இரண்டிலும் கூறலாம்.

(உ - ம்)	குதிரை வந்தது.	குதிரை வந்தன.
	மரம் வளர்ந்தது.	மரம் வளர்ந்தன.
	பறவை பறந்தது.	பறவை பறந்தன.
	கோழி கூவியது.	கோழி கூவின.

குறிப்பு:— சொற்றொடரை முடிக்கும் பயனிலையைக் கொண்டு இந்தப் பெயர் இன்ன எண்ணுக்குரியது என்பதை அறிய முடியும்.

4. எண்

உயர்திணையில் ஆண்பாற்பெயர் ஒருவனையே குறிக்கும்; பெண்பாற்பெயர் ஒருத்தியையே குறிக்கும். அஃறிணையில் ஒன்றன் பாலும் அவ்வாறு ஒரு பொருளையே குறிக்கும்; ஆதலின், இம்முப்பால்களும் தனித்தனி ஒவ்வொரு பொருளையே குறிப்பனவாம்.

உயர்திணையுள் பலர்பால், அஃறிணையுள் பலவின்பால் ஆகிய இரண்டும் பல பொருளைக் குறிப்பனவாம்.

ஒரு பொருளைக் குறிக்கும் பால் **ஒருமை எண்** எனவும், பல பொருளைக் குறிக்கும் பால் **பன்மை எண்** எனவும் பெயர் பெறும்.

கோவிந்தன், திருமகள், பூனை—ஒருமை.

அரசர், தேவிமார், யானைகள்—பன்மை.

பயிற்சி :

ஒருமைக்குப் பன்மையும் பன்மைக்கு ஒருமையும் எழுதுக:—

அரசன், குழந்தை, கற்கள், குரு, தேவியர், புதல்வன், மனைவி, மரங்கள், குதிரைகள், பெரியார், மகள், எருது.

5. இடம்

"கோவிந்தா, நான் சொன்னபடி நீ நேற்று உன் மாமனைக் கண்டாயா?" என்று தந்தையார் தம் மகனைக் கேட்டார்.

இங்குப் பேசுபவரை '**நான்**' என்னும் சொல்லும், கேட்பவனை '**நீ**' என்னும் சொல்லும், பேசப்படுபவனை '**மாமன்**' என்னும் சொல்லும் குறிக்கின்றன அல்லவா?

பேசுபவனைக் குறிக்கும் சொல் **தன்மை இடம்.**
கேட்பவனைக் குறிக்கும் சொல் **முன்னிலை இடம்.**
பேசப்படுபவனைக் குறிக்கும் சொல் **படர்க்கை இடம்.**

மூவிடப் பெயர்கள் :

	ஒருமை	பன்மை
தன்மை	யான், நான்	யாம், நாம், யாங்கள், நாங்கள்
முன்னிலை	நீ	நீர், நீயிர், நீவிர் நீங்கள்

படர்க்கை:

அரசன், கம்பன், சோழன் — ஆண் பால்
அரசி, சிறுமி, கண்ணகி — பெண் பால்

அவர், சிறுவர், மக்கள் — பலர் பால்
இது — ஒன்றன் பால்
இவை — பலவின் பால்

குறிப்பு:-தன்மை, முன்னிலை ஒழிந்த எல்லாப் பெயர்களும் படர்க்கைப் பெயர்களாம்.

பயிற்சி :

கோடிட்ட இடத்தில் மூவிடப் பெயர்களுள் ஏற்ற பெயரை அமைக்க:—

1. ————நாளை வருவான்.
2. ————யானும் விளையாடுவோம்.
3. கோவிந்தன் பள்ளிக்கூடம் சென்று——
தங்கையை அழைத்து வருவான்.
4. ———தந்தை மகனை நோக்கி, "——வருவதற்கு இவ்வளவு நேரம் ஏன்?" என்று கேட்டார்.

6. வேற்றுமை

(a) உருபு மட்டும் :

நாராயணன் கண்டான்.
நாராயணனைக் கண்டான்.

இத்தொடர்கள் இரண்டனுள், முதற்சொற்றொடரில் கண்டவன் நாராயணன்; இரண்டாந் தொடரில், கண்டவன் நாராயணன் அல்லன்; அயலானொருவன்: நாராயணன் காணப்பட்டவன் ஆகின்றான். கண்டவனாகிய நாராயணனைக் காணப்பட்டவனாக வேறுபடுத்தியது எது? அஃது ஐ என்னும் உருபே. இவ்வாறு பொருளை வேறுபடுத்தும் அடையாளங்களுக்கு வேற்றுமை உருபு என்பது பெயர்.

குறிப்பு:—நாராயணன் என்பது தனித்து நிற்கும் பொழுது பெயர்ச்சொல் எனப்படும்.

முதல் வேற்றுமை :

“ நாராயணன் ஓடுகிறான்,” என்னும் போது நாராயணன் ஓடுதலாகிய தொழிலைச் செய்பவன் (எழுவாய்) ஆகிறான். ஆதலின், இங்கு ‘நாராயணன்’ என்பது எழுவாய் வேற்றுமை. இதனை முதல் வேற்றுமை என்றும் வழங்கலாம். நாராயணன் என்னும் பெயர்ச்சொல் சிறிதும் திரியாமலே எழுவாய் வேற்றுமையில் நிற்பது காண்க. எழுவாய் வேற்றுமைக்கு உருபு இல்லை.

இரண்டாம் வேற்றுமை :

இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்பது.

(உ-ம்.) கண்ணன் கஞ்சனை வென்றான்.
பூனை எலியைப் பிடிக்கும்.
குடியானவன் நிலத்தை உழுகிறான்.

மூன்றும் வேற்றுமை :

மூன்றும் வேற்றுமையின் உருபு, ஆல், ஒடு, ஓடு, உடன் என்பவை.

(உ-ம்.) தச்சன் அரத்தால் அராவுகிறான்—ஆல்
படையொடு தலைவன் சென்றான்—ஒடு
அவனோடு தம்பி வந்தான்—ஓடு
அரசனுடன் மந்திரி வந்தான்—உடன்

நான்காம் வேற்றுமை:

நான்காம் வேற்றுமையின் உருபு, கு என்பது.
(உ-ம்) அவர் ஏழைகளுக்குப் பொருள் கொடுத்தார்.

ஐந்தாம் வேற்றுமை :

ஐந்தாம் வேற்றுமையின் உருபு, இல், இன் என்பவை.

(உ-ம்) மன்னனில் கற்றோன் சிறப்புடையன்—இல்
கல்வியிற்பெரியவர் கம்பர்—இன்

ஆறும் வேற்றுமை :

ஆறும் வேற்றுமையின் உருபுகள் அது, உடைய என்பவை.

(உ-ம்) இராமனது புத்தகம்—அது
அவனுடைய மோதிரம்—உடைய

ஏழாம் வேற்றுமை:

ஏழாம் வேற்றுமையின் உருபு இல், இடம், கண் என்பவை.

(உ-ம்) ஆசிரியர் நாற்காலியில் •இருக்கின்றார்—இல்
அவன் கோவிந்தனிடம் போனான்—இடம்
அவன் விரலின்கண் மோதிரம் உண்டு—கண்

எட்டாம் வேற்றுமை:

எட்டாம் வேற்றுமைக்குத் தனியாக உருபு இல்லை; தன்னை ஏற்ற பெயர்ச்சொல்லின் ஈறு திரிதலும், கெடுதலும், மிகுதலும், ஈறு கெட்டு ஈற்றயலெழுத்துத் திரிதலும்ஆகிய விகாரங்களைப் பெற்று வரும்.

(உ-ம்) தம்பீ, இங்கே வா—ஈறு திரிதல்
அக்கா, கேள்—ஈறு கெடுதல்
மன்னனே, (மன்னன் + ஏ) கேள்—ஈறு மிகுதல்
இராமா, போ—ஈறு கெட்டு, ஈற்று அயலெழுத்துத்திரிதல்.

(b) தன்மை முன்னிலைப் பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்றல் :

என்னை அடித்தான். **என்னோடு** வந்தான்.

இச்சொற்றொடர்களில் **ஐ, ஒடு** என்னும் உருபுகளை ஏற்ற பெயர் யாது? 'யான்' என்பது. தன்மை ஒருமைப் பெயராகிய யான் என்பது எவ்வாறு திரிந்துள்ளது? 'என்' என்று திரிந்துள்ளது. ஆதலின், என் + ஐ = என்னை, என் + ஒடு = என்னோடு என்றாயின.

தன்மைப் பன்மைப் பெயராகிய 'யாம்' என்பது 'எம்' என்றும், 'நாம்' என்பது 'நம்' என்றும் திரிந்து வேற்றுமையுருபுகளை ஏற்கும்.

(உ - ம்) யாம் + ஐ = **எம்**மை, நாம் + ஐ = **நம்**மை.

நின்னை அடித்தவன் யாவன்?
உன்னோடு வந்தவர் யாவர்?

இச்சொற்றொடர்களில் **ஐ, ஒடு** என்னும் உருபுகளை ஏற்ற பெயர் யாது? '**நீ**' என்பது. '**நீ**' என்னும் முன்னிலை ஒருமைப் பெயர் எப்படித் திரிந்துள்ளது? முதலில் '**நின்**' என்றும், பின்னர் '**உன்**' என்றும் திரிந்துள்ளது. இவற்றுள் '**உன்**' என்பதே வழங்குகிறது.

இவ்வாறே முன்னிலைப் பெயராகிய '**நீர்**' என்பது '**நும்**' என்றும் '**உம்**' என்றும் திரியும். '**உம்**' என்பதே வழக்கிலுள்ளது.

(உ - ம்) நீர் + ஐ = **நும்**மை, **உம்**மை,

'**நீங்கள்**' என்பது '**நுங்கள்**' என்றும் '**உங்கள்**' என்றும் திரியும். இதுவும் முன்னிலைப் பன்மைப் பெயரே. '**உங்கள்**' என்பதே வழக்கிலுள்ளது.

(உ - ம்) நீங்கள் + ஐ = **நுங்களை, உங்களை.**

தன்மை, முன்னிலைப் பெயர்கள் உருபேற்றல்

௨ பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்று வரும் என்பதை அறிந்தோம். கீழ் வருவனவற்றைக் கவனியுங்கள் :

தன்மை			முன்னிலை					
1. யான்	யாம்	நாம்	நீ		நீர்		நீங்கள்	
2. என்னை	எம்மை	நம்மை	உன்னை	நின்னை	உம்மை	நும்மை	உங்களை	நுங்களை
3. என்னால்	எம்மால்	நம்மால்	உன்னால்	நின்னால்	உம்மால்	நும்மால்	உங்களால்	நுங்களால்
4. எனக்கு	எமக்கு	நமக்கு	உனக்கு	நினக்கு	உமக்கு	நுமக்கு	உங்கட்கு	நுங்கட்கு
5. என்னின்	எம்மின்	நம்மின்	உன்னின்	நின்னின்	உம்மின்	நும்மின்	உங்களின்	நுங்களின்
6. எனது	எமது	நமது	உனது	நினது	உமது	நுமது	உங்களது	நுங்களது
7. என்கண்	எங்கண்	நங்கண்	உன்கண்	நின்கண்	உங்கண்	நுங்கண்	உங்களிடம்	நுங்களிடம்
—	—	—	—	—	—	—	—	—

குறிப்பு :—யான், யாம், நாம், நீ, நீர், நீங்கள் என்னும் இவ்விடப் பெயர்கள் விளி வேற்றுமையில் வாரா.

பயிற்சி :

1. 'வேற்றுமை' என்பது யாது?
2. வேற்றுமை எத்தனை வகைப்படும்?
3. எந்த வேற்றுமைகளுக்கு உருபு இல்லை?
4. கீழ் வரும் சொற்களோடு இரண்டாம் வேற்றுமை உருபையும், ஐந்தாம் வேற்றுமை உருபையும் சேர்த்து எழுதுக:—

வீடு, மூக்கு, ஆறு, மரம், குளம்.

5. எட்டாம் வேற்றுமையின் விகாரங்கள் எவை?
6. எட்டாம் வேற்றுமையில் வாராத பெயர்களுள் இரண்டு கூறுக.
7. பின் வரும் பெயர்கள் எட்டாம் வேற்றுமையில் எவ்வாறு வரும்? கிளிகள், மன்னன், நாரை, அண்ணன்.
8. வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்களோடு சேர்ந்திருக்கும் உருபுகளைப் பிரித்து எழுதி, ஒவ்வொன்றும் எந்தெந்த வேற்றுமையைச் சேர்ந்தது என்பதையும் குறிப்பிடுக:—

(அ) அகஸ்தியர் கடலைக் குடித்தார்.

(ஆ) நான் என் தகப்பனாரோடு காசி யாத்திரை சென்றேன்.

(இ) கல்வியிற்பெரியவர் கம்பர்.

(ஈ) பாரி, முல்லைக்குத் தம் தேரைக் கொடுத்தார்.

(உ) கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தார்.

(ஊ) நோயாளிக்கு மருந்து கொடு.

(எ) தட்டில் உட்கார்ந்திருக்கும் ஈக்களை ஓட்டு.

9. கோட்டில் ஏற்ற வேற்றுமையுருபைச் சேர்த்தெழுதுக:—

(அ) எல்லாப் பொருள்களும் கடவுள்——படைக்கப் பட்டவை.

(ஆ) நீ சென்னை——இந்த ஊர்——எப்போது வந்தாய்?

(இ) செல்வந்தன் ஏழை——பொருளைக் கொடுத்தான்.

(ஈ) பால்——குடம்——செம்பில் ஊற்று.

(உ) உன் வீடு——என்ன விலை——விற்றாய்?

(ஊ) புலி——வாள்——வெட்டினான்.

(எ) அவன் ஆறு——குதித்து மோதிரம்——எடுத்தான்.

(ஏ) நாம் சாண் வயிறு——பாடு படுகிறோம்.

(ஐ) மொத்த வினாக்கள்——இரண்டை விட்டு விட்டேன்.

பெயர்ச்சொல்லுக்கு இலக்கணம் கூறும் முறை :

பட்டேல் சென்னைக்கு வந்தார்; தலைவர்களைக் கண்டு பேசினார்.

பட்டேல்: பொருட்பெயர், உயர்திணை, ஆண் பால், ஒருமை, படர்க்கை, முதல் வேற்றுமை, 'வந்தார்' என்னும் பயனிலைக்கு எழுவாயாய் வந்தது.

சென்னைக்கு : இடப்பெயர், அஃறிணை, பொதுப் பால், ஒருமை, படர்க்கை, நான்காம் வேற்றுமை; 'வந்தார்' என்னும் வினைச்சொல்லைக்கொண்டு முடிந்தது.

தலைவர்களை : பொருட்பெயர், உயர்திணை, பலர் பால், பன்மை, படர்க்கை, இரண்டாம் வேற்றுமை : 'கண்டு' என்னும் வினையெச்சத்துக்குச் செயப்படு பொருளாய் வந்தது.

குறிப்பு :—பெயர்ச்சொல்லுக்கு இலக்கணம் கூறுங்கால், இன்ன பெயர், திணை, பால், எண், இடம், வேற்றுமை என்று சொல்லி, முடிபும் கூற வேண்டும்.

பயிற்சி :

அடியிற்காணும் சொற்றொடர்களில் உள்ள பெயர்ச் சொற்களுக்குச் சொல்லிலக்கணம் கூறுக :—

1. நான் பள்ளிக்கூடம் சென்றேன்.
2. உழவன் நிலத்தை உழுகிறான்.
3. குற்றாலத்தில் நீர்வீழ்ச்சி இருக்கிறது.
4. அவன் குதிரையின் இறங்கினான்.
5. இராமன் இராவணனோடு போர் செய்தான்.
6. யானைகள் காடுகளில் திரியும்.
7. பாண்டியன் ஆராய்ந்து பாராமல் கோவலனைக் கொலை செய்வித்தான்.
8. சீதை இராமனோடு காட்டுக்குப் போனாள்.

III. வினைச்சொல்

கீழ் வரும் தொடர்களைப் படியுங்கள் :—

1. கண்ணன் ஓடுகிறுன்.
2. சீதை பாடுகிறுள்.
3. பறவை பறக்கும்.

கண்ணன் என்ன செய்கிறுன்? ஓடுகிறுன். இச் சொல், கண்ணனது ஓடும் செயலை (தொழிலை)க் குறிப்பது.

சீதை என்ன செய்கிறுள்? பாடுகிறுள். இச் சொல், சீதை பாடுதலாகிய செயலைக் குறிப்பது.

பறவை என்ன செய்யும்? பறக்கும். இச் சொல், பறவையின் செயலைக் குறிப்பது.

'ஓடுகிறுன், பாடுகிறுள், பறக்கும்' என்பன ஒவ்வொரு செயலையுணர்த்துவதால், வினைச்சொல் எனப்படும்.

பயிற்சி:

கீழ் வரும் தொடர்களில் வினைச் சொல்லைக் குறிப்பிடுக:—

அரசன் வந்தான், நாய் வந்தது, மரம் வளர்ந்தது, மகன் எழுந்தான், பழம் வீழ்ந்தது, ஆற்றில் வெள்ளம் பெருகுகிறது.

1. காலம்

சங்கரன் படித்தான்.
சங்கரன் படிக்கிறுன்.
சங்கரன் படிப்பான்.

மேலே குறித்த தொடர்களுள் 'படித்தான்' என்னும் வினை, முன்பு செய்த செயலைக் குறிக்கிறது; ஆதலால், இறந்த கால வினை.

'படிக்கிருன்' என்னும் வினை இப்போது செய்கிற செயலைக் குறிக்கிறது; ஆதலால், நிகழ்கால வினை.

'படிப்பான்' என்னும் வினை இனிப்படிக்கப் போகும் செயலைக் குறிக்கும்; ஆதலால், எதிர்கால வினை.

வினைச்சொல் என்பது தொழிலை விளக்கிக் காலங்காட்டுவது.

முக்கால வினை முற்றுக்கள்

இறந்த காலம்	நிகழ்காலம்	எதிர் காலம்
அழுதேன்	அழுகிறேன்	அழுவேன்
ஆடினுய்	ஆடுகிருய்	ஆடுவாய்
இருந்தான்	இருக்கிருன்	இருப்பான்
உண்டேன்	உண்கிறேன்	உண்பேன்
எழுதினுன்	எழுதுகின்ருன்	எழுதுவான்
ஓடினுன்	ஓடுகின்ருன்	ஓடுவான்
கற்றேன்	கற்கிறேன்	கற்பேன்
செய்தேன்	செய்கிறேன்	செய்வேன்
தொழுதாய்	தொழுகின்ருய்	தொழுவாய்
நின்றேன்	நிற்கிறேன்	நிற்பேன்
பாடினீர்	பாடுகிறீர்	பாடுவீர்
முயன்ருன்	முயல்கிருன்	முயல்வான்
வாங்கினுய்	வாங்குகிருய்	வாங்குவாய்

பயிற்சி:

கீழ் வரும் தொடர்களுள் வந்துள்ள வினைச்சொற்களின் காலத்தைக் குறிப்பிடுக:—

1. உன் எழுதுகோல் பூமியில் கிடக்கிறது.
2. இவ்வாண்டு நிலம் விளையும்.

3. அவன் துணி நெய்கிறான்.

4. நான் என்னால் முடிந்ததைச் செய்கிறேன்.

5. சூரியன் ஒளி கொடுக்கிறான்.

6. அவன் என்னைத் திட்டுவான்.

2. வினைமுற்று

தன்மை வினைமுற்று :

மேலே நாம் மூவிடப் பெயர்களைப்பற்றிப் படித்தோம்; அவற்றுள் நான், யான், நாம், யாம் என்பன தன்மைப் பெயர்கள்; இவற்றைத் தொடர்களுள் அமைத்துப் பார்ப்போம் :

தன்மைப் பெயர்	இறந்த காலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
ஒருமை ; நான் யான்	படித்தேன்	படிக்கிறேன்	படிப்பேன்
பன்மை : நாம் யாம் யாங்கள்	படித்தோம்	படிக்கிறோம்	படிப்போம்

'படித்தேன்' முதலிய வினைகள் தன்மைப் பெயர்களின் செயல்களை உணர்த்துவன ; ஆதலின், இவை தன்மை வினைமுற்றுக்களென வழங்கும்.

தன்மைப் பெயர்களின் செயல்களையுணர்த்துவன தன்மை வினைமுற்றுக்களாகும்.

முன்னிலை வினைமுற்று :

'நீ, நீர், நீங்கள்' என்பன முன்னிலைப் பெயர்கள் அல்லவா ?

முன்னிலைப் பெயர்கள் ஒருமை :	இறந்த காலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
நீ	படித்தாய்	படிக்கிறாய்	படிப்பாய்
பன்மை : நீர், நீங்கள்	படித்தீர்	படிக்கிறீர்	படிப்பீர்

'படித்தாய்' முதலிய வினைகள் முன்னிலைப் பெயர்களின் செயல்களையுணர்த்துவன ; ஆதலால், இவை **முன்னிலை வினைமுற்றுக்கள்** என வழங்கும்.

முன்னிலைப் பெயரின் செயல்களையுணர்த்துவன முன்னிலை வினைமுற்றுக்களாம்.

படர்க்கை வினைமுற்று:

அவன், அவள், அவர், அது, அவை என்பன படர்க்கைப் பெயர்கள் ஆகும்.

உயர்திணை :

படர்க்கைப் பெயர்கள்	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர்காலம்
ஒருமை: அவன் அவள்	படித்தான் படித்தாள்	படிக்கிறான் படிக்கிறாள்	படிப்பான் படிப்பாள்
பன்மை : அவர்	படித்தார்	படிக்கிறார்	படிப்பார்

அஃறிணை :

படர்க்கைப் பெயர்கள்	இறந்த காலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
ஒருமை : அது	ஓடியது	ஓடுகின்றது	ஓடும்
பன்மை : அவை	ஓடின	ஓடுகின்றன	ஓடும்

'படித்தான்' முதலிய வினைகள் படர்க்கைப் பெயர்களின் செயல்களைத் தெரிவிப்பதால், **படர்க்கை வினைமுற்றுக்கள்** என வழங்கும்.

படர்க்கைப் பெயர்களின் செயல்களைத் தெரிவிக்கும் வினைகள் படர்க்கை வினைமுற்றுக்களாம்.

பயிற்சி :

பின்வரும் தொடர்களில் உள்ள தன்மை, முன்னிலை, படர்க்கை வினைமுற்றுக்களை எடுத்துக் காட்டுக :—

1. நான் சென்றேன்.
2. நீ சென்றாய்.
3. அவன் சென்றான்.
4. தச்சன் நாற்காலி செய்தான்.
5. மரம் அசையும்.
6. நீ படித்தாய்.
7. அவன் ஓடினான்.
8. பிள்ளைகள் விளையாடுகிறார்கள்.

3. எச்சம்

செயல் முடிவு பெறாததை உணர்த்தும் வினைகள் 'எச்சவினை' என்று வழங்கப்படும்.

ஓடின குதிரை	ஓடி வந்தான்.
செய்யும் செயல்	செய்து முடித்தான்.
படித்த பாடம்	படித்து உணர்ந்தான்.

முதல் வரிசையில் உள்ள எச்சவினைகள், ‘குதிரை, செயல், பாடம்’ என்ற பெயர்களைக் கொண்டு முடிவன ; ஆதலால், பெயரெச்சங்கள் எனப் படும்.

இரண்டாம் வரிசையில் உள்ள எச்சவினைகள், ‘வந்தான், முடித்தான், உணர்ந்தான்’ என்ற வினைகளைக் கொண்டு முடிவன ; ஆதலால், வினையெச்சங்கள் எனப்படும்.

எச்சவினை, ‘பெயரெச்சம், வினையெச்சம்’ என இரு வகைப்படும். பெயரைக்கொண்டு முடிவன பெயரெச்சங்கள் ; வினையைக்கொண்டு முடிவன வினையெச்சங்கள்.

வினைச்சொல்லுக்கு இலக்கணம் கூறும் முறை :

நடராசன் நூலைப் படித்தான்.

‘படித்தான்’ வினைமுற்று, உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, இறந்த காலம்; நடராசன் என் னும் எழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது.

மரம் வளர்ந்தது.

‘வளர்ந்தது’ வினைமுற்று, அஃறிணை, ஒன்றன் பால், ஒருமை, படர்க்கை, இறந்த காலம்; மரம் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் வந்தது.

பயிற்சி :

பின் வரும் தொடர்களில் உள்ள வினைமுற்றுக் களுக்குச் சொல்லிலக்கணம் எழுதுக :—

1. குதிரை ஓடிற்று.
2. நல்லவர் ஒழுக்கத்திற்சிறந்து விளங்குவர்.
3. தீயவர் ஒழுக்கம் கெட்டிருப்பர்.
4. பூக்களில் வண்டுகள் மொய்க்கின்றன.

IV. எழுத்து

எழுத்து இன்னது என்பது:

சொல் தோன்றுவதற்கு முதற்காரணமாகிய ஒலியே எழுத்து ஆகும். அவ்வொலிகளைத் தெரிந்து கொள்வதற்கு அடையாளமாக எழுதப்படும் உரு வங்களுக்கு எழுத்தென்பது பெயர்.

ஈ, நீ—ஓரெழுத்தால் ஆகிய சொல்.
ஆ டை—இரண்டெழுத்தால் ,, ,,
உ ல கு—மூன்று எழுத்தால் ,, ,,
கு ன் ற ம்—நான்கு எழுத்தால் ,, ,,

எழுத்துக்கள் தனித்தாவது, இரண்டு முதலி யவை தொடர்ந்தாவது பொருளைத்தரின், சொல் லாகும்.

நாம் பிறர் சொல்லுவதைக் கேட்கிறோம்; பிறர் படித்தறிய எழுதுகிறோம்; பிறர் கேட்கப் பேசு கிறோம். ஆதலால், எழுத்துக்கு வரி வடிவம், ஒலி வடி வம் என இரண்டு வடிவங்கள் உண்டு.

1. எழுத்துக்களின் வகை

உயிர் எழுத்து:

1.	அடை	5,	உடை	9.	ஐயம்
2.	ஆடை	6.	ஊர்	10.	ஒன்று
3.	இடை	7.	எடை	11.	ஓடு
4.	ஈடு	8.	ஏர்	12.	ஔவை

இச்சொற்களின் முதல் எழுத்துக்களை உச் சரித்துப் பாருங்கள். இவை வேறு எழுத்துக் களின் உதவியில்லாமல் தாமே ஒலிப்பது விளங்கும். இவையே உயிரெழுத்து என வழங்கும்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ : இவை பிற எழுத்துக்களின் உதவியில்லாமல் தாமே ஒலிக்க வல்லவை. ஆதலின், உயிரெழுத்துக்கள் என வழங்குவனவாம்.

மெய்யெழுத்து :

1.	நாக்கு	2.	நுங்கு
3.	அச்சன்	4.	நஞ்சு
5.	தட்டான்	6.	கிண்ணம்
7.	அத்தை	8.	தந்தை
9.	கப்பம்	10.	பம்பரம்
11.	செய்தாள்	12.	சர்க்கரை
13.	வெல்லம்	14.	வவ்வினன்
15.	வாழ்வு	16.	கள்ளி
17.	காற்று	18.	மென்று

இங்குள்ள சொற்களில் வந்துள்ள தடித்த எழுத்துக்களை உச்சரித்துப் பாருங்கள். அவை க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என ஒலிக்கும். தனித்து ஒலிக்காத இவைகளை 'மெய்யெழுத்து' என்பர்.

உயிர்மெய் எழுத்து:

கா, கூ, கை, சீ, தா, தீ, தூ, தே, தை, நா, நீ, நை, நொ, பா, பூ, பே, பை, மா, மீ, மை, வா என்பனவற்றை உச்சரித்துப் பாருங்கள்; இவை க் + ஆ; க் + ஊ; க் + ஐ; ச் + ஈ; த் + ஆ; த் + ஈ; த் + ஊ; த் + ஏ; த் + ஐ; ந் + ஆ; ந் + ஈ; ந் + ஐ; ந் + ஒ; ப் + ஆ; ப் + ஊ; ப் + ஏ; ப் + ஐ; ம் + ஆ; ம் + ஈ; ம் + ஐ; வ் + ஆ;—என்னும் ஒலிகளால் ஆகி இருப்பதைப் பாருங்கள்; இவை உயிரும் மெய்யும் கூடிப் பிறப்பதனால், உயிர்மெய்யெழுத்துக்கள் என வழங்கும்.

மெய்யெழுத்துக்கள் பதினெட்டு; உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு; ஒவ்வொரு மெய்யெழுத்தோடும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களையும் தனித்தனி கூட்டினால், இருநூற்றுப் பதினாறு (18×12=216) உயிர்மெய்யெழுத்துக்களாகும்.

ஆய்த எழுத்து :

'இஃது, எஃகு' என்னும் இச்சொற்களின் இடையில் வந்துள்ள எழுத்தை உச்சரித்துப் பாருங்கள்; இந்த ஒலியுள்ள எழுத்துக்கு 'ஆய்த எழுத்து' எனப் பெயர் வழங்கும். இது, குற்றெழுத்துக்குப் பின்னும் உயிரோடு சேர்ந்த வல்லினமெய்யெழுத்துக்கு முன்னும் சொல்லின் நடுவில் மூன்று புள்ளி வடிவாக எழுதப் பெறும்.

(உ-ம்.) இஃது : இ, குறில்; து, உயிரோடு சேர்ந்த வல்லெழுத்து.

எஃகு : எ, ,, கு, ,,

தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்கள் நான்கு வகைப்படும். அவை உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம் என்பவை.

2. சில எழுத்துக்களின் உச்சரிப்பு :

ர, ற; ல, ள, ழ; ந, ன, ண:

ர

மேல் வாயை நுனிநாப் பொருந்த 'ர' பிறக்கும்.

(உ-ம்.) மரம், அரவு, மதுரை.

ற

மேல் வாயை நாவின் நுனி மிகப் பொருந்தினால் 'ற' பிறக்கும்.

(உ-ம்.) மறம், அறிவு, நன்று, கறை, **விற்று.**



ல

மேல் வரிசைப் பல்லின் முதலை நாவின் விளிம்பு வீங்கித் தடவ லகரம் பிறக்கும்.

(உ-ம்) செல், நிலா, நலம், காலை.

ள

மேல் வாயை நாவிளிம்பு வீங்கித் தடவ ளகரம் பிறக்கும்.

(உ-ம்.) கள்ளம், துள்ளு, கள்ளி, நீளம், காளை, குள்ளன், குளம்.



ழ

மேல்வாயை நுனிநாத் தடவ ழகரம் பிறக்கும்.

(உ-ம்.) விழுது, பழம், கிழவர், விழி.

மேல் வரிசைப் பல்லடியை நா நுனி பொருந்த நகரம் பிறக்கும்.

(உ-ம்) **நான்கு, நூறு, நேரம், நோக்கம்,** பந்து, வந்து, தந்தான்.

ந

ன

மேல் வாயை நாவின் நுனி பொருந்தினால், னகரம் பிறக்கும்.

(உ-ம்.) என், முன், மென்று, மன்னன், கன்னம்.

நுனிநா, மேல் வாய் நுனியைப் பொருந்த ணகரம் பிறக்கும்.

(உ-ம்) கிண்ணம், எண்ணம், திண்ணன், கணம், பண்ணை.

ண

3. உயிரெழுத்து வகை

குறில், நெடில்

கீழேயுள்ள உயிரெழுத்துக்களை உச்சரித்துப் பார்: அ, இ, உ, எ, ஒ குறுகிய ஓசையுள்ளவை. இவை குற்றெழுத்துக்கள் எனவும் குறில் எனவும் வழங்கும்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ நீண்ட ஓசையுள்ளவை. இவை நெட்டெழுத்துக்கள் எனவும் நெடில் எனவும் வழங்கும்.

சுட்டெழுத்து :

அவன், இவன், உவன்; அவ்வீடு, இக்குதிரை, உம்பருலகம் என்பனவற்றுள் அ, இ, உ ஆகிய மூன்று எழுத்துக்களும் சொல்லின் முதலில்நின்று ஒரு மனிதனையோ, பொருளையோ குறிப்பிடுவதால், 'சுட்டெழுத்துக்கள்' எனப்படும்.

அ, தொலைவில் உள்ள பொருளையும், இ, அருகில் உள்ள பொருளையும், உ, இடையிலோ மேலோ உள்ள பொருளையும் சுட்டிக்காட்டும். உகரச் சுட்டுச் செய்யுளில் மட்டும் வரும்.

அ, இ, உ என்பவை அந்த, இந்த, உந்த எனத் திரிந்தும் வரும்.

(உ-ம்) அந்த வீடு, இந்த ஊர், உந்த உலகம்.

வினவெழுத்து

ஆ, எ, ஏ, ஓ, யா—என்னும் இவ்வைந்தும் வினப் பொருளைக் காட்ட வரின், வினவெழுத்துக்களாம். இவற்றுள் எ, யா மொழிக்கு முதலிலும், ஆ, ஓ சொல்லுக்கு இறுதியிலும் நின்று வினப்பொருளைத் தரும்.

'எந்த ஊர்?' என்பதிற்போல எ என்னும் வினு எழுத்து எந்த எனத் திரிந்து வருவதும் உண்டு.

(உ-ம்,) எவன்? அவனு? } இவை வினுப்
ஏது? அவனே? } பொருளில் வந்
யாது? அவனே? } தன.

எவன் என்னும் சொல்லில் வினுப்பொருளை உணர்த்தும் எழுத்து எ என்பது. மற்றச் சொற்களிலுள்ள வினு எழுத்துக்களைக் குறிப்பிடுக.

குறிப்பு :—எழில், யானை, ஏணி, பலா, எங்கோ என்பனவற்றுள் எ, யா, ஏ, ஆ, ஓ என்பவை வினுப்பொருளைக் காட்டாமையால் வினு எழுத்துக்கள் அல்ல.

4. மெய்யெழுத்து வகை

1. வல்லினம்	2. மெல்லினம்	3. இடையினம்
க்	ங்	ய்
ச்	ஞ்	ர்
ட்	ண்	ல்
த்	ந்	வ்
ப்	ம்	ழ்
ற்	ன்	ள்

இவைகளைக் கூர்ந்து உச்சரித்துப் பாருங்கள்: முதல் வரிசையில் உள்ள ஆறு எழுத்துக்களும் வலிய ஒலி உடையவை; ஆதலின், வல்லினம் அல்லது வலி என வழங்கும்.

இரண்டாம் வரிசையில் உள்ளவை மெலிய ஒலி உடையவை; ஆதலின், மெல்லினம் அல்லது மெலி எனப்படும்.

மூன்றுவது வரிசையில் உள்ள எழுத்துக்கள் இடைத்தரமாக ஒலிப்பன; ஆதலின், இடையினம் அல்லது இடை என வழங்கும்.

ஆகவே, மெய்யெழுத்துக்கள் மூன்று வகைப்படும்.

5. உயிர்மெய்யெழுத்து வகை.

உயிர்மெய்க்குறில் :

க்+அ=க க்+இ=கி க்+உ=கு க்+எ=கெ க்+ஒ=கொ	மெய்யெழுத்தும் உயிர்க் குற்றெழுத்தும் கூடுவதால் பிறக்கும் எழுத்துக்கள் **உயிர்மெய்க் குறில்களாம்.** உயிர்க் குறில் ஐந்து; ஆதலால், உயிர்மெய்க் குறில் (*18×5=90*) தொண்ணூறு ஆகும்.

உயிர்மெய் நெடில் :

ப்+ஆ=பா ப்+ஈ=பீ ப்+ஊ=பூ ப்+ஏ=பே ப்+ஐ=பை ப்+ஓ=போ ப்+ஔ=பௌ	மெய்யெழுத்தும் உயிர் நெடிலும் கூடுவதால், பிறக்கும் எழுத்துக்கள் உயிர்மெய் நெடில்களாகும். உயிர் **நெட்டெழுத்து** ஏழு; ஆதலால், உயிர்மெய் நெடில் (*18×7=126*) நூற்றிருபத்தாறு ஆகும்.

க், ச், ட், த், ப், ற் என்னும் வல்லினமெய் எழுத்துக்களுடன் பன்னிரண்டு உயிர்களையும் தனித்தனி கூட்டுவதால், உயிர்மெய் வல்லெழுத்துக்கள் (12×6=72) எழுபத்திரண்டு ஆகும்.

ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் மெல்லின மெய் எழுத்துக்களுடன் பன்னிரண்டு உயிர்களையும் தனித்தனி கூட்டுவதால் உயிர்மெய் மெல்லெழுத்துக்கள் (12×6=72) எழுபத்திரண்டு ஆகும்.

ய், ர், ல், வ், ழ், ள் என்னும் இடையின மெய்யெழுத்துக்களுடன் பன்னிரண்டு உயிர்களையும் தனித்தனி கூட்டுவதால், உயிர்மெய் இடையின எழுத்துக்கள் (12×6=72) எழுபத்திரண்டு ஆகும்.

6. சொற்களில் ர, ற; ல, ள, ழ; ன, ண எழுத்துக்கள் வரும்போது பொருள் வேறுபடுதல்:

ர, ற வரும்போது உண்டாகும் பொருள் வேறுபாடு:

அரம் - இரும்பைத் தேய்க்கும் கருவி.
அறம் - தருமம்
அரி - திருமால், சிங்கம்
அறி - தெரிந்துகொள்
அருந்து - உண்
அறுந்து - அறுபட்டு
அரை - பாதி
அறை - வீட்டின் உறுப்பு
இரத்தல் - பிச்சை கேட்டல்
இறத்தல் - உயிர் நீங்குதல்
இரங்கு - மனம் உருகு
இறங்கு - கீழ் இழி
இரை - விலங்கின் தீனி, ஒலி செய்
இறை - வரி, அரசன்
உரை - சொல்
உறை - வாழ், பை
எரி - நெருப்பு
எறி - வீசு
ஏரி - நீர் நிலை
ஏறி - மேல் ஏறி
கருத்து - எண்ணம்
கறுத்து - கோபித்து
கருப்பு - பஞ்சம்
கறுப்பு - கருநிறம்
கரை - நீர் நிலையின் ஓரம்
கறை - குற்றம்
குரங்கு - வானரம், மான்
குறங்கு - தொடை
கூரிய - கூர்மையான
கூறிய - சொல்லிய
கூரை - வீட்டின் மேற்புறம்
கூறை - புத்தாடை
திரை - அலை
திறை - கப்பம்
நரை - வெண்மை
நறை - தேன்
பரவை - கடல்
பறவை - பட்சி
பரி - குதிரை
பறி - பிடுங்கு
மரம் - விருக்ஷம்
மறம் - வீரம், பாவம்
மரை - ஒரு ஜாதி மான்
மறை - வேதம்
புரம் - ஊர்
புறம் - வெளி

சொல்லில் ல, ள, ழ வரும்போது உண்டாகும் பொருள் வேறுபாடு :

இலை - தழை
இளை - மெலி
இழை - பருத்தி நூல்
உலை - அடுப்பு
உளை - வருந்து
உழை - மான்
உலவு - சஞ்சரி
உளவு - வேவு
உழவு - பயிர்த்தொழில்
ஒலி - ஓசை
ஒளி - வெளிச்சம்
ஒழி - நீங்கு
கலம் - கப்பல்
களம் - போர் செய்யுமிடம்
கலை - பிரிந்து போ
களை - நீக்கு
கழை - கரும்பு
கிளவி - சொல்
கிழவி - முதியவள்
குலம் - கூட்டம்
குளம் - நீர் நிலை
குலவி - மகிழ்ந்து
குளவி - வண்டு
குழவி - குழந்தை
குளம்பு - விலங்கின் பாத நகம்
குழம்பு - சேறு
தளை - கட்டு
தழை - இலை
புளுகு - பொய்
புழுகு - புனுகு
விலை - கிரயம்
விளை - செய்
விழை - விரும்பு

சொல்லில் ன, ண வரும்போது பொருள் வேறுபடுதல் :

அன்னம் - ஒரு பறவை
அண்ணம் - மேல் வாய்
ஆனை - யானை
ஆணை - கட்டளை
ஊன் - இறைச்சி
ஊண் - உணவு
கனம் - பளு
கணம் - கூட்டம்
கனை - கர்ச்சனை செய்
கணை - அம்பு
கானம் - காடு
காணம் - கொள்ளு
நானம் - கஸ்தூரி
நாணம் - வெட்கம்
பனை - பனமரம்
பணை - மூங்கில்
மனம் - உள்ளம்
மணம் - வாசனை
மனை - வீடு
மணை - பீடம்

பயிற்சி:

I. கீழ் வரும் சொற்றொடர்களைப் படித்துப் பொருள் வேறுபாட்டை உணர்க:—

1. இளைஞன் மரக்கிளையிலிருந்து இறங்கினான். பெரியவர் பிறர் துயரம் கண்டு மனம் இரங்குவர்.

2. பறவை வானில் பறக்கும். கப்பல் பரவையில் செல்லும்.

3. விளங்காயைப் பெறக் கல் எறிந்தான். அடுப்பு நன்றாக எரிந்தது.

4. கடற்கரையில் படகுகள் உண்டு. உடையில் கறை பட்டுவிட்டது.

5. தந்தை கூறிய சொல்லை மறந்தேன். தம்பி கூரிய அறிவுள்ளவன்.

6. சொத்தில் அரைப் பங்கு கிடைத்தது. இந்த அறையில் பலர் உட்காரலாம்.

7. ஏரியில் நீர் நிரம்பியது. இராமன் மரத்தின் மேல் ஏறினான்.

8. சிவன் வாகனம் நரை எருது. மலரில் நறை உண்டு.

9. இரட்டைக்கிளவி என்பது இரண்டாகவே வருஞ் சொல். கிழவி ஒரு வேலையையும் செய்யாள்.

10. கடல் ஒழிவின்றி ஒலிப்பது. அவன் முக ஒளி கண்ணையும் கருத்தையும் கவர்வது.

II. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைக்க:—

1. சி. வி. இராமன்——அறிவுள்ளவர் (கூறிய, கூரிய)
2. சந்திரனில்——காணப்படுகிறது(கரை, கறை)
3. ஏழைகளிடம் மனம்——(இறங்கு, இரங்கு)
4. ——கூட்டினுட்சென்றது. (குழவி, குளவி)
5. ——என்னைக் கொட்டிவிட்டது. (குழவி, குளவி.)

6. ——அணு கொடு. (அறை, அரை)
7. ——என்நாளும் இழிவு. (இறத்தல், இரத்தல்.)
8. விளக்கு ஒளியுடன்—(எரிகிறது, எறிகிறது)

வினுக்கள் :

1. எழுத்தாவது யாது ?
2. உயிரெழுத்து எத்தனை ?
3. மெய்யெழுத்து எத்தனை ?
4. குறில் எத்தனை ?
5. நெடில் எத்தனை ?
6. ஆடு, இரும்பு, ஈ, உலகம், ஓசை இவற்றில் உள்ள குற்றெழுத்துக்களையும் நெட்டெழுத்துக்களையும் தனித்தனி எடுத்து எழுதுக.
7. உயிர்மெய்யெழுத்துக்கள் எத்தனை ?
8. வல்லினம், மெல்லினம், இடையினம் எவை எவை?
9. சுக்கு, பட்டு, செய்து, பந்து, மார்பு, வண்டு— இவற்றுள் வலி மெலி இடை எழுத்துக்கள் எவ்வெவை ?
10. ஆய்த எழுத்தாவது யாது ?
11. அம்பு, இரும்பு, உடல் என்பவற்றில் உள்ள அ, இ, உ என்பன என்ன எழுத்துக்கள் ? ஏன் ?
12. சுட்டு எழுத்துக்களும் 'எ' என்னும் வினு எழுத்தும் எவ்வெவ்வாறு திரிந்தும் வரும் ?
13. மொழிக்கு முதலிலும் இறுதியிலும் தனித்தனி யாக வரும் வினுவெழுத்துக்கள் எவ்வெவை ?
14. i பொன்னன் வந்தானு ?

ii நீ எவருடன் நேற்றுப் பள்ளிக்கூடம் போனுய் ?

இவ்வாக்கியங்களில் வந்துள்ள வினுவெழுத்துக் களைத் தனித்தனியே எடுத்து எழுதுக. இவற்றுள் மொழி ஈற்றில் வந்துள்ளது எது ? முதலில் வந்துள்ளது எது ?

IV. புணர்ச்சி

மாடு + சென்றது = மாடு சென்றது.
வாழை + காய் = வாழை(க்)காய்.
பணம் + கொடுத்தான் = பண(ங்)கொடுத்தான்.
மரம் + வேர் = மரவேர்

ஒரு சொல் வேறு சொல்லோடு பொருந்தும் போது முதற்சொல்லின் இறுதி எழுத்து வருஞ் சொல்லின் முதலெழுத்தோடு பொருந்துவதே 'புணர்ச்சி' என வழங்கும்.

குறிப்பு: முதலில் உள்ள சொல் 'நிலைமொழி' என்றும் அதனுடன் வந்து சேரும் சொல் 'வருமொழி' என்றும் கூறப்படும்.

மேலே காட்டிய தொடர்களுள் முதல் தொடரில் நிலைமொழியும் வருமொழியும் மாறுதல் எவையும் இன்றிப் பொருந்தின. அஃது 'இயல்பு புணர்ச்சி' எனப்படும். மற்றத் தொடர்களுள் ஓர் எழுத்துத் தோன்றியும், ஓர் எழுத்துத் திரிந்தும், ஓர் எழுத்துக் கெட்டும் வருதலின், அவை 'விகாரப் புணர்ச்சிகள்' எனப்படும்.

(a) 1. சுட்டின் முன்னும் எகர வினுவின் முன்னும் மிகுதலும் தோன்றலும்:

அ + அரசு = அவ்வரசு	அ + யானை = அவ்யானை
இ + ஆடு = இவ்வாடு	இ + யானை = இவ்யானை
உ + அணி = உவ்வணி	உ + யானை = உவ்யானை
எ + அணி = எவ்வணி?	எ + காடு = எக்காடு?
அ + நாடு = அந்நாடு	எ + சேவல் = எச்சேவல்?
இ + கணம் = இக்கணம்	எ + மரம் = எம்மரம்?

இத்தொடர்களால் விளங்குவது என்ன? அ, இ, உ என்னும் சுட்டின் முன்னும், எகர வினா முன்னும் உயிரெழுத்துக்களும் யகரமும் வந்தால், இடையில் வ் தோன்றும்; யகரம் ஒழிந்த மெய்கள் வந்தால், வந்த அம்மெய்யெழுத்துக்களே மிகும் என்பதே.

2. இரண்டாம், நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம்:

செயலை + செய்தான் = செயலை(ச்)செய்தான்.

பாடத்தை + படித்தான் = பாடத்தை(ப்)படித்தான்.

மயிலாப்பூருக்கு + சென்றான் = மயிலாப்பூருக்கு (ச்) சென்றான்.

முருகனுக்கு + தந்தான் = முருகனுக்கு(த்)தந்தான்.

மேலுள்ள தொடர்களுள் நிலைமொழியின் இறுதியில் 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமையுருபும் 'கு' என்னும் நான்காம் வேற்றுமையுருபும் வெளிப்பட்டு வந்துள்ளன. இவற்றின் முன் வந்த வருமொழியின் முதலில் உள்ள வல்லினம் மிக்கன.

3. அந்த, இந்த, எந்த; அப்படி, இப்படி, எப்படி என்பனவற்றின் முன் வல்லினம் மிகல்:

அந்த + குதிரை = அந்தக் குதிரை

இந்த + குளம் = இந்தக் குளம்

எந்த + படம் = எந்தப் படம்?

அப்படி + செய்தான் = அப்படிச் செய்தான்.

இப்படி + பார் = இப்படிப் பார்.

எப்படி + பாடினரோ = எப்படிப் பாடினரோ

வல்லினம் மிகும் முக்கியமான இடங்கள்:

1. சுட்டு, வினா இவற்றின் முன்
2. இரண்டாம், நான்காம் வேற்றுமைகளின் விரியில்
3. அந்த, இந்த, எந்த, அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின் முன் வல்லினம் மிகும்.

3. உயிர் முன் உயிர் வந்து புணருதல்:

(b) உடம்படுமெய் :

இ, ஈ, ஐம்முன் உயிர்:

வழி + எது = வழியெது ?
தீ + அணைந்தது = தீயணைந்தது.
பனை + ஓலை = பனையோலை

இத்தொடர்களால் நிலைமொழியீற்றில் இ, ஈ, ஐ என்னும் உயிருள் ஒன்றிருக்க, வருமொழி முதலில் உயிர் எழுத்து வருமானால், இடையே, 'ய்' என்னும் மெய் தோன்றும் என்பதை அறியலாம்.

இவ்வாறு இரண்டு உயிர் ஒன்றோடொன்று பொருந்த உடம்பாக அடுத்து வரும் எழுத்து (ய்) உடம்படு மெய் எனப்படும்.

மற்ற உயிர்முன் உயிர் :

பல + அணி = பல = (வ்) + அணி = பலவணி
பலா + இலை = பலா + (வ்) + இலை = பலாவிலை
திரு + அடி = திரு + (வ்) + அடி = திருவடி
பூ + ஆடை = பூ + (வ்) + ஆடை = பூவாடை
கோ + இல் = கோ + (வ்) + இல் = கோவில்
ஔ + எழுது = ஔ + (வ்) + எழுது = ஔவெழுது.

இத்தொடர்களால் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் உயிர்களுள் ஒன்று நிலைமொழியிறுதியிலே நிற்க, வருமொழி முதலில் வரும் உயிரெழுத்தை அதனுடன் பொருந்த வைக்க, 'வ்' என்னும் மெய் உடம்படு மெய்யாகத் தோன்றும் என்பது தெரிகிறது.

ஏ முன் உயிர் :

அவனே + அடித்தான் = அவனேயடித்தான்.
சே + அடி = சேவடி

'ஏ' என்னும் உயிரெழுத்து இறுதியில் உள்ள நிலைமொழி, உயிர் முதல் வருமொழியோடு சேரும் பொழுது 'ய், வ்' என்னும் உடம்படு மெய்களுள் ஒன்று தோன்றும்.

4. மெய்யீற்றின் முன் உயிர் புணர்தல் :

மேல் + ஆடை = மேலாடை
பலன் + இது = பலனிது
அவன் + எங்கே = அவனெங்கே?

நிலைமொழியீற்றில் மெய்யெழுத்து நிற்க, வருமொழி முதலில் வந்த உயிர், அம்மெய்யுடன் கூடி உயிர்மெய் எழுத்தாயிற்று.

இதுவும் இயல்பு புணர்ச்சியே.

தனிக்குறிலை அடுத்த மெய்ம்முன் உயிர் :

கல் + அணை = (கல் + ல் + அணை)
கல்லணை
கண் + அழகு = (கண் + ண் + அழகு) கண்ணழகு
பொன் + ஓலை = (பொன் + ன் + ஓலை) பொன்னோலை

தனிக்குறிலை அடுத்த மெய் எழுத்தின் முன் உயிர் எழுத்து வந்தால், நிலைமொழியீற்றில் உள்ள மெய்யெழுத்து இரட்டிக்கும்.

4. திரிதல்

மகர மெய்ம்முன் வல்லினம் :

குற்றம் + கண்டான் = குற்றங்கண்டான்
மணம் + செய்து = மணஞ்செய்து
பணம் + தந்தான் + பணந்தந்தான்.

நிலைமொழி ஈற்றில் நின்ற மகரம், தன் முன் வல்லினம் வர, அவ்வல்லினத்திற்கு இனமான மெல்லெழுத்தாகத் திரியும்.

ணகர னகர மெய்ம்முன் வல்லினம்:

கண் + செவி = கட்செவி
மண் + குடம் = மட்குடம்
பொன் + காப்பு = பொற்காப்பு
முன் + காலம் = முற்காலம்

நிலைமொழியிறுதியில் நிற்கும் ணகரம், வருமொழி முதலில் வல்லினம் வந்தால், டகரமாய்த் திரியும். அப்படியே னகரம் றகரமாய்த் திரியும்.

லகர ளகர மெய்ம்முன் வல்லினம் :

கயல் + கண் = கயற்கண்
வாள் + படை = வாட்படை

நிலைமொழியீற்று லகர மெய்யின் முன் வல்லினம் வந்தால், அது றகர மெய்யாகத் திரியும். ளகர மெய்ம்முன் வல்லினம் வந்தால், அது டகர மெய்யாகத் திரியும்.

பயிற்சி :

I. பின் வரும் தொடர்களை நிலைமொழி வருமொழி தோன்றப் பிரித்தெழுதுக :—

1.	எவ்வணி?	7.	சேவடி
2.	அப்பணம்	8.	பற்பொடி
3.	உய்வில்லை	9.	பட்டுடை
4.	எந்நலம் ?	10.	மணியடித்தான்.
5.	சொற்பொருள்	11.	கட்களிறு
6.	கண்ணோட்டம்	12.	பணத்தைச் சேத்தான்

II. பின் வருவனவற்றுள் வல்லினம் மிக வேண்டுமிடங்களில் மிகுத்துக் காட்டுக :—

1. அவன் தன் புத்தகத்தை எனக்கு கொடுத்தான்.
2. இராமன் ஊருக்கு போனான்.
3. கொல்லன் வீட்டை கட்டினான்.
4. கற்றோர்க்கு சென்றவிடமெல்லாஞ் சிறப்பு.

மொழிப்பயிற்சி

வாக்கியத்தின் உறுப்புக்கள் (தொடர்ச்சி)

தோன்ரு எழுவாய் :

வாக்கியத்தின் முக்கியவுறுப்புக்கள் எழுவாயும் பயனிலையும் ஆகும் அல்லவா ?

1. பாடத்தைப் படியுங்கள்.
2. விரைவிற்படி.
3. நேற்றுக் கல்லூரிக்கு வந்தாயா ?

இத்தொடர்களுள் எழுவாய்கள் யாவை? அவை மறைந்துள்ளன. அவை முறையே,

1. **நீங்கள்** பாடத்தைப் படியுங்கள்.
2. **நீ** விரைவிற்படி.
3. **நீ** நேற்றுக் கல்லூரிக்கு வந்தாயா ?

என அமையும்.

வாக்கியத்துள் மறைந்திருக்கும் எழுவாய், '**தோன்ரு எழுவாய்**' என வழங்கப்படும்.

பயனிலை :

தமிழ் மொழியில் பயனிலைகள் வினையாகவும், பெயராகவும், வினவாகவும் அமையும்.

1. கந்தன் **படித்தான்.**
2. இது **பசு.**
3. அவன் **யார் ?**

'**படித்தான், பசு, யார்**' என்பன இத்தொடர்களிற் பயனிலைகளாகும். 'படித்தான்' என்பது வினை முற்று ; 'பசு' என்பது விலங்கின் பெயராதலின், பொருட்பெயர். 'யார்' என்பது கேள்வியாய் வந்திருத்தலின் வினு.

பயனிலை மூன்று வகைப்படும். அவை வினை, பெயர், வினா என்பவை.

பயிற்சி:

பயனிலைகளை எடுத்து எழுதி அவை எந்த வகையைச் சேர்ந்தவை என்பதைக் குறிக்க:—

1. அவர் யார்?
2. காக்கை கரையும்.
3. இது நல்ல கட்டுக்கதை.
4. பந்து ஏது?
5. புலி பாயும்.
6. அவன் என் மகன்.

செயப்படு பொருள்:

1. இராமன் தூங்கினான்.
2. கோபாலன் வீட்டைக் கட்டினான்.

முதல் தொடரில் பயனிலை எது? 'தூங்கினான்' என்பது. எழுவாய் எது? 'இராமன்' என்பது. இரண்டாம் தொடரில் 'கட்டினான்' என்பது பயனிலை. 'கோபாலன்' என்பது எழுவாய். கோபாலன் செய்த தொழிலின் பயனாகத் தோன்றிய பொருள் யாது? 'வீடு'. ஆகவே, 'வீடு' என்பது செயப்படு பொருள். இவ்வாறு எழுவாயின் தொழிற்பயனாகத் தோன்றுவது எதுவோ, அதுவே செயப்படு பொருள்.

முதல் தொடரில் எழுவாயின் தொழிற்பயனை ஏற்ற பொருள் இல்லை; ஆதலால், செயப்படு பொருள் இல்லை.

'கந்தன் வீட்டைக் கட்டினான். தோட்டக்காரன் பயிரை வளர்த்தான்,' என்பனவற்றில் எழுவாய்

முதலிலும் பயனிலை இறுதியிலும் செயப்படு பொருள் நடுவிலும் வாக்கியங்களில் அமைந்திருக்கின்றன.

எழுவாய் செயப்படு பொருள்களை அறியும் வழிகள் :

1. கந்தன் கணையாழி செய்தான்.
2. குதிரை புல் மேய்ந்தது.

இத்தொடர்களுள், 'செய்தான், மேய்ந்தது' என்பன பயனிலைகள். 'எவன் செய்தான்?' என்று வினவினால், கிடைக்கும் விடையே (கந்தன்) எழுவாய். 'எது மேய்ந்தது?' என்று கேட்டாற் கிடைக்கும் விடையே (குதிரை) எழுவாய்.

ஆதலால், பயனிலையின் முன் 'யார், எவன், எது, எவை' என்பனவற்றுள் ஏற்ற ஒன்றைச் சேர்த்து வினவினால், கிடைக்கும் விடையே எழுவாயாகும்.

பயனிலைக்கு முன் 'எதை, யாரை, எவனை, எவளை, எவற்றை' என்பனவற்றுள் ஏற்ற ஒன்றைச் சேர்த்து வினவினால், வரும் விடையே செயப்படு பொருளாகும்.

பயிற்சி:

எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைப் பொறுக்கி எழுதுக:—

1. கயவர் கயவரையே விரும்புவர்.
2. மாந்தர் மூடனை இகழ்வர்.
3. தொழிலாளி குடத்தை வனைந்தான்.
4. பசு, பால் கொடுக்கும்.
5. புலி யானையைக் கொன்றது.
6. திருவள்ளுவர் நீதி நூலை இயற்றினார்.

1. வாக்கிய வகைகள் :

சொற்கள் தொடர்ந்து நின்று முற்றுப் பெற்ற தொரு கருத்தை உணர்த்துவதே வாக்கியம் என் பதை முன்பே அறிந்தோம். இனி அவ்வாக்கியங் களின் பிரிவுகளைக் கவனிப்போம் :

1. குதிரை ஓடுகின்றது.
   பறவை பறந்தது.
   நான் உலாவச் செல்லுகிறேன்.
   என் பெயர் சாத்தி.
2. குறவன் கூடையை முடைந்தான்.
   அரசன் பகைவரைக் கொன்றான்.
3. கபிலனும் பரணனும் கலாசாலை சென்றனர்.
   புலவரும் வள்ளல்களும் தமிழை வளர்த்தார்கள்.

முதற்பிரிவில் உள்ள தொடர்மொழிகள், எழுவாயும் பயனிலையும் உள்ளவை. இரண்டாம் பிரிவில் உள்ள தொடர்மொழிகள், எழுவாய், பய னிலை, செயப்படு பொருளாகிய மூன்றும் உள் ளவை. மூன்றாம் பிரிவில் உள்ள தொடர்மொழி கள், இரண்டு எழுவாய்களும் ஒரு பயனிலையும் உள் ளவை எனினும், இம்மூன்று பிரிவிலும் அடங்கிய வாக்கியங்களில் உள்ள பொதுத் தன்மை யாது? சிந்தித்துப் பாருங்கள்.

1. தனி நிலை வாக்கியம் :

ஒரு வாக்கியத்துள் ஒன்று அல்லது பல எழு வாய்களும் ஒரே பயனிலையும் அமைந்துள்ளன அல் லவா? இவ்வாறு ஒன்று அல்லது பல எழுவாய் களையும் ஒரே பயனிலையையும் பெற்று வரும் வாக்கி யம் தனிவாக்கியம் எனப்படும். தனிவாக்கியங்கள் சில

வற்றுள் செயப்படு பொருள் அமைந்திருப்பது முண்டு; அமையாமல் இருப்பதுமுண்டு.

2. தொடர்நிலை வாக்கியம் :

1. நான் கடைக்குச் சென்றேன்; ஆனல், கடை மூடியிருந்தது.

2. ஞானசம்பந்தர் ஊர் ஊராகச் சென்ருர்; கடவுளை வணங்கினர்; துதிப் பாடல்களைப் பாடினர்.

3. திருவள்ளுவர் சிறந்த புலவர்; திருக்குறளை இயற்றினர்; மக்களுக்குச் சிறந்த ஒழுக்கங்களைக் கற்பித்தார்.

மேற்காட்டப்பட்ட சொற்றொடர்களுள் ஒவ்வொன்றிலும் ஓர் எழுவாய், பல பயனிலைகளைக் கொண்டு முடிந்தது. தனி நிலை வாக்கியங்கள் சில தொடர்ந்து நிற்கின்றன. இத்தகைய தொடர் மொழிகளுக்குத் தொடர்நிலை வாக்கியம் எனப் பெயர் கூறுவர்.

தனி நிலை வாக்கியம் இரண்டு ஒன்ரோடொன்று தொடர்ந்து நிற்பது தொடர்நிலை வாக்கியம். அதில் ஓர் எழுவாய், பல பயனிலைகளைக் கொண்டு முடியும்.

3. கலவை வாக்கியம் :

1. 'நீ பாடங்களை நன்கு கவனிப்பதில்லை,' என்று உன் ஆசிரியர் கூறினர்.

2. 'கூழானலும் குளித்துக் குடி,' என்று நம் முன்னோர் கூறியுள்ளனர்.

மேலே உள்ள வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். முதல் வாக்கியத்தில் உள்ள 'உன் ஆசிரி

யர் கூறினர்,' என்பது முக்கியமான வாக்கியம். 'நீ பாடங்களை நன்கு கவனிப்பதில்லை,' என்பது சார்பு அல்லது துணை வாக்கியம். 'என்று' என்பது துணை வாக்கியத்தை முக்கியமான வாக்கியத்தோடு இணைக்க வந்த சொல்.

இரண்டாம் வாக்கியத்துள், 'நம் முன்னோர் கூறியுள்ளனர்,' என்பது முக்கியமான வாக்கியம். 'கூழானாலும் குளித்துக் குடி,' என்பது துணை வாக்கியம். இவ்விரண்டையும் இணைக்க 'என்று' என்னும் சொல் வந்தது. இவ்வாறு வருபவை 'கலவை வாக்கியம்' எனப் பெயர் பெறுவனவாம்.

கலவை வாக்கியம், முக்கியமானதொரு வாக்கியத்தையும், ஒன்று அல்லது பல துணை வாக்கியங்களையும் பெற்று வரும்; முக்கியமான வாக்கியத்தையும் துணை வாக்கியங்களையும் இணைக்க அவற்றின் இடையே என்று, என்பது, என, ஆக முதலிய சொற்களுள் பொருத்தமான தொன்று வரும்.

பயிற்சி:

கீழ் வரும் வாக்கியங்களுள் ஒவ்வொன்றும் இன்ன வகையைச் சார்ந்த வாக்கியம் என்பதைக் காரணத்துடன் குறிப்பிடுக:—

1. என்னால் இயன்றதை நான் செய்வேன்.
2. பாரி பரிசிலரைக் கண்டான்; மகிழ்ச்சியுடன் வரவேற்றான்.
3. என் பெயர் கண்ணன்.
4. 'நாளை எட்டு மணிக்கே கலாசாலைக்கு வந்துவிடுகிறாயா?' என்று ஆசிரியர் என்னைக் கேட்டார்.
5. வண்டி கடை வாயிலில் வந்து நின்றது.

6. பயிர்த்தொழிலே தமிழர் மேற்கொண்டுள்ள சிறந்த தொழிலாகும்.

7. 'கற்க கசடறக் கற்பவை,' என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

8. குயில் கூவுகிறது.

9. வைத்தியர் நல்ல மருந்தையே கொடுத்தார்; என்ருலும், நோயாளி இறந்துவிட்டான்.

10. இவ்வுலகம் காந்தியடிகளை எந்நாளும் மறவாது.

11. அனுமன் இலங்கையில் சீதையைக் கண்டான்.

12. பேகன் மயிலைக் கண்டான்; மனம் கலங்கினன்; போர்வையை ஈந்தான்.

II. வாக்கிய உறுப்புக்கள் நிற்கும் முறை :

எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் என்பன 'வாக்கிய உறுப்புக்கள்' என்றும், அவற்றுள் எழுவாயும் பயனிலையும் ஒரு வாக்கியத்தின் முக்கியவுறுப்புக்கள் என்றும், சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்து வருவதுண்டு என்றும் முன்பு படித்தீர்கள். அம்மூன்று உறுப்புக்களும் ஒரு வாக்கியத்தில் நிற்கும் முறையைக் கவனிப்போம் :

நான் பல நாட்கள் ஆராய்ந்து அக்கட்டுரையை எழுதினேன்.

இத்தொடர் மொழியில் 'நான்' என்னும் எழுவாய் முதலிலும், 'எழுதினேன்' என்னும் பயனிலை இறுதியிலும், 'கட்டுரை' என்னும் செயப்படு பொருள் நடுவிலும் நின்றன. இவ்வாறு ஒரு வாக்கியத்தில் எழுவாய் முதலிலும், பயனிலை இறுதியிலும், செயப்படு பொருளும் ஏனைய சொற்களும் இடையிலும் அமைய வருவதுதான் பெரும்பாலும்

முறையாகும். கீழ்க்காணும் வாக்கியங்களில் அவ்வாறே அவை அமைந்துள்ளன :

1. கோவலன், கண்ணகியுடன் பாண்டி நாட்டை அடைந்தான்.

2. கண்ணகி மதுரையை எரித்தாள்.

3. குறவர் வியப்புடன் கண்ணகியை நோக்கினர்.

இத்தொடர்மொழிகளைப் பின்வருமாறு மாற்றியும் எழுதலாம் :

1. பாண்டி நாட்டைக் கோவலன் கண்ணகியுடன் அடைந்தான்.

2. மதுரையைக் கண்ணகி எரித்தாள்.

3. கண்ணகியைக் குறவர் வியப்புடன் நோக்கினர்.

இவ்வாறு எழுதிய போது செயப்படு பொருள் முதலிலும் எழுவாய் நடுவிலும் நின்றன ; எனினும், பயனிலை இறுதியிலேயே நிற்கின்றது. ஆகவே, பயனிலை வாக்கில் வாக்கியத்தின் இறுதிலேயே நிற்கும் என்பதை நாம் உணரலாம். எழுவாய், பெரும்பாலும் முதலில் நிற்பதுதான் சிறப்பு ; சில சமயங்களில் முக்கியம் கருதி, முதலில் செயப்படுபொருளும் நிற்கும்.

1. வந்தான் அவன் என்னிடம்.

2. பேசினேன் நான் அவனைக் கண்டு.

3. கொடுத்தேன் அவனுக்கு இரண்டடி.

இப்படியே நாம் பெரும்பாலும் பேசுகின்றோம் ; சில சமயங்களில் இவ்வாறே எழுதுகின்றோம். அப்பொழுது பயனிலை முதலில் நிற்கின்றது. பயனிலை குறிப்பிடும் பொருள் முக்கியமானதாகவோ, வியப்பானதாகவோ, மகிழ்ச்சியைத் தருவதாகவோ, வருத்தத்தைத் தருவதாகவோ

இருந்தால், அத்தகைய சந்தர்ப்பங்களில் பயனிலை முதலில் நிற்கும். செய்யுட்களில் பலவிடங்களில் இவ்வாறு பயனிலை முதலில் நிற்பதுண்டு.

நீங்கள் கட்டுரை எழுதுங்கால் வாக்கியங்களில் எழுவாய் முதலிலும், செயப்படுபொருளும் ஏனைய சொற்களும் இடையிலும், பயனிலை இறுதியிலும் நிற்குமாறு எழுத வேண்டும். முக்கியமான செய்திகள் முதலியவற்றைக் குறிப்பிடும் போது செயப்படுபொருளையோ, பயனிலையையோ முதலில் அமைத்து இரண்டொரு வாக்கியங்கள் எழுதலாம்.

பயிற்சி:

1. வாக்கியத்தின் உறுப்புக்கள், வாக்கியத்திற் பெரும்பாலும் நிற்கும் இடங்களைக் குறிப்பிடுக.

2. வாக்கிய உறுப்புக்களை மாற்றி அமைத்து எழுதுகிற சந்தர்ப்பங்களுள் இரண்டைக் குறிப்பிட்டு, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோருதாரண வாக்கியம் எழுதுக.

3. கீழ்க் காண்பனவற்றுள் வாக்கிய உறுப்புக்கள் நிற்குமிடங்களைத் தனித்தனியே குறிப்பிடுக:—

(அ) நான் இரவில் பாடங்களைப் படித்துவிட்டுத் தூங்கினேன்.

(ஆ) சீதையைக் கண்டான் அனுமன்.

(இ) 'கண்டனன் கற்பினுக்கு அணியை.'

(ஈ) என்னைக் கண்டு அவன் ஓடத்தொடங்கினான்.

4. கீழ்க்காணும் வாக்கியங்களை எவ்வெவ்விதம் மாற்றி எழுதலாம்? ஒவ்வொன்றிலும் வாக்கிய உறுப்புக்கள் நிற்கும் இடங்களைக் குறிப்பிடுக:—

(அ) இராசராசன் தஞ்சைக் கோவிலைக் கட்டி முடித்தான்

(ஆ) செங்குட்டுவன் இமயத்தில் எடுத்த கல்லைக் கனகவிசயர் தலையில் ஏற்றினான்.

(இ) நெல்லிக்கனியை அதியமான் ஔவைக்கீந்தான்.

(ஈ) இறந்தான் மகன் போர்க்களத்தில்.

(உ) நேற்று நடந்த போட்டியில் நான் முதற் பரிசு பெற்றேன்.

(ஊ) இடிபட்டன அவ்வூர் மதில்கள்.

III. வாக்கியப் பொருத்தம் :

(அ) எழுவாய் வினைமுற்றுக்களின் பொருத்தம்:

கந்தன் படிக்கிறான்.
வள்ளி பாடுகிறாள்.
மாணவர்கள் கூடினார்கள்.
நாய் ஓடியது.
நாய்கள் ஓடின.

மேலே காணப்படும் சொற்றொடர்களைப் படித்துப் பாருங்கள். 'கந்தன்' என்னும் எழுவாய், உயர்திணை ஆண் பாலைக் குறித்தது. அதற்கேற்றவாறு, 'படிக்கிறான்' என்னும் பயனிலையும் உயர்திணை ஆண் பாலைக் குறித்தது. எழுவாய், பயனிலை இரண்டும் ஒருமை எண்ணையும் படர்க்கை இடத்தையும் குறித்தன. இவ்வாறே ஏனைய சொற்றொடர்களும் பொருத்தமாய் அமைந்துள்ளன.

வள்ளி (எழுவாய்)	திணை	பால்	எண்	இடம்
பாடுகிறாள் (பயனிலை)	உயர்திணை	பெண்பால்	ஒருமை	படர்க்கை
	,,	,,	,,	,,
மாணவர்கள் (எழுவாய்)	உயர்திணை	பலர்பால்	பன்மை	,,
கூடினார் (பயனிலை)	,,	,,	,,	,,

	திணை	பால்	எண்	இடம்
நாய் (எழுவாய்)	அஃறிணை	ஒன்றன்பால்	ஒருமை	படர்க்கை
ஓடியது (பயனிலை)	,,	,,	,,	,,
நாய்கள் (எழுவாய்)	அஃறிணை	பலவின்பால்	பன்மை	,,
ஓடின (பயனிலை)	,,	,,	,,	,,

எனவே, ஒரு வாக்கியத்தில் உள்ள எழுவாய் குறிக்கும் திணை, பால், எண், இடம் ஆகியவற்றையே, அவ்வாக்கியத்தில் உள்ள பயனிலையும் குறிக்கும் என்பதை அறிக. 'நாய் ஓடினர்' என்றோ, 'வள்ளி பாடியது' என்றோ எழுவாய் பயனிலைகளை அமைப்பது தவறு. செய்யுட்களில் சில இடங்களில் இப்பொருத்தங்கள் காணப்படா. அவ்வாறு வருவதற்குரிய காரணங்களை மேல் வகுப்புக்களில் படிக்கலாம்.

(ஆ) தன்மை, முன்னிலை கலந்து வருதல் :

நான் வந்தேன்.
நீ வந்தாய்.
அவர் வந்தார்.

இவற்றுள் எழுவாயும் பயனிலையும் ஒரே இடத்தைக் குறித்தன. 'நானும் நீயும்' என்று தன்மையையும் முன்னிலையையும் சேர்த்து ஒரு வாக்கியத்தைத் தொடங்கினால், பயனிலை எவ்விடத்திற்குரியதாய் அமைய வேண்டும் ?

பின்வரும் வாக்கியங்கள் முடிந்திருக்கும் விதத்தைப் பாருங்கள் :—

யானும் நீயும் சென்றனம்.
யானும் நீயும் செல்கின்றும்.
யானும் நீயும் செல்வாம்.
நீயும் யானும் உண்டனம்.
நீயும் யானும் உண்கிரும்.
நீயும் யானும் உண்பாம்.

இவ்வாக்கியங்களின் பயனிலைகள் தன்மை இடத்தையே குறித்தன. தன்மையும் முன்னிலையும் கலந்து வரும்பொழுது பயனிலையில் (வினைமுற்றில்) 'அம்' அல்லது 'ஆம்' என்னும் விகுதி அமைந்தது.

(இ) தன்மை, முன்னிலை, படர்க்கை கலந்து வருதல்:

யானும் நீயும் அவனும் உண்டனெம்.
நீயும் அவளும் யானும் உண்டேம்.
யானும் அவனும் நீயும் வருவோம்.
அவனும் யானும் நீயும் செல்வோம்.

இவ்வாக்கியங்களில் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றிடங்களும் கலந்து வந்தன. ஆதலின், வினைமுற்றுக்கள் தன்மைப் பன்மையிலேயே அமைந்துள்ளன. இவற்றுள் 'எம், ஏம், ஓம்' என்பன விகுதிகளாய் வந்தன. இவற்றுள் 'எம், ஏம்' விகுதிகள் செய்யுட்களிலேயே பெரும்பாலும் வரும். நாம் எழுதும்பொழுதும் பேசும்பொழுதும், 'செல்வோம், வருவோம்' என 'ஓம்' என்னும் விகுதியையே உபயோகிக்கின்றோம்.

பயிற்சி:

1. பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய் பயனிலைகள் ஒரே விதமான திணை, பால், எண், இடங்களைப் பெற்றுள்ளன. எவ்வாறு? விளக்குக:—

(அ) அவன் பள்ளிக்கூடம் போகிறான்.

(ஆ) பறவைகள் உயரத்தில் பறக்கின்றன.

(இ) இராமன் என்னிடம் நேற்று வந்தான்.

2. 'மாடுகள் ஓடியது.'—இந்தச் சொற்றொடர் தவறானது. ஏன்?

3. கோடிட்ட இடங்களில் ஏற்ற வினை முற்றுக்களை அமைத்துக் காட்டுக:—

(அ) நானும், நீயும், அவனும்——(போ).

(ஆ) நீயும், யானும்——(செல்)

(இ) அவனும் நானும் நீயும்——(உண்)

(ஈ) நீயும் அவளும் யானும்——(தின்)

(உ) யானும் நீயும்——(விளையாடு)

(ஊ) அவனும் நீயும் யானும்——(ஓடு)

4. தன்மையும், முன்னிலையும் கலந்து வரும் வாக்கியங்களை முடிக்கும் வினை முற்றுக்களில் அமைந்திருக்கும் விகுதிகள் யாவை?

IV. இடம் விட்டு எழுதுதல்:

நீங்கள் எழுதும்பொழுது சில விதிகளைப் பின்பற்ற வேண்டுவது அவசியம். அவற்றைப் பின்பற்றா விட்டால், நீங்கள் எழுதியதை நீங்களே படித்துப் பொருளை உணர்ந்துகொள்ள முடியாது; படிக்கும் பொழுதும் பல இடையூறுகள் உண்டாகும்.

(1) ஒருவர்செய்தநன்றியைமறவாதே.

(2) சாப்பா டுபோ டப்ப டும்.

இவ்வாக்கியங்களை எளிதில் படிக்க முடிகின்றதா? முடியவில்லை. ஏன்? முதலில் உள்ள வாக்கியத்தில் ஒரு சொல்லுக்கும் மற்றொரு சொல்லுக்கும் நடுவில் இடம் விடவில்லை. இரண்டாவது வாக்கியத்

தில் இடம் விடப்பட்டிருக்கிறது. ஆயினும், சொற்கள் தகுந்த முறையிற் பிரிக்கப்படவில்லை. ஒரு சொல்லுக்கும் மற்றொருசொல்லுக்கும்நடுவில்தகுந்த முறையில் இடைவெளி இருந்தாற்றான் படிக்க இயலும்.

ஒருவர் செய்த நன்றியை மறவாதே.
பருவத்தே பயிர் செய்.
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை.
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
சாப்பாடு போடப்படும்.
அங்கு இருந்தவர் அனைவரும் எழுந்தனர்.

இவ்வாறு சொற்களைப் பிரித்து எழுதினால், நீங்களும் அவற்றை எளிதில் படிக்கலாம்; மற்றவர்களும் எளிதில் படிப்பார்கள்.

V. சேர்த்தெழுதுதல்:

சொல்லுக்குச் சொல் இடம் விடவேண்டும் என்பதற்காக எல்லாச் சொற்களையும் பிரித்து எழுதுவதும் கூடாது:

என் இடம் பொருளில்லை.
கண்ணன் அது புத்தகம் உன் இடம் இருக்கிறதா?
ஏ விதமாக வீடு செல்வது?
மரத்தின் கண் பறவை உள்ளது.
வாள் ஆல் பகைவரை வெட்டினான்.

இவ்வாறு பிரித்து எழுதுவது தவறு. சொற்களுடன் வேற்றுமையுருபுகளைச் சேர்த்தெழுதும் போது 'என்னிடம், கண்ணனது, ஆசிரியரோடு, வாளால்' என்று சேர்த்தே எழுதுதல் வேண்டும்.

உங்கள் பாட புத்தகங்களில் சொற்கள் எவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும்,

எவ்வாறு சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நன்கு கவனியுங்கள்.

VI. சொற்பொருத்தம் :

ஒரு வாக்கியத்தின் வினைமுற்று அவ்வாக்கியத்திலுள்ள மற்றச் சொற்களுடன் பொருளில் பொருத்தம் உடையதாய் இருக்க வேண்டும்.

ஆடை வெயிலில் உலர்ந்தது.
ஆடை தண்ணீரில் நனைந்தது.
நான் பாலைக் குடித்தேன்.
கோவிந்தன் நிலக்கடலையைத் தின்றான்.
நாய் குரைக்கின்றது.
குதிரை கனைக்கின்றது.

மேற்கண்ட வாக்கியங்கள் பொருளில் பொருத்தம் உடையனவாய் இருக்கின்றன; ஒவ்வொரு வாக்கியத்திலும் பொருத்தமான வினைமுற்று அமைந்திருக்கின்றது. வாக்கியங்களை,

ஆடை வெயிலில் நனைந்தது.
ஆடை தண்ணீரில் உலர்ந்தது.
நான் பாலைத் தின்றேன்.
கோவிந்தன் நிலக்கடலையைக்குடிக்கிறான்.
நாய் கனைக்கின்றது.
குதிரை குரைக்கின்றது.

என்று எழுதுவது தவறு. வாக்கியத்தின் பொருளுக்கு ஏற்றவாறு பொருத்தமாக வினைமுற்று அமைய வேண்டும். ஏனைய சொற்களும் பொருள் பொருந்துமாறு அமைய வேண்டும்.

பயிற்சி:

1. பின் வரும் வாக்கியங்களில் ஏற்ற இடங்களில் இடம் விட்டு எழுதுக :—

(அ) பசு வின்பால் உடம் பிற்குநல்லது.

(ஆ) மாலே யில்கடற் கரை யில் உலாவிவா.

(இ) நான் என் நண்ப னுடன்விளே யாடுவ துவழக்கம்.

(ஈ) என்தந் தையார் இன்றிரவுசென்னே போகிருர்.

(உ) ஆசிரி யர்கேட்ட வினுவிற் குஏற்ற விடையை என் ஞல்சொல் லமுடிய வில்லே.

(ஊ) கண்ணகிகோவ லனுடன் மது ரைசென்ருள்.

2. பின் வருவனவற்றைமுறைப்படி சேர்த்துஎழுதுக:

(அ) தந்தை ஓடு மகன் வந்தான்.

(ஆ) சித்திர மும் கைப் பழக்கம்; செந் தமிழும்நாப் பழக்கம்.

(இ) தன் னேப்பாடிய புலவர்க் குக்குமணன் தன் தலேயை யே பரிசாக அளிக்கமுன் வந்தான்.

(ஈ) பாரியின் இடம்சென்ற புலவர் பரிசி லேப்பெறு வது திண்ணம்.

(உ) என் ஓடு பேசா தே.

(ஊ) பூவின் கண் உள்ள துமணம்.

3. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களே அமைத்து எழுதுக:—

(அ) இரவில் நரி——(பாடும், ஆடும், ஊளேயிடும்)

(ஆ) காகம்——(கரைகிறது, கூவுகிறது, அகவுகிறது)

(இ) பனியில்——உடம்பிற்கு நல்லதன்று (உலர்வது, காய்வது, நனேவது)

(ஈ) நான் மாம்பழத்தை——(தின்றேன், குடித்தேன்)

(உ) கோழி விடியற்காலேயில்——(குரைக்கும், உறு மும், கூவும், பாடும்)

(ஊ) பாகற்காய்——(துவர்க்கின்றது, புளிக்கின்றது, கசக்கின்றது)

VII. நிறுத்தக்குறிகள் :

நாம் படிக்கும்போது நமக்கும் பிறருக்கும் பொருள் நன்ருய் விளங்கும்படி படிக்க வேண்டும். அங்ஙனம் படிக்கவேண்டுமாஞல், எந்த எந்த இடத்தில் எவ்வளவு எவ்வளவு நேரம் நிறுத்துதல் வேண்டும் என்பதை அறிதல் வேண்டும். அந்த வகையை அறிதற்குச் சில குறிகள் உண்டு. அவை **நிறுத்தக் குறிகள் எனப்படும்.**

1. முற்றுப்புள்ளி

நான் பாடத்தைப் படிக்கிறேன்.
கோழி விடியற்காலையில் கூவுகிறது.
தந்தையொடு மகன் வந்தான்.
கன்றுக்குட்டி துள்ளி ஓடும்.

மேலே உள்ள வாக்கியங்களின் இறுதியில் ஒரு புள்ளி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் புள்ளிக்கு 'முற்றுப்புள்ளி' என்பது பெயர். **வாக்கியத்தின் இறுதியில் முற்றுப்புள்ளி இடுதல் வேண்டும்.** முற்றுப் புள்ளி இடப்பட்ட இடங்களில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும். அப்பொழுதுதான் படித்த வாக்கியத்தின் பொருளை நன்ருக அறிய முடிவதுடன், படிக்கப் போகும் வாக்கியத்தின் பொருளை அறிய நம் மனமும் தயாராய் இருக்கும்.

2. அரைப்புள்ளி

தமிழ் நாடு முற்காலத்தில் சீருஞ் சிறப்பும் பெற்று விளங்கியது; பண்பாட்டில் மிக்கிருந்தது; இசையில் மேம்பட்டிருந்தது.

தேசத் தலைவர்கள் நாட்டின் பொருட்டு இரவும் பகலும் பாடுபட்டார்கள்; பொருளை ஈந்தார்கள்; சிறை புகுந்தார் கள்; மனைவி மக்களையும் துறந்தார்கள்.

மேலே காட்டப்பட்டுள்ள தொடர்வாக்கியங்களின் இடையில் (;) என்னும் குறி இடப்பட்டுள்ளது அன்றோ? அஃது அரைப்புள்ளி என்று வழங்கப்படும். அரைப்புள்ளி அமைந்த இடத்தில் இரண்டு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும். தொடர் வாக்கியங்களில் அரைப்புள்ளி அமையும்.

3. காற்புள்ளி

(,) இவ்வடையாளம் காற்புள்ளி ஆகும். காற்புள்ளி இடப்பட்ட இடத்தில் ஒரு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும். நீளமான வாக்கியங்களில் பெரும்பாலும் காற்புள்ளி வரும். ஒரு வாக்கியத்தில் உள்ள பல பொருள்களையும் கருத்துக்களையும் பிரித்துக் காட்டக் காற்புள்ளி இடவேண்டும்.

கண்ணகி பாண்டியனிடம் சென்று, வழக்குரைத்து, தன் கணவன் கள்வனல்லன் என்பதை விளக்கி, சினந் தணியாமல், மதுரையை எரித்தாள்.

நான் என் நண்பன் வீடு சென்று, அவனுடன் கடைக்குப் போனேன்.

காந்தியடிகள், உண்மையையே கடைப்பிடித்தவர் என்பதும், கொல்லாமை விரதத்தை மேற்கொண்டவர் என்பதும், உலகம் உள்ள வரையில் அவர் பெயர் மறையாது என்பதும் எல்லாரும் அறிந்த உண்மைகளாம்.

மேலே காட்டப்பட்டுள்ள வாக்கியங்களில் காற்புள்ளி அமைந்து நிற்கும் இடங்களைக் கவனி. பாடபுத்தகத்திற் காற்புள்ளி இடப்பட்டிருக்கும் இடங்களையும் கவனி.

(1) பெயர்ச்சொற்கள் இரண்டிரண்டாகச் சேர்ந்து வரும் பொழுது அந்த இரட்டைகளைப்

பிரித்துக்காட்டுவதற்கும், (2) சில கருத்துக்கள் தொடர்ந்து நின்று ஒரு முடிவைப் பெறும் பொழுது ஒவ்வொரு கருத்துக்கும் இடையிலும், (3) பல வினையெச்சங்கள் வரும் பொழுது ஒவ்வொரு வினையெச்சத்தையும் அடுத்தும் ஒவ்வொரு காற்புள்ளி இடுதல் வேண்டும். இதைப்பற்றி விரிவாக அடுத்த வகுப்பிற்படிப்போம்.

4. வினாக்குறி

நீ வாராமைக்குக் காரணம் என்ன?

இயமனுக்குக் 'காலன்' என்னும் பெயர் வழங்கக் காரணம் யாது?

என் புத்தகம் எங்கே?

என் முன் அஞ்சாது வந்த நீ யார்?

நான் சொல்லியபடியே நீ ஆசிரியரிடம் கூறினாயா?

மேல் வாக்கியங்களில் 'என்ன? யாது? எங்கே? யார்? கூறினாயா?' என்பவற்றுள் 'எ, யா, ஏ, ஆ' என்னும் எழுத்துக்கள் வினாப்பொருளில் வந்துள்ளன என்பது உங்களுக்குத் தெரியும். இவ்வாறு வினாக்களைக் கொண்டு வந்த வாக்கியங்களுக்கு இறுதியில் வினாக்குறியை (?) இடுதல் வேண்டும். வினாக்குறி அமைந்த இடத்திலும் நான்குமாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

5. உணர்ச்சிக்குறி

வியப்பு, மகிழ்ச்சி, அச்சம், சினம், இரக்கம், வருத்தம் முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் சொற்களுக்கும், வாக்கியங்களுக்கும் இறுதியில் உணர்ச்சிக்குறியினை (!) இடுதல் வேண்டும். இக்குறி இடப்பட்டுள்ள இடத்திலும் நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

என்ன அற்புதம்! இவன் கண்ணுடியைத் தின்கின்ருனே! (வியப்பு)

ஆஹா! எனக்கா முதற்பரிசு! (மகிழ்ச்சி)

தேள்! தேள்! (அச்சம்)

உனக்கு இவ்வளவு கர்வமா! (சினம்)

அந்தோ! படியாமல் வீண் பொழுது போக்கினேனே!

ஐயோ! பாவம்! உன் நிலை இப்படி ஆகிவிட்டதே! (இரக்கம்)

மேலேயுள்ள உதாரணங்களில் உணர்ச்சிக் குறிகள் அமைந்துள்ள இடங்களைக் கவனியுங்கள். பாடபுத்தகத்தில் உணர்ச்சி வாக்கியங்கள் வரும்பொழுது நன்கு கவனியுங்கள்.

6. மேற்கோட்குறி

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி," என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

"அரசன் எவ்வழி, அவ்வழிக் குடிகள்," என்னும் மூதுரையை நீ அறியாயோ?

காந்தியடிகள், "உண்மை உயர்வளிக்கும்," என்று எப்பொழுதும் கூறுவார்.

மேலே காட்டப்பட்டுள்ள வாக்கியங்களுள் மேற்கோட்குறிகள் [" "] அமைந்துள்ளன. ஒருவர் எழுதிய அல்லது சொல்லிய சொற்களை அவ்வாறே ஒரு வாக்கியத்தின் இடையில் அமைக்கும் பொழுது அச்சொற்களுக்கு இருபுறங்களிலும் இக்குறிகள் இடப்படும். இவ்வாறு இடப்படும் இக்குறிகளே மேற்கோட்குறிகள் ஆகும்.

பயிற்சி :

1. முற்றுப்புள்ளி அமைக்க வேண்டும் இடம் எது?
2. காற்புள்ளி இட வேண்டிய இடங்களுள் மூன்றனைக் குறிப்பிடுக.

3. உணர்ச்சி வாக்கியங்கள் எவ்வெப்பொழுது உண்டாகும்?

4. 'மேற்கோட்குறி' என்பது யாது?

5. ஒரு வாக்கியத்தில் வினப்பொருள் அமைந்துள்ளது என்பதை எதனால் அறியலாம்?

6. பின் வரும் பகுதியில் நிறுத்தக்குறிகளை ஏற்ற இடங்களில் அமை:—

அயோத்தியிலிருந்து உலக முழுவதையும் முறை பிறழாமல் ஆண்ட அரசர்களுள் தசரத சக்கரவர்த்தியார் ஒருவர் அவருக்கு மனைவியார் மூவர் கோசலை கைகேயி சுமித்திரை என்பவர்

அவருக்கு நெடுங்காலம் புத்திரப்பேறு உண்டாகவில்லை அதனால் அவர் மிகுந்த வருத்தமுற்றனர் தம்முடைய குலகுருவாகிய வசிட்டரை அழைத்து தம்முடைய மனத்துயரைத் தெரிவித்தனர் வசிட்டர் புத்திரப்பேறுண்டாக ஒரு யாகஞ் செய்தார் அதனால் அவருடைய மனைவியர் மூவரும் கருவுற்றனர் அவர்களுள் கோசலை இராமரை ஈன்றாள் கைகேயி பரதனைப் பெற்றாள் சுமித்திரை இலக்குமணனையும் சத்துருக்கினனையும் அளித்தனள் இந்நால்வரும் கற்க வேண்டுவனவற்றைக் கற்றுச் சிறந்து விளங்கினர் அப்போது விசுவாமித்திர முனிவர் தசரதரிடம் வந்தனர் தசரதர் அவரை வணங்கி உபசரித்து உங்களுக்கு யாது வேண்டும் என்று கேட்டார் விசுவாமித்திரர் அரசரே என் யாகத்தை அரக்கர்கள் வந்து அழிக்கின்றார்கள் என் யாகத்தைக் காத்தற்கு உம் முதல் மைந்தனாகிய இராமனை என்னுடன் அனுப்புதல் வேண்டும் என்றனர் தசரதருக்கு மற்ற மைந்தர்களைவிட

இராமரிடத்தில் அன்பு அதிகம் ஆதலின் அவர் விசுவாமித்திரரின் மொழியைக் கேட்டவுடன் மிகவும் மனங்கலங்கினர் பிறகு வசிட்டர் மொழியால் மனத் தெளிவுற்று இராமரையும் இலக்குமணனையும் விசுவாமித்திரரோடு அனுப்பினர் இராமரும் இலக்குமணனும் விசுவாமித்திரரோடு சென்று அரக்கர்களை அழித்து அவரது யாகத்தைக் காத்தார்கள் யாகம் முடிந்த பிறகு விசுவாமித்திர முனிவர் இராம இலக்குமணர்களை அழைத்துக்கொண்டு மிதிலைக்குச் சென்றார்.

7. பின் வரும் வாக்கியங்களில் உள்ள உணர்ச்சி வினா வாக்கியங்களைத் தனித்தனி குறிப்பிடுக :—

இம்மலர் எவ்வளவு அழகாயுள்ளது
அஞ்சாது என் முன் வந்த நீ யார்
உன்னால் இதனைச் செய்ய முடியுமோ
அந்தோ யான் அறியாமல் செய்துவிட்டேன்
பாம்பு பாம்பு என்னும் ஒலி கேட்டது
இராமனா இவ்வாறு செய்தான்
இந்தப் புத்தகத்தை நீ எங்கு வாங்கினாய்
இக்கணக்கிற்கு விடை யாது

VIII. தனிநிலை வாக்கியங்களைத் தொடர்நிலை வாக்கியமாக மாற்றுதல்

இராகவன் கடைக்குச் சென்றான். அவன் கற்கண்டு வாங்கினான்.

மேல் தனிநிலை வாக்கியங்கள் இரண்டு உள்ளன. அவற்றை, 'இராகவன் கடைக்குச் சென்றான் ; கற்கண்டு வாங்கினான்,' எனத் தொடர்நிலை வாக்கியமாக

மாற்றலாமன்றோ? தனிநிலை வாக்கியங்களுள் இருந்த இரண்டு எழுவாய்களுக்குப் பதிலாகத் தொடர்நிலை வாக்கியத்தில் ஒரே எழுவாய் வந்தது; அன்றியும், ஒன்றுக்கு மேற்பட்ட பயனிலைகள் வந்துள்ளன.

தொடர்நிலை வாக்கியத்தைத் தனிநிலை வாக்கியமாக மாற்றுதல்:

செங்குட்டுவன் வடநாடு சென்றான்; பத்தினிக் கடவுளுக்குக் கல்லெடுத்தான்; அக்கல்லைக் கங்கை நீரில் ஆட்டினான்; இறுதியில் வஞ்சி நகருக்குத் திரும்பினான்.

இது தொடர்நிலை வாக்கியம். இவ்வாக்கியத்தில் எழுவாய் ஒன்றும், பயனிலை பலவும் வந்துள்ளன. இத்தொடர்நிலை வாக்கியத்தையே, 'செங்குட்டுவன் வடநாடு சென்றான். அவன் பத்தினிக் கடவுளுக்குக் கல்லெடுத்தான். அவன் அக்கல்லைக் கங்கை நீரில் ஆட்டினான். அவன் இறுதியில் வஞ்சி நகருக்குத் திரும்பினான்,' என்று நான்கு தனிநிலை வாக்கியங்களாகப் பிரிக்கலாம்.

பயிற்சி:

I. பின் வரும் தனிநிலை வாக்கியங்களைத் தொடர்நிலை வாக்கியங்களாக மாற்றுக:—

1. அசோகர் கலிங்கருடன் போர் செய்தார். அசோகரே வெற்றி பெற்றார்.

2. இராமன் கடைக்குச் சென்றான். அவன் கடை மூடியிருப்பதைக் கண்டான். கவலை கொண்ட முகத்துடன் அவன் திரும்பினான்.

3. வீட்டிலுள்ள சிறுவர் காகங்களுடன் விளையாடினர். அவர்கள் அவற்றிற்கு வேளை தவறாமல் நல்ல இரை கொடுத்தார்கள்.

II. பின் வரும் வாக்கியங்களைத் தனிநிலை வாக்கியங்களாக மாற்றுக:—

1. பாரியிடம் பரிசில் பெறலாமென்று எண்ணிய மூவேந்தரும் பரிசிலர் போல உருமாறி அவனிடம் சென்றனர்.

2. பாண்டியன் சிறிதும் ஆராயாமல், கோவலன் கள்வனே என்று துணிந்து, அவனைக் கொல்லத்தன் ஏவலரைப் பொற்கொல்லனுடன் அனுப்பினான்.

3. ஆங்கிலேயர் ஜெர்மானியரைத் தாக்கினர்; பல நாட்கள் போரிட்டனர்; அந்நாட்டு மக்களை வென்றனர்.

IX. (அ) வல்லெழுத்து மிகுமிடங்கள்

1. அ + குதிரை = அக்குதிரை
அ + சுனை = அச்சுனை
இ + செயல் = இச்செயல்
இ + தலை = இத்தலை
உ + பக்கம் = உப்பக்கம்
எ + குளம் = எக்குளம் ?
எ + பையன் = எப்பையன் ?

'அ, இ, உ' என்னும் சுட்டெழுத்துக்களுக்குப் பின்னும் **'எ'** என்னும் வினாவெழுத்துக்குப் பின்னும் வல்லினம் மிகுந்தது.

2. அந்த + கடை = அந்தக்கடை
இந்த + செயல் = இந்தச்செயல்
எந்த + பழம் = எந்தப்பழம் ?
அப்படி + செய்தான் = அப்படிச்செய்தான்.
இப்படி + பேசினான் = இப்படிப்பேசினான்.
எப்படி + பாடினார் = எப்படிப்பாடினார் ?

'அந்த, இந்த, எந்த; அப்படி, இப்படி, எப்படி' என்னும் சொற்களுடன் புணரும் வல்லினம் மிகுந்தது.

3. கண்ணை + கவர்ந்தது = கண்ணைக்கவர்ந்தது.
கூடையை + செய்தான் = கூடையைச்செய்தான்.
பணத்தை + தந்தான் = பணத்தைத்தந்தான்.
என்னை + படைத்தான் = என்னைப்படைத்தான்.

இரண்டாம் வேற்றுமை உருபிற்குப் பின் வரும் வல்லினம் மிகுந்தது.

4. எனக்கு + கொடுத்தான் = எனக்குக்கொடுத்தான்.
உனக்கு + செய்தான் = உனக்குச்செய்தான்.
கந்தனுக்கு + தந்தான் = கந்தனுக்குத்தந்தான்.
சிவனுக்கு + பிள்ளை = சிவனுக்குப்பிள்ளை

நான்காம் வேற்றுமை உருபுக்குப் பின் வரும் வல்லினம் மிகுந்தது.

5. ஆடு + கால் = ஆட்டுக்கால்
கிணறு + தவளை = கிணற்றுத்தவளை
குருடு + பையன் = குருட்டுப்பையன்
ஆறு + பெருக்கு = ஆற்றுப்பெருக்கு

நிலை மொழிகளில் உள்ள டகர றகரங்கள் இரட்டித்து வருமொழியுடன் புணரும் பொழுது வல்லினம் மிகுந்தது.

(ஆ) வல்லெழுத்து மிகா இடங்கள்:

1. சோலை + கண்டேன் = சோலை கண்டேன்.
கூடை + செய்தான் = கூடை செய்தான்.
ஆடை + தந்தான் = ஆடை தந்தான்.
வீடு + பார்த்தேன் = வீடு பார்த்தேன்.

இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது இயல்பாயிற்று.

2. கல்லூரி + சென்முன் = கல்லூரி சென்முன்.
ஊர் + போனுன் = ஊர் போனுன்.

நான்காம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது இயல்பாயிற்று.

3. என்னெடு + சென்ற = என்னெடு சென்ற
உன்னெடு + பேசிய = உன்னெடு பேசிய
இராமனேடு + பார்த்த = இராமனேடு பார்த்த
அண்ணனேடு + தங்கை = அண்ணனேடு தங்கை

மூன்ரும் வேற்றுமையில் ஒடு, ஓடு என்னும் உருபுகள் விரிந்து நிற்கும் சொற்களுடன் புணரும் வல்லினம் மிகாது இயல்பாயிற்று.

4. வந்த + குதிரை = வந்த குதிரை
தந்த + செல்வம் = தந்த செல்வம்
கொடுத்த + தெய்வம் = கொடுத்த தெய்வம்
போன + பொருள் = போன பொருள்

அகர ஈற்றுப் பெயரெச்சத்தின் பின் வரும் வல்லினம் மிகாது இயல்பாயிற்று.

5. இராமனு + கண்டான் = இராமனு கண்டான்?
கண்ணனே + செய்தான் = கண்ணனே செய்தான்?
முருகனு + தந்தான் = முருகனு தந்தான்?
ஆசிரியரோ + பார்த்தார் = ஆசிரியரோ பார்த்தார்?
இவனே + கள்வன் = இவனே கள்வன்?

'ஆ ஓ, ஏ' என்னும் வினக்கள் இறுதியில் அமைந்த சொற்களின் பின் வரும் வல்லினம் மிகாது இயல்பாயிற்று.

6. ஒன்று + கொடு = ஒன்று கொடு.
ஒன்று + செய் = ஒன்று செய்.
இரண்டு + பார் = இரண்டு பார்.
இரண்டு + தா = இரண்டு தா.

மூன்று + கடவுள் = மூன்று கடவுள்
மூன்று + பொருள் = மூன்று பொருள்
நான்கு + பழம் = நான்கு பழம்
நான்கு + கடல் = நான்கு கடல்
ஐந்து + சுடர் = ஐந்து சுடர்
ஐந்து + பழம் = ஐந்து பழம்
ஆறு + சொல் = ஆறு சொல்
ஆறு + காசு = ஆறு காசு
ஏழு + கடல் = ஏழு கடல்
ஏழு + பெயர் = ஏழு பெயர்
ஒன்பது + தலை = ஒன்பது தலை
ஒன்பது + படம் = ஒன்பது படம்

எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்களைத் தவிர, ஏனைய எட்டு உயிரீற்று எண்ணுப் பெயர்களுக்கு முன் வரும் வல்லினம் மிகாது இயல்பாயிற்று.

பயிற்சி :

1. எங்தெந்த வேற்றுமையுருபுகளுக்குப் பின் வரும் வல்லினம் மிகும்?

2. வல்லெழுத்து மிகாத இடங்களில் நான்கனைக் குறிப்பிடுக.

3. மூன்றும் வேற்றுமையின் எவ்வெவ்வுருபுகளுக்கு முன் வல்லினம் மிகாது?

4. களிற்றுக்கணம்
மாட்டுக்கால்
குருட்டுக்கண்
ஆட்டுத்தலை

மேலே காட்டப்பட்டுள்ள உதாரணங்களில் வல் லினம் மிகுந்துள்ளது. அவற்றிலிருந்து வல்லினம் மிகும் இடத்திற்கு ஒரு விதி கூறுக.

5. அகரவீற்றுப் பெயரெச்சங்களுக்குப் பின் வரும் வல்லினம் மிகாது. இதற்கு இரண்டு உதாரணங்கள் தருக.

6. ஒன்று முதல் பத்து வரையிலுள்ள எண்ணுப் பெயர்களில் எவற்றுடன் புணரும் வல்லினம் மிகும்?

7. புணர்த்திக் காட்டுக:—

நல்ல + பையன், இப்படி + பாடு, புலவருக்கு + பொன், நின்னொடு + பேசி, இராமனு + தந்தான், நான்கு + படம், ஏழு + சொல்.

III. கட்டுரை

உலகத்தில் பல பொருள்கள் இருக்கின்றன; பல செயல்கள் நடக்கின்றன. ஒவ்வொன்றைப் பற்றியும் ஆராய்ந்து கோவையாகப் பிறர்க்கு விளங்கும்படி எழுத நீங்கள் பழகவேண்டும். ஏதே னும் ஒன்றைப்பற்றி ஆராய்ந்து சொற்களைச் சேர்த்து எழுதுவதே கட்டுரையாகும். உதாரண மாகத் தென்னை மரத்தை எடுத்துக்கொள்வோம். தென்னை மரத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். அது எத்தகைய இடத்தில் வளரும் என்பதும், அதன் தோற்றம் எவ்வாறு உள்ளது என்பதும், அதன் உறுப்புக்களும், அதன் உபயோகங்களும் உங்களுக்குத் தெரியும். அவற்றையெல்லாம் தொகுத்துக் கோவையாக எழுதுவதற்கு நீங்கள் பயிற்சி பெற வேண்டுமல்லவா ? இவ்வாறே நீங்கள் பார்க்கும் பொருள்கள், காணும் காட்சிகள், ஊரில் நடக்கும் நிகழ்ச்சிகள் முதலியவற்றைப் பற்றிக் கோவையாக எழுத நீங்கள் பழக வேண்டும். இவ் வாறு எழுதப் பெறுவனவே கட்டுரை எனப்படும்.

கட்டுரை எழுதத் தொடங்குவதற்குமுன் நீங்கள் செய்ய வேண்டுபவை :

1. எதைப்பற்றி எழுதுவது என்பதை உணர் தல் : ஆசிரியர் உங்களுக்கு இதனைக் கூறுவார். ஆசிரியரே அப்பொருளைப்பற்றி எழுத வேண்டிய வற்றை உங்களுக்குப் பொதுவாகக் கூறுவார்.

2. கட்டுரை எழுதவேண்டிய பொருளைப்பற்றிச் சிந்தித்தல் : ஆசிரியர் சொல்லிய குறிப்புக்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். புதிய கருத்துக்கள்

உங்களுக்குத் தோன்றினுல், அவற்றைக் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

3. இன்ன பொருளைப்பற்றி எழுத வேண்டும் என்பதை ஆசிரியர் சில சமயங்களில் முதல் வாரத்திலே, இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னுகவே கூறிவிடுவார். அத்தகைய சந்தர்ப்பங்களில், எழுத வேண்டிய பொருளைப் பற்றிச் சிந்திக்க உங்களுக்கு நேரம் மிகுதியாகக் கிடைக்கும். உங்களுடைய பெற்ரோர்கள், உறவினர்கள் முதலியவர்களிடமிருந்து கூட நீங்கள் சில கருத்துக்களை அறிந்துகொள்ளலாம்.

4. கட்டுரை எழுதத் தொடங்குமுன், கட்டுரையில் விரித்து எழுதப் போகும் சில முக்கியமான குறிப்புக்களைக் குறித்து வைத்துக்கொள்வது நலம். இதனைக் குறிப்புச் சட்டகம் என்பார்கள். தென்னை மரத்தைப் பற்றிய ஒரு குறிப்புச் சட்டகம் தயாரிக்கும் முறை வருமாறு :—

(1) தென்னை மரம் வளரும் இடம்: மணற்பாங்கான இடம், கடற்கரை, ஆற்றங்கரைகளில் செழித்து வளரும்.

(2) தென்னை மரத்தின் தோற்றம்: அடி முதல் நுனி வரையில் - வேர் - அடி மரம் - உயரமாக வளர்தல் - மட்டைகள் - பாளை - குரும்பை - குலை.

(3) தென்னை மரத்தின் உபயோகங்கள் : சிறு வாய்க்கால்களுக்குப்பாலம் - கீற்று முடைதல்- தேங்காய் - இளநீர் - முன்பு கள் இறக்கி வந்தனர் · ஓலையிலுள்ள ஈர்க்கை விளக்குமாருகச் செய்தல் - தேங்காயின் உபயோகம் - மேல் மட்டையிலிருந்து

கயிறு திரித்தல் முதலியன. ஆகவே, தென்னை மரத்தைப் பற்றி எழுதும் கட்டுரையில் பொதுவாக மூன்று பத்திகள் இருக்கலாம். தென்னை மரத்தின் படத்தையும் வரைந்துகொள்ளலாம்.

4. நீங்கள் கண்ட காட்சிகள், திருவிழாக்கள், பண்டிகைகள் முதலியவற்றைப்பற்றிக் கட்டுரை எழுதுவதற்கும் குறிப்புச் சட்டகம் தயாரித்துக் கொள்வது நல்லது.

5. சிறு கதைகளையும் சுருக்கி எழுதப் பழக வேண்டும். ஆசிரியர் சொல்லும் கதைகள், உங்களுக்குத் தெரிந்த கதைகள் முதலியவற்றையும் எழுதுவது நலம். ஒவ்வொரு முக்கிய நிகழ்ச்சிக்கும் ஒவ்வொரு பத்தி அமைய வேண்டும். கதைகளில் வரும் மக்களின் பெயர், ஊரின் பெயர் முதலியவற்றை முதலிலேயே குறித்து வைத்துக்கொள்ளவேண்டும்.

கட்டுரை எழுதும் பொழுது நீங்கள் கவனிக்க வேண்டுபவை :

1. குறிப்புச் சட்டகத்தில் காணப்படும் ஒவ்வொரு பிரிவையும் ஒவ்வொரு பத்தியில் விரித்து எழுத வேண்டும். ஒவ்வொரு முக்கியமான கருத்திற்கும் ஒவ்வொரு பத்தி அமைய வேண்டும் என்பது பொது விதி.

2. கட்டுரையில் முன்னுரை, உடம்பு அல்லது பொருள், முடிவுரை என்னும் மூன்று பிரிவுகள் இருத்தல் வேண்டும். எடுத்துக்கொண்ட பொருளைப் பற்றி முன்னே கூற வேண்டிய குறிப்புக்களைச் சுருக்கமாக முன்னுரையில் எழுத வேண்டும். கட்டுரையின் உடம்பில், எடுத்துக்கொண்ட பொருளைப்பற்றி விரிவாக எழுத வேண்டும்.

கட்டுரையிலிருந்து நீங்கள் அறிந்துகொள்ளும் இன்றியமையாத கருத்துக்கள், நீதிகள், கட்டுரையின் பயன் முதலியவற்றை முடிவுரையில் மிகச் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டும்.

3. ஒரு பத்திக்கும் மற்றொரு பத்திக்கும் நடுவே இடை வெளி விடுதல் வேண்டும்.

4. எழுத்துத் தெளிவாய் இருக்க வேண்டும். கட்டுரையை ஆசிரியர் கஷ்டமில்லாமல் படிப்பதற்கு ஏற்றவாறு உங்கள் கையெழுத்து அமைய வேண்டும்.

5. நிறுத்தக்குறிகளை ஏற்ற இடத்தில் போட வேண்டும். அப்பொழுதுதான் உங்கள் கருத்துப் பிறருக்கு எளிதில் விளங்கும்.

6. ஒரு சொல்லுக்கும் மற்றொரு சொல்லுக்கும் நடுவில் ஏற்ற இடை வெளி விட வேண்டும். ஒன்றாகப் புணர்ந்த சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்.

7. ஒரு வரியின் முடிவில் சொற்கள் அரை குறையாய் நிற்றல் கூடாது. உதாரணமாக 'இருந்தான்' என்ற சொல்லில் ஒரு வரியின் முடிவில் 'இரு' என்ற பகுதியும், அடுத்த வரியின் தொடக்கத்தில் 'ந்தான்' என்ற பகுதியும் இருத்தல் கூடாது. ஒரு வரியின் ஒரு சொல் முடிவு பெருது போல இருந்தால், அதை மறு வரியிலேயே தொடங்குதல் நல்லது.

8. கட்டுரையின் வாக்கியங்கள் உங்கள் சொந்த வாக்கியங்களாக இருக்க வேண்டும்.

9. ஒரு வரியில் எழுதிய எழுத்தை அடிக்க நேரிட்டால், சரியான எழுத்தை அதற்கு மேலே நுணுக்கி எழுதாமல், தவறானதை அடித்துவிட்டுப் பக்கத்தில் எழுத வேண்டும்.

10. கொச்சைச் சொற்களை உபயோகிக்கக் கூடாது. ஒரு கொச்சைச் சொல்லின் சரியான உருவம் உங்களுக்குத் தெரியாவிட்டால், ஆசிரியரைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

கட்டுரையில் பல விதங்கள் உள்ளன. கதை எழுதுதல், சிறிய ஒரு கதையை விளக்கி விரிவாக எழுதுதல், விரிவாக உள்ள ஒரு கதையைச் சுருக்கி எழுதுதல், உரையாடல் முறையில் எழுதுதல், படத்தைப் பார்த்து அதில் உள்ளவற்றை விரித்து எழுதுதல், பல வகையான கடிதங்கள் எழுதுதல், கண்ட காட்சி, திருவிழா, பள்ளிக்கூடத்தில் நிகழ்ந்த ஒரு கொண்டாட்டம், பண்டிகை, பார்த்த பொருள்கள் முதலியவை பற்றி எழுதுதல் முதலிய யாவும் கட்டுரைகளே.

1. நூல் நிலையப் புத்தகங்களைப் படித்துக் கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்தல் :

பள்ளிக்கூடங்களில் சாதாரணமாக இரு வகை நூல் நிலையங்கள் இருக்கும். அவை வகுப்பு நூல் நிலையமும், பொது நூல் நிலையமுமாகும். வகுப்பு நூல் நிலையத்தில் உங்களுக்கு ஏற்ற சிறு புத்தகங்கள் வைக்கப் பட்டிருக்கும். அப்புத்தகங்களில் எதை வேண்டுமானாலும், நீங்கள் படிக்கலாம். உங்களுடைய தகுதிக்கு ஏற்பப் பொறுக்கி எடுக்கப்பட்ட புத்தகங்களையே வகுப்பு நூல் நிலையத்தில் வைத்திருப்பார்

கள். பொது நூல் நிலையத்தில் உங்கள் பள்ளிக் கூடத்தில் உள்ள எல்லா மாணவர்களுக்கும், பயன் படக்கூடிய புத்தகங்களும், ஆசிரியர்களுக்குத் தேவையான புத்தகங்களும் வைக்கப்பட்டிருக்கும். வகுப்பு நூல் நிலையத்தை நீங்கள் நன்கு பயன் படுத்திக்கொள்ள வேண்டும். அங்குள்ள புத்தகங் களுள் எவற்றைப் படிக்க முடியுமோ, அவற்றை நீங்கள் படிக்க வேண்டும். உங்களுக்கு விருப்பமான புத்தகத்தை நீங்களே தேர்ந்தெடுத்துக்கொள்ள லாம்; ஆசிரியரையும் கேட்கலாம். விடுமுறை நாட் களில் படிப்பதற்கு வேண்டும் புத்தகத்தை ஆசிரி யரைக் கேட்டு வாங்கிக்கொண்டு போகலாம். 'நூல் நிலைய வாசிப்புக் குறிப்பு' ஒன்று உங்களிடம் இருத்தல் வேண்டும்.

நூல் நிலையப் புத்தகங்களைப் படிக்கும் பொழுது நீங்கள் செய்ய வேண்டுபவை :

1. உங்களுக்கு விருப்பமான கதைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவற்றை மற்றொரு முறை படித்து, கதைகளின் முக்கியமான நிகழ்ச்சி களையும், அவற்றில் வரும் பெயர்களையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அவற்றைப் பிறகு கட்டுரைகளாக எழுதலாம். முக்கியமான குறிப்புக் களை உங்கள் நூல் நிலையக் குறிப்பில் குறித்துக் கொள்ள வேண்டும்.

2. அழகிய வருணனைப் பகுதிகளைக் கண் டால், அவற்றை அப்படியே நூல் நிலையக்குறிப்பில் எழுதிக்கொள்ள வேண்டும்.

3. நீங்கள் படிக்கும் புத்தகங்களில் வரும் நீதி கள், பழமொழிகள், மேற்கோள்கள் முதலிய

வற்றைத் தனித்தனியே குறிப்புப் புத்தகத்திற் குறித்துக்கொள்ள வேண்டும். இத்தகைய வருணனைகளும், நீதிகளும், மேற்கோள்களும் நீங்கள் கட்டுரை எழுதும் பொழுது பெரிதும் பயன்படும்.

4. முக்கியமான சொற்றொடர்கள் எவ்வாறு வாக்கியத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளன என்பதை நன்கு கவனிக்க வேண்டும். அத்தகைய வாக்கியங்களைக் குறிப்புப் புத்தகத்திற் குறித்துக்கொள்வதும் நல்லது.

5. நீங்கள் படிக்கும் பகுதியில் வந்துள்ள புதிய சொற்களையும் தனியாகக் குறித்து வைத்துக் கொள்ளுதல் நல்லது.

ஒரு புத்தகத்தைப் பள்ளிக்கூடத்திலிருந்து சாதாரணமாக வாரக் கடைசியில் எடுத்துக்கொண்டு வருவது நலம். அதனைச் சனி, ஞாயிறுகளில் படித்து முடித்துவிட வேண்டும். இத்தகைய நூல் நிலையப் புத்தகப் படிப்பினால் நீங்கள் பெரும்பயன் அடையலாம்: உங்கள் மொழி நடை திருந்தும்; திருத்தமான தமிழை எழுத நீங்கள் நல்ல பயிற்சியை அடைவீர்கள்.

2. இனிய கதைகளைத் தேர்ந்தெடுத்தல் :

குறிப்பு : கீழே காணப்படும் சிறு கதைகளைப் படியுங்கள். அவற்றுள் நீங்கள் விரும்பும் கதையைத் தேர்ந்தெடுங்கள். அக்கதையை உங்கள் சொந்த வார்த்தைகளால் எழுதுங்கள். கதைகளில் காணப்படும் நீதிகள், பழமொழிகள், வருணனைகள், முக்கியமான சொற்றொடர்கள், புதிய சொற்கள் முதலியவற்றைத் தனித்தனி எழுதுங்கள்.

(அ) தன் கையே தனக்கு உதவி.

ஒரு கிராமத்திற் பல சோளக்கொல்லைகள் இருந்தன. அவற்றுள் ஒன்றில் ஒரு வானம்பாடி கூடு கட்டியிருந்தது. அக்கூட்டில் வானம்பாடியும், அதன் மூன்று குஞ்சுகளும் வாழ்ந்து வந்தன. வானம்பாடி தினந்தோறும் வெளியே பறந்து சென்று, தன் குஞ்சுகளுக்கு வேண்டும் இரையைக் கொண்டு வரும்.

இப்படி இருக்கும்பொழுது சோளக் கதிர்கள் முற்றத் தொடங்கிவிட்டன. ஒரு நாள் வானம்பாடி இரை தேடுவதற்காக வெளியே சென்றிருந்தது; அதன் குஞ்சுகள் மட்டும் கூட்டில் தங்கியிருந்தன. அப்பொழுது கொல்லைக்குச் சொந்தக்காரனாகிய குடியானவன் அங்கு வந்தான்; கதிர்கள் முற்றியிருப்பதைக் கண்டான். அவன், 'கதிர்கள் முற்றிவிட்டன. நாளையாவது, நாளைக்கு மறுநாளாவது இவற்றை அறுவடை செய்துவிடவேண்டும். நமக்கு நண்பர் பலர் இருக்கின்றனர். அவர் உதவியினால் அறுவடை செய்துவிடலாம்,' என்று சொல்லிக் கொண்டே போய்விட்டான். குடியானவன் சொன்னவற்றை வானம்பாடியின் குஞ்சுகள் கேட்டுக்கொண்டிருந்தன.

வெளியில் சென்றிருந்த வானம்பாடி திரும்பி வந்தது. உடனே குஞ்சுகள் எல்லாம் நடுக்கத்துடன் தாய்ப்பறவையை நோக்கி, 'அம்மா, நாம் விரைவில் இவ்விடத்தை விட்டு ஓடிவிட வேண்டும். இந்தக் கொல்லையின் சொந்தக்காரன், தன் நண்பர்களின் உதவியைக்கொண்டு, சோளக் கதிர்களை அறுவடை

செய்யப் போவதாகச் சொல்லிப் போனான்,' என்றன.

அது கேட்ட தாய்ப்பறவை, 'குஞ்சுகளே அஞ்சாதீர்கள்! இந்தக்கொல்லையில் உள்ள சோளத்தை அறுப்பதற்குக் குடியானவன் தன் நண்பர்களை நம்பியிருக்கும் வரையில் நமக்குப் பயமில்லை. இன்னும் சில நாட்கள் அறுவடை நடைபெறாது,' என்று சொல்லித் தேற்றியது. வானம்பாடி கவலை இல்லாமல் இரை தேடச் சென்றுகொண்டிருந்தது.

நாட்கள் பல ஆயின. வானம்பாடி சொல்லியது உண்மையாயிற்று. அக்கொல்லையின் சொந்தக்காரனுக்கு உதவி செய்ய நண்பர் எவரும் முன் வரவில்லை. சோளமோ, நன்றாக முற்றிவிட்டது; இந்நிலையில் குடியானவன் அங்கு வந்தான்; சோளத்தை உடனே அறுக்கத் தொடங்க வேண்டும் என்பதை உணர்ந்தான். எனவே அவன், 'ஐயோ! சோளமெல்லாம் வீணாகப் போய்விடும் போல இருக்கிறதே! நாம் பிறருடைய உதவியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது தவறு. நாமே நாளைக்குத் தவறாமல் வந்து சோளத்தை அறுவடை செய்ய வேண்டும்,' என்று சொல்லிச் சென்றான்.

அன்று மாலை வானம்பாடி வழக்கம்போலத் தன் கூட்டிற்கு வந்தது. வந்தவுடன் குஞ்சுகள், குடியானவன் சொல்லிச் சென்றதை அப்படியே கூறின. அது கேட்ட தாய்ப்பறவை, 'குஞ்சுகளே, இனி நாம் தாமதிக்கக்கூடாது. குடியானவன் இப்பொழுது தன் நண்பர்களின் உதவியைத் தேடவில்லை; தன் வேலையைத் தானே செய்ய முடிவு பண்ணிவிட்டான். 'தன் கையே தனக்கு உதவி,'

என்பதை அவன் அறிந்துகொண்டான். எனவே, நாளைக்கு அறுவடை நடப்பது நிச்சயம்,' என்று சொல்லித் தன் குஞ்சுகளுடன் வேறு இடம் சென்றுவிட்டது.

வினுக்கள்

1. சோளக் கொல்லைக்கு வந்த குடியானவன் முதலில் என்ன சொல்லிவிட்டுச் சென்ருன்?

2. வானம்பாடி தன் குஞ்சுகளுடன் முதலிற்கூறியவற்றைக் கேட்டு ஏன் பயப்படவில்லை?

3. சோளங்கள் ஏன் பல நாட்கள் அறுக்கப்படவில்லை?

4. தானே அறுவடை செய்ய வேண்டும் என்று குடியானவன் முடிவுக்கு வந்தது ஏன்?

5. இக்கதையிலிருந்து நீங்கள் உணர்ந்துகொள்ளும் நீதி யாது?

(ஆ) மைதாஸ் என்னும் மன்னன்

முன்ெனாரு காலத்தில் மைதாஸ் என்னும் ஒரு மன்னன் இருந்தான். அவன் பெரிய உலோபி. அவனிடம் பெருஞ்செல்வம் இருந்தது; பொன்னும் மணியும் ஏராளமாய் இருந்தன. இருந்தும், அவன் எவருக்கும் தன் பொருளில் சிறிதும் கொடுப்பதில்லை. பொன்னைப் பார்த்துப் பார்த்து மகிழ்வதே அவன் வேலை. 'மேலும் மேலும் பொன்னைச் சேர்ப்பதற்கு வழியில்லையே!' என்று அவன் அடிக்கடி கவலைப்படுவான்.

ஒருமுறை மைதாஸ் மன்னன் ஒரு முனிவரைப் பார்த்தான். மன்னன் அவரை வணங்கினன். அம்

முனிவர் அவனைப் பார்த்து, 'நீ வேண்டும் வரத்தை நான் கொடுக்கிறேன். உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள்,' என்றார். மைதாஸ் உடனே, 'நான் எதைத் தொட்டாலும் அது பொன்னாக மாற வேண்டும். இந்த வரத்தை நீங்கள் கொடுக்க வேண்டும்,' என்று கேட்டான். முனிவரும் புன்சிரிப்புடன், 'சரி. அப்படியே ஆகட்டும். நீ எதைத் தொட்டாலும் பொன்னாக மாறிவிடும்,' என்று வரம் கொடுத்துப் போய்விட்டார்.

மைதாஸ் உடனே தன் அரண்மனைக்குச் சென்றான். அவன் உபயோகிக்கின்ற பொருள்களுள் ஒவ்வொன்றையும் தொட்டுப் பார்த்தான். எல்லாம் பொன்னாய் மாறிவிட்டன. அவனுக்கு அப்பொழுது தாகமும், பசியும் மிகுதியாய் இருந்தன. உடனே தண்ணீரும் ஆப்பிள் பழமும் கொண்டு வரும்படி தன் வேலைக்காரனுக்குக் கட்டளையிட்டான். வேலைக்காரன் உடனே அவற்றைக் கொண்டு வந்தான். அரசனுக்குத் தாகம் மிகுதியாய் இருந்ததால், கிண்ணத்திலிருந்த நீரை முதலில் குடிக்க விரும்பி, கிண்ணத்தைக் கையில் எடுத்தான். அந்தக் கிண்ணமும் அதிலிருந்த நீரும் பொன்னாய் மாறிவிட்டன. ஆப்பிளைக் கையிலெடுத்தான். அதுவும் பொன்னாகிவிட்டது. அரசனுக்கோ, பசியும் தாகமும் மிகுதியாய் இருந்தன. என்ன செய்வதென்பது அவனுக்குத் தோன்றவில்லை. அவன் யோசித்துக்கொண்டே நாற்காலியில் அமர்ந்தான்.

அப்பொழுது அவனுடைய அருமை மகள் கையில் ஒரு பூங்கொத்துடன் ஓடி வந்தாள். அக்கொத்தில் இருந்த பூக்களின் மணம் எங்கும்

வீசியது. அம்மகள் மகிழ்ச்சியோடு அதனைத் தன் தந்தையினிடம் கொடுத்தாள். அரசன் அதைக் கையில் வாங்கினான். அவ்வளவுதான்! அந்தப் பூங்கொத்தும் பொன்னாய் மாறிவிட்டது. அதிலிருந்து வாசனை வீசவில்லை. உடனே மகள், தந்தையைப் பார்த்து, 'ஐயையோ! என் பூக்கள் பொன்னாய் மாறிவிட்டனவே! இவற்றிலிருந்து மணம் வீசவில்லையே!' என்று அழுதாள். அரசன் தன் மகளைத் தேற்றுவதற்காக அவளுடைய முதுகை மெதுவாகத் தடவினான். என்ன ஆச்சரியம்! அவனுடைய அருமை மகளும் பொன்னாய் மாறிவிட்டாள். பார்த்தான் அரசன்! அவனுக்கு அழுகையும் ஆத்திரமும் வந்தன. அவன் கண்ணைக் கையால் பொத்திக்கொண்டே அழத்தொடங்கி விட்டான். அவனுக்குப் பொன்னைக் கண்டாலே இப்பொழுது வெறுப்பாய் இருந்தது.

இந்நிலையில் அரசனுக்கு வரம் கொடுத்த முனிவர், அங்கு வந்தார். அவர் அரசனைப் பார்த்து, 'அன்பா, நீ சந்தோஷமாக இருக்கிறாயா? பொன் மிகுதியாகக் கிடைத்ததா?' என்று கேட்டார். அரசன் அழுதுகொண்டே அவருடைய கால்களில் விழுந்து, 'பெரியவரே, நீங்களேதான் என்னைக் காப்பாற்ற வேண்டும். நான் பேராசை கொண்ட மூடனாய் இருந்தேன். எனக்குப் புத்தி வந்து விட்டது. எனக்குப் பொன்னே வேண்டா. எனக்குப் பசியும் தாகமும் மிகுதியாய் உள்ளன. என்னுடைய அருமை மகளும் பொற்சிலையாய் இருக்கின்றாள். எனக்கு நீங்கள் கொடுத்த வரத்தைத்

தயவு செய்து மாற்றிவிடுங்கள்,' என்று சொல்லிக் கதறினன்.

முனிவர் அரசனிடம் இரக்கம் கொண்டார்; கமண்டலத்திலிருந்த நீரை அவனிடம் கொடுத்தார்; அவன் தொட்டுப் பொன்னுக்கிய பொருள்களின் மீது தெளிக்கச் சொன்னர். அரசனும் அவ்வாறே செய்தான். அவனுடைய பெண் பழைய உருவத்தைப் பெற்ருள். அவனுல் பொன்னுக்கப்பட்ட பொருள்களெல்லாம் பழைய நிலையை அடைந்துவிட்டன. முனிவர் தாம் அரசனுக்குக் கொடுத்த வரமும் பலியாது இருக்கும்படி அருள்செய்து, அவனுக்குப் பல அறிவுரைகள் கூறிச் சென்ருர். அது முதல் அரசன் தன் பேராசைக் குணத்தை விட்டுவிட்டான்; தானதருமங்கள் செய்யத் தொடங்கினன்.

வினுக்கள்:

1. மைதாஸ் மன்னன் எப்படிப்பட்டவன்?
2. முனிவர் அரசனிடம் கூறியவை யாவை?
3. அரசன் முனிவரிடம் கேட்ட வரம் யாது?
4. ஏன் அரசனுல் நீரைக் குடிக்க முடியவில்லை?
5. மைதாஸின் மகள் அழத் தொடங்கியது ஏன்?
6. மைதாஸின் மகள் பொற்சிலையாய் மாறியதுஎதனுல்?
7. அரசன் அழத் தொடங்கியது ஏன்?
8. அரசன் முனிவரைக் கேட்ட இரண்டாவது வரம் யாது?
9. இக்கதையிலிருந்து நீங்கள் அறிந்துகொள்ளும் நீதி யாது?
10. இந்தக் கதைக்குப் பொருத்தமாக வேறு ஒரு தலைப்புக் கூறுக.

(இ) 'எண்ணித் துணிக கருமம்.'

ஒரு பெரிய காட்டில் ஒரு குள்ளநரி வாழ்ந்து வந்தது. அதற்கு ஒருநாள் மிகவும் தாகமாய் இருந்தது. அப்பொழுது நல்ல வெயிற்காலம்; எவ்விடத்திலும் தண்ணீர் சிறிதுகூட இல்லை. நரி பல இடங்களுக்கு ஓடியது. வழியில் ஒரு பாழ்ங்கிணறு இருந்தது. அதில் சிறிது தண்ணீர் இருந்தது. நரி முன் பின் சிந்திக்காமல் அக்கிணற்றில் குதித்து நீரைக் குடித்தது. ஆனல், திரும்பி வெளியில் வர அதனல் முடியவில்லை. அதனல், அது கவலையுடன் அங்கு இருந்து ஊளையிட்டது.

அப்பொழுது அவ்வழியே சென்றுகொண்டிருந்த ஒரு வெள்ளாடு அக்கிணற்றிற்கு அருகில் வந்து, கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தது. நரி வெள்ளாட்டைப் பார்த்து மகிழ்ச்சியுடன், 'நண்பா, சௌக்கியமா? ஏன் உன் முகம் வாடியிருக்கிறது?' என்று கேட்டது. வெள்ளாடு, 'எனக்குத் தாகம் மிகுதியாய் இருக்கிறது. தண்ணீரைத் தேடிக் கொண்டு போகிறேன். உன் குரல் கேட்கவே இங்கு வந்து எட்டிப் பார்த்தேன்,' என்றது. உடனே நரி, 'ஐயோ! பாவம்! தண்ணீரில்லாமல் யாராவது கஷ்டப்பட்டால் அவருக்கு உதவி செய்யலாம் என்ற எண்ணத்துடனே தான் நான் ஊளையிட்டேன். நீ வந்தாய்! உனக்குத் தண்ணீர் வேண்டுமா?' என்றது. வெள்ளாடு, 'கிணற்றுக்குள் தண்ணீர் இருக்கிறதா?' என்று கேட்டது. நரி, 'ஆகா! வேண்டுந் தண்ணீர் இருக்கிறது! நான் குடித்துக்கொண்டேயிருக்கிறேன். உனக்கும் நீர்

வேண்டுமானால், வா; வேண்டும் வரை குடி; என் அருமை நண்பனுக்கு இல்லாமலா! வா,' என்று நயமாகக் கூறியது. வெள்ளாடு உடனே முன்பின் யோசியாமல் அப்பாழ்ங்கிணற்றுக்குள் குதித்து விட்டது.

வெள்ளாடு குதித்ததுதான் தாமதம்! நரி உடனே அதன் முதுகில் தாவி, அதன் கொம்பில் நின்று எழும்பிக் குதித்து, கிணற்றின் மேலே ஏறி விட்டது. கிணற்றின் மேலிருந்தவாறே நரி வெள் ளாட்டைப் பார்த்து, 'நண்பா, நீ வேண்டுமளவு நீரைக் குடித்துக்கொண்டு அங்கேயே சௌக்கிய மாய் இரு! நான் போய் வருகிறேன்!' என்று சொல்லிக்கொண்டே ஓடிவிட்டது.

அப்பொழுதுதான் வெள்ளாட்டிற்குத் தான் செய்த தவறு இன்னதென்பது தெரிந்தது. அது, 'அந்தோ! துஷ்டனுடைய நயமான பேச்சில் மயங்கி, முன் பின் யோசியாமல் கிணற்றுக்குள் குதித்துவிட்டேனே! என்னைப் போன்ற மூடர் உலகில் உண்டோ! நான் இங்கேயே இறக்கத்தான் வேண்டும்! எப்படி மேலே ஏறுவது?' என்று சொல்லி வருந்தியது.

வினாக்கள் :

1. நரி பாழ்ங்கிணற்றில் குதித்தது ஏன்?

2. வெள்ளாடு நரியைப் பார்த்து என்ன கேட்டது?

3. நரியின் நயமான பேச்சை எழுதுக.

4. நரியினால் எவ்வாறு பாழ்ங்கிணற்றிலிருந்து வெளியேவர முடிந்தது?

5. வெள்ளாடு தன்னை முட்டாள் என்று சொல்லிக் கொண்டது ஏன்?

6. இக்கதையிலிருந்து நீங்கள் அறிந்துகொள்ளும் நீதி யாது?

7. 'எண்ணித் துணிக கருமம்,' என்ற தலைப்பு இக் கதைக்கு எவ்வாறு பொருந்தும்?

(ஈ) பேகனின் கொடைத்திறம்

பேகன் என்பவன் தமிழ் நாட்டில் முன் காலத்தில் வாழ்ந்து வந்த வள்ளல். கடையேழு வள்ளல்களுள் பேகனும் ஒருவன். தன்னிடம் வந்து இல்லையென்று கேட்பவர்களுக்கு அவன் இல்லையென்று சொல்வதே இல்லை. புலவர்களின் பாடல்களைக் கேட்பதும், அவர்களுடைய மனம் மகிழப் பொருள் கொடுப்பதும் அவனுடைய முக்கியமான பொழுது போக்காகும். தன்னிடம் வரும் பரிசிலர்களின் குறிப்பறிந்து கொடை அளிப்பதில் அவன் வல்லவன். சங்கப்புலவர் பலர் அவனைப் பாடியிருக்கின்றனர்.

பேகன் ஒரு நாள் ஒரு மலையின்மேல் சென்று கொண்டிருந்தான். அப்பொழுது நல்ல குளிர் காலம். வெயிற்காலத்திலேயே மலையின் மேல் குளிர் பொறுக்க முடியாமல் இருக்கும். குளிர் காலத்தில் கேட்க வேண்டுமா? பேகன் குளிரைப் பொருட்படுத்தவில்லை. அவன் ஒரு நல்ல போர்வையால் தன் உடம்பைப் போர்த்துக்கொண்டிருந்தான். அப்போர்வை மிக விலையுயர்ந்தது.

அம்மலையில் அடிக்கடி மழை பெய்வதுண்டு. அதனால், எங்கும் மரங்களும், செடிகளும், கொடி

களும் செழித்து வளர்ந்திருந்தன. எப்புறம் திரும்பினலும் காணப்படும் பசுமையான தோற்றம் காண்பார் மனங்களைக் கவரும். கரிய மலையிலிருந்து சொரியும் வெண்மையான அருவியின் ஓசை கேட்பதற்கு மிக இனிமையாய் இருக்கும். இத்தகைய இயற்கைக் காட்சிகளைக் கண்டவாறே சென்று கொண்டிருந்த பேகன், கடுங்குளிரைக்கூடக் கவனிக்கவில்லை. மலையின்மீது படிந்திருந்த மேகக் கூட்டங்களினூடே அவன் மகிழ்ச்சியோடு சென்றான்.

மேகங்களைக் கண்டால் மயில்களுக்கு மகிழ்ச்சி மிகுதியாகும். பேகன் சென்ற வழியில் ஒரு மயில் தன் தோகையை விரித்து ஆடிக்கொண்டிருந்தது. அது அப்பொழுது பெருமகிழ்ச்சியுடன் இருந்தது. அதனல் அது கூவியது. கூவிய மயிலைக் கண்டான் பேகன்; மயிலுக்குக் குளிர் மிகுதியாய் இருப்பதனலேயே அது கூவியது என்று எண்ணினன்; சிறிதும் ஆராயவில்லை; உடனே தன்மேல்போர்த்திருந்த விலையுயர்ந்த போர்வையை எடுத்தான்; அம்மயிலுக்குப் போர்த்தி விட்டான். 'அவன் பிறகு குளிரினல் வருந்தவில்லையா?' என்று நீங்கள் கேட்கலாம். உண்மைதான். அவனைக் குளிர் வாட்டியது உண்மையே. ஆனல், அவன் அதைக் கவனித்தால் தானே! 'மயிலினுடைய குறிப்பறிந்து, அதற்குப் போர்வையை அளித்து, அதனுடைய குளிரைப் போக்கினேமே!' என்ற பெருமகிழ்ச்சியே அவனது உள்ளத்தில் நிரம்பியிருந்தது. அம்மகிழ்ச்சியுடனே அவன் நடந்து சென்றுவிட்டான். அவனைச் சிறந்த கொடையாளி என்று சொல்லுவதில் தவறுண்டோ?

வினாக்கள்

1. பேகன் என்பவன் யாவன்?

2. கடையெழு வள்ளல்களுள் பேகனைத் தவிர்த்து வேறு யாரேனும் ஒருவனுடைய பெயரைக் குறிப்பிடுக.

3. பேகன் பெரும்பாலும் எவ்வாறு பொழுது போக்குவது வழக்கம்?

4. பேகன் சென்ற மலைநாட்டின் இயற்கைக் காட்சியை நான்கு வரிகளில் வரைக.

5. மயில் கூவியது எதனால்?

6. பேகன் மயிலுக்குப் போர்வையைக் கொடுத்தது ஏன்?

7. குறிப்பறிந்து ஈதலே கொடை: இதனை விளக்குக.

3. படம் பார்த்துக் கட்டுரை எழுதுதல்:

நீ உன் வீட்டிலும், பள்ளிக்கூடத்திலும் எத்தனையோ படங்களைப் பார்க்கிறாய். அவற்றைக் கண்டு நீ களிப்பதுண்டு. சில படங்கள், இயற்கைக் காட்சிகளைக் காட்டும்; சில படங்கள், கதைகளைக் குறிப்பிடும். படங்களில் நீ பார்க்கின்றவற்றை விரிவாக எழுதப் பழகுதல் வேண்டும்.

பயிற்சி

1. 90, 91-ம் பக்கங்களில் படங்களைப் பார்த்துத் தக்க தலைப்புக்கள் அளித்துக் கதைகளைத் தனித்தனியாக எழுது:

2. 92-ம் பக்கத்திலுள்ள படங்களைப்பார். தக்க தலைப்பளித்துக் கட்டுரை எழுது.



சிங்கமும் சுண்டெலியும்



நரியும் நாரையும்





4. கோடிட்ட இடங்களை நிரப்புதல் :

கீழே காணப்படும் படங்களின் உதவிகொண்டு கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைத்துக் கதையை முடிவு செய்க :—



ஒரு———இரண்டு நண்பர் போய்க்கொண்டிருந்தனர். அவர்களுக்கு எதிரே தூரத்தில் ஒரு———வந்துகொண்டிருந்தது. கரடியைக் கண்ட———இருவரும் பயத்தினால்———. உடனே நண்பர்களுள் ஒருவன் பக்கத்தில் இருந்த ஒரு———ஏறிக்கொண்டு விட்டான். மற்றொருவன் மூச்சை அடக்கிக்கொண்டு கீழே———. மரத்தடியை அடைந்த கரடி படுத்துக்கொண்டிருந்தவனை———பார்த்தது. அவன———போய்விட்டான் என்று எண்ணி அக்கரடி———.கரடி போன பின்———ஏறியிருந்த நண்பன் கீழே———வந்தான். அவன் கீழே படுத்திருந்த———எழுப்பி, 'நண்பா, உன்———கரடி என்ன என்ன சொல்லியது?' என்று———.கீழே படுத்திருந்தவன்———

'நண்பா ——உதவாத நண்பனுடன்———'என்று கரடி சொல்லியது என்றான். ஆகவே, நாம் ஆபத்தில்——நண்பனுடன் நட்புக் கொள்ளுதல்——.

5. நிகழ்ச்சிகளை வருணித்தல்:

நீ தெருவில் போகும் பொழுதும், மோட்டாரில் செல்லும் பொழுதும், புகை வண்டியில் பிரயாணம் செய்யும் பொழுதும் எத்தனையோ காட்சிகளைப் பார்க்கிறாய். அவற்றுள் உன் மனத்தைக் கவரும் நிகழ்ச்சிகளை நடந்தது நடந்தபடியே எழுதப் பழக வேண்டும். ஒரு திருடனைச் சிலர் துரத்திப் பிடித்தல், மோட்டாரும் சைக்கிளும் மோதிக்கொள்ளுதல், நாற்சந்திகளில் போலீஸ்காரன் நின்று வண்டிகளுக்கும் மோட்டார்களுக்கும் சைகையினாலேயே கட்டளையிடுதல், பள்ளிக்கூடத்தில் நடைபெறும் கொண்டாட்டங்கள் ஆகிய இவை போன்ற நிகழ்ச்சிகளைப்பற்றி நீ எழுதலாம்.

கீழே ஒரு நிகழ்ச்சியைப் பற்றி எழுதப் பட்டுள்ளது. அதைப்படித்துப் பார்.

ஒருவர் மோட்டாரில் ஏறும்பொழுது தவறிக் கீழே விழுந்தது:

சென்னை,

2—1—1949

இன்று ஞாயிற்றுக் கிழமையாதலால், எங்கள் தகப்பனருக்கு ஓய்வு மிகுதியாய் இருந்தது. அவர் எங்களை அகில இந்திய சுதேசிப் பொருட்காட்சிச் சாலைக்கு அழைத்துச் சென்றிருந்தார். இன்று மாலை சுமார் 4 மணிக்கு நாங்கள் எல்லாரும் திருவல்லிக்கேணியில் பஸ் புறப்படும் இடத்தில் பஸ் ஸுக்காகக் காத்திருந்தோம். நாங்கள் வரிசையாக ஒருவர்பின் ஒருவராய் நின்றிருந்தோம்.

ஒரு பஸ் வந்தது. பஸ் நிற்பதற்குள்ளாக ஒருவர் மிக வேகமாய்ச்சென்று பஸ்ஸில் ஏற முயன்றார். அவரால் ஏற முடியவில்லை. நாங்கள் எல்லாரும் வரிசையாக நின்றுகொண்டிருக்கும் பொழுது அவர் மாத்திரம் ஒழுங்கை மீறி, பஸ்ஸில் ஏறமுயன்றது குற்றந்தானே? பஸ்ஸில் தாமே முதலில் ஏற வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர் பஸ்ஸைப் பிடித்துக்கொண்டே ஓடும்பொழுது, கால் தடுக்கிக் கீழே விழுந்துவிட்டார். உடனே அவரைச் சுற்றி ஒரு கூட்டம் கூடிவிட்டது. அங்கு நின்றிருந்த போலீஸ்காரர் கூட்டத்தைக் கலைத்தார். கீழே விழுந்தவரைச் சிலர் தூக்கினர். நல்ல வேளையாக அவர்க்குப் பெரிய காயம் எதுவும் ஏற்படவில்லை. தரையில் உராய்ந்ததனால் அவர் தேகத்திற்சில இடங்களில் இரத்தம் கசிந்தது. அவரால் காலைச் சரியாக ஊன்றி நடக்க முடியவில்லை. கூட்டத்தில் நின்று

கொண்டிருந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கூறினர். ஒருவர், 'ஏனையா அவ்வளவு அவசரம்?' என்றார். மற்றொருவர், 'நாம் எல்லாரும் காத்துக்கொண்டிருக்கும் பொழுது, இவர் மாத்திரம் அவசரமாக முதலில் ஏறப்பார்த்தார்! அது கடவுளுக்கே பொறுக்கவில்லை! சரியான கூலி கொடுத்துவிட்டார்!' என்றார். மற்றொருவர், 'ஐயோ! பாவம்! அடி பலமாய்ப்பட்டுவிட்டதா!' என்றார். போலீஸ்காரர், கீழே விழுந்தவரை மெதுவாக அப்பால் அழைத்துச் சென்று, ஏதோ விசாரித்துக் கொண்டிருந்தார். அதற்குள் எங்கள் வரிசையில் நின்றவர்கள் பஸ்ஸில் ஒவ்வொருவராக ஏறத் தொடங்கினர்கள். எங்கள்முறையும்வந்துவிட்டதால் நாங்களும் பஸ்ஸில் ஏறிக்கொண்டு பொருட்காட்சிச் சாலைக்குச் சென்றோம். ஓடுகிற பஸ்ஸில் ஏறுவதும் 'கியூ' வரிசையில் நில்லாமல் ஒழுங்கிற்கு மாறாக நடப்பதும் தவறு என்பது அந்தநிகழ்ச்சியிலிருந்து எனக்கு நன்றாய் விளங்கியது.

குறிப்பு :—இவ்வாறே நீ பார்க்க நேரிடும் பலவித நிகழ்ச்சிகளைக் கட்டுரைகளாக எழுதலாம்.

6. பயிர்த்தொழில் சம்பந்தமான கட்டுரை :

மக்கள் எல்லாருக்கும் உணவு வேண்டும். நமக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் கிராமங்களிலிருந்தே நமக்குக் கிடைக்கின்றன. போதாததற்கு நாம் வெளி நாடுகளிலிருந்தும் வருவித்துக் கொள்கிறோம். நம் இந்தியா செழிப்புள்ள நாடு. பயிர்கள் விளைவதற்கு வேண்டிய நிலங்கள் வேண்டும் அளவு நம் இந்தியாவில் இருக்கின்றன; அப்படி

இருந்தாலும், உணவுப் பொருள்கள் நமக்குத் தேவையான அளவு கிடைப்பதில்லை. ஆகவே, நம் இந்தியாவில் விவசாயம் நல்ல முறையில் நன்கு நடத்தப்பட வேண்டும். உழுதல், விதைத்தல், அறுவடை செய்தல் ஆகியவற்றில் பல புது முறைகள் இப்பொழுது இருக்கின்றன. அவற்றைக் கிராமக் குடியானவர்கள் பின்பற்ற வேண்டும். பயிருக்கு ஏற்ற சிறந்த எரு எது என்பதையும் குடியானவர்கள் உணர வேண்டும். உழவுத் தொழிலே ஒரு நாட்டிற்கு உயிர் போன்றது. உழவுத் தொழிலில் ஈடுபட்டவர்களே சிறந்தவர்கள். அவர்களுடைய உதவியினாலேதான் மற்றவர்கள் உயிருடன் வாழ முடிகிறது. ஆகவே, நீங்கள் உழவுத் தொழில் சம்பந்தமான பலவற்றை அறிய வேண்டும். அது சம்பந்தமான கட்டுரைகளை எழுதப் பழக வேண்டும்.

நெல்லைப் பயிரிடுதல்

நமது உணவுப் பொருள்களில் முக்கியமானது நெல். வளமுள்ள நிலத்திலேயே நெல் நன்றாக வளரும். நெல்வளர்வதற்கு அதிகமான உஷ்ணமும் ஏராளமான மழையும்வேண்டும். சமவெளியே நெல் பயிராவதற்கு ஏற்ற இடமாகும். மண்ணில் அதிகமாகக் களிமண் கலந்துள்ள இடத்தில் நீர் விரைவாகக் கீழே இறங்காது. இப்படிப்பட்ட நிலம் நெல் பயிரிடுவதற்குத் தகுந்தது.

நெல்லை விதைப்பதற்கு முன்பு வயலை ஆழமாக உழவேண்டும். 'அகல உழுவதினும் ஆழ உழுவது நன்று,' என்பது பழமொழி. உழும்பொழுது கலப்பையின் நுனி மண்ணை நன்றாகக் கிளறிக்

கட்டிகளை உடைத்துப் புழுதியாக்க வேண்டும். அப்பொழுதுதான் நெற்பயிரின் வேர்கள் கஷ்டமில்லாமல் பூமியில் செல்லும். உழுத பின் வயலில் நீரைத் தேக்கிச் சேருக்க வேண்டும்.

வயலில் நெல் நன்ருய் விளைய வேண்டுமானல், நல்ல எருக்களைப் போடவேண்டும். மாடுகளின் சாணம், தழை, குப்பை முதலியவை நல்ல எருவாகும். கடலை, எள் முதலியவற்றின் பிண்ணுக்குகளும் எருவாக உதவும். இக்காலத்தில் பல விதமான செயற்கை எருக்கள் உள்ளன. நம் வீட்டைச் சுற்றிலும் சேரும் குப்பை கூளங்களும், மாடுகளின் சாணமும், தழைகளும் நல்ல எருக்கள். விதைப்பதற்கு முன் வயலில் எருப் போடுதல் வேண்டும். எருவே பயிரின் உணவாகும்.

எருப் போட்டுப் பண்படுத்தப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியில் நெல் விதைகளை நெருக்கமாகத் தெளிப்பர். அதற்கு வேண்டிய தண்ணீரும் பாய்ச்சப்படும். ஐந்து அல்லது ஆறுவாரங்களுக்குப் பின்னர் நெல் நாற்றுக்கள் கூட்டமாய் வளர்ந்திருக்கும். நாற்றுக்கள் வளர்ந்திருக்கும் இடத்திற்கு 'நாற்றங்கால்' என்பது பெயர். உழவர்கள் நாற்றுக்களைப் பிடுங்கி, கட்டாகக்கட்டி, நிலத்தின் வேறுபகுதிகளில் விலக விலக வரிசையாக நடுவார்கள். தண்ணீரும் வேண்டிய வரையில் பாய்ச்சுவார்கள். பயிர் நன்ருக விளையத் தொடங்கிய உடன் தண்ணீரை வடித்து விட வேண்டும். நெற்பயிர் விளையும் நிலத்தில் நெல்லைத் தவிர வேறு பயிர்கள் முளைத்திருப்பதுண்டு. அவற்றிற்குக் 'களைகள்' என்பது பெயர். களைகளை அவ்வப்போது களைந்துவிடுதல் வேண்டும்

நெற்கதிர் முற்றிய பிறகு அறுவடை செய்யப்படும். நெற்கதிர்களை அறுவடை செய்யும் உழவர்கள் அவற்றின் தாள்களையும் சேர்த்து அறுத்து விடுவார்கள். அக்கதிர்கள் பிறகு நெற்களத்திற்குக் கொண்டு போகப்படும். அங்குச் சில உழவர்கள் நெற்கதிர்களைத் தரையில் அடித்து நெல்லைப் பிரித்து எடுப்பார்கள். கதிர்களின் தாள்கள் வைக்கோலாகும். நெல்லைப் பிறகு மூட்டைகளாகக்கட்டி வண்டிகளில் ஏற்றிச் செல்வார்கள்.

பயிற்சி:

1. தென்னிந்திய மக்களின் உணவுத் தானியங்களுள் மூன்றனைக் குறிப்பிடுக.

2. நெற்பயிர் நன்கு வளர்வதற்கு வேண்டும் சாதனங்களைக் குறிப்பிடுக.

3. நெல்லை விதைப்பதற்குமுன் நிலத்தை உழ வேண்டுவது ஏன்?

4. நிலத்தை ஆழ உழ வேண்டுவதன் அவசியம் என்ன?

5. 'ஏரு' என்னும் பொருள்பற்றி ஐந்து வரிகள் எழுதுக.

6. நாற்றங்கால், களையெடுத்தல், அறுவடை: ஒவ்வொன்றைப்பற்றியும் மும்மூன்று வாக்கியங்கள் எழுதுக.

7. வைக்கோல் எவ்வாறு கிடைக்கிறது?

8. பயிர்த்தொழிலின் மேன்மையைப் பற்றிப் பத்து வரிகளில் ஒரு கட்டுரை எழுதுக.

9. பயிர்த்தொழில் சம்பந்தமான பழமொழிகளுள் நான்கினை வரைக.

10. கரும்பு, கோதுமை, நிலக்கடலை, தேயிலை, காப்பி: இவை பயிரிடப்படும் விதங்களைபபற்றித் தனித் தனியே கட்டுரைகள் வரைக.

7. கைத்தொழில்கள் :

ஒரு நாட்டின் செல்வ நிலைக்குக் காரணமாய் இருப்பவை கைத்தொழில்களே. நமக்கு உணவு மட்டும் இருந்தால் போதுமா? நாம் சுகமாக வாழ்வதற்கு எவ்வளவோ பொருள்கள் நமக்கு வேண்டும். அப்பொருள்களைத் தயாரிக்கும் முறைகளே கைத்தொழில்கள் என்று பெயர் பெறும். நம் நாட்டில் எத்தனையோ கைத்தொழில்கள் நடைபெறுகின்றன. அவற்றைப் பற்றி நீங்கள் அறிவதுடன், ஒவ்வொன்றைப் பற்றியும் சிறு சிறு கட்டுரைகள் எழுதவும் பழக வேண்டும். கீழே மூன்று கைத்தொழில்களைப் பற்றிய சிறு கட்டுரைகள் உள்ளன. அவற்றைப் படித்துப் பாருங்கள். அவற்றைப் போல வேறு கைத்தொழில்களைப்பற்றி நீங்கள் எழுதப் பழகிக்கொள்ளுதல் அவசியமாகும்.

(அ) பருத்தி நூல் நூற்றலும் நெசவுத் தொழிலும்

நம் இந்தியா உஷ்ண தேசம். நமக்கு ஏற்றது பருத்தி உடையே. பருத்தி நெசவுத் தொழில் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை இக் கட்டுரையில் பார்ப்போம் :

பருத்தி விளைவதற்கு ஏற்றது கரிசல் மண் தரையே. பருத்திச் செடிகளுக்கு அதிக நீர் வேண்டுவதில்லை. பருத்திச் செடி நன்றாக வளர்ந்த பின் அதில் காய்கள் தோன்றும். காய்கள் முற்றினவுடன் வெடித்து, பஞ்சு வெளியே வரும்.

பஞ்சுடன் கருமையான விதைகள் ஒட்டிக் கொண்டிருக்கும். அவ்விதைகளை முதலில் பஞ்சிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். பிறகு பஞ்சை

வில்லால் அடித்து, அதில் சேர்ந்த குப்பைகளை அகற்றுவார்கள். இவ்வாறு சுத்தம் செய்யப்பட்ட பஞ்சு, நூலாக நூற்பதற்கு ஏற்றதாகும். தக்கிளி, இராட்டினம் முதலியவற்றின் மூலமாக நூல் நூற்கலாம். நூல் நூற்கும் இயந்திரங்களும் இக்காலத்தில் உள்ளன. எல்லாரும் தம் ஓய்வு நேரத்தில் நூல் நூற்க வேண்டும் என்று காந்தியடிகள் சொல்லியுள்ளார். நம் நாட்டில் பருத்தி பயிராவதற்கு வேண்டிய சாதனங்கள் மிகுதியாய் உள்ளன. நூல் நூற்றல் நம் நாட்டில் நன்றாக நடைபெறுமானால், நம் நாட்டில் உடைப்பஞ்சம் ஏற்படாது.

நூலைக் கைத்தறிகளால் ஆடையாக நெய்யலாம். நெய்வதற்கு இக்காலத்தில் பெரிய இயந்திரங்களும் உள்ளன. கைத்தறி நெசவு நம் நாட்டில் பலருக்கு ஏற்ற வேலையாகும். இயந்திரத்தில் நெய்யப்பட்ட ஆடைகளுக்கு 'மில் ஆடைகள்' என்பது பெயர். பம்பாய், ஆமதாபாது போன்ற இடங்களில் பெரிய நெசவாலைகள் உள்ளன. நம் நாட்டில் இப்பொழுது துணிப்பஞ்சம் நம்மைப் பீடித்துள்ளது; காந்தியடிகளின் பொன்மொழிகளின்படி நாம் நடக்கவேண்டும். நம்முடைய ஓய்வு நேரத்தில் நூல் நூற்பது நல்லது. கிராமத்தில் வேலையில்லாமல் வீண் பொழுது போக்குகின்றவர்கள், நூல் நூற்றல், கைத்தறி நெசவு முதலிய வேலைகளில் ஈடுபட வேண்டும்.

112652

(ஆ) செங்கல் செய்தல்

நமக்கு உணவும் உடையும் போதுமான அளவில் இருத்தல் மட்டும் போதாது. வசிப்பதற்கு

ஏற்ற வீடுகள் நமக்கு வேண்டும்; வீடு கட்டுவதற்கு உதவும் பொருள்கள் பல. அவற்றுள் ஒன்று செங்கல்.

செங்கல் களிமண்ணினாலேயே செய்யப்படுகிறது. களிமண்ணை முதலில் நன்றாகப் பிசைய வேண்டும். களிமண்ணைப் பிசைவதற்குப் பல முறைகள் இருக்கின்றன. பிறகு களிமண் பெரிய அளவில் ஏறக்குறைய மூன்று அங்குல உயரத்திற்குப் பூமியில் பரப்பிவைக்கப்படும். மரச்சட்டங்களின் உதவியால் அக்களிமண் பரப்பை நமக்குத் தேவையான அளவில் அறுக்கலாம். அவ்வாறு அறுக்கப்பட்டவை அவ்விடத்திலேயே சில நாட்கள் வெயிலில் காய வேண்டும். பிறகு அவை செங்கற்சூளைகளில் நன்றாக அடுக்கப்படும். செங்கற் சூளைகளைக் கிராமங்களில் நாம் பார்க்கலாம். சூளையின் கீழே விறகுகள் போட்டு எரிக்கப்படும். சுடப்பட்ட பிறகு, அறுக்கப்பட்ட களிமண் பகுதிகள் நன்றாக இறுகிச் சிவந்துவிடும். அப்பொழுதுதான் அவற்றிற்குச் செங்கற்கள் என்பது பெயர். அவை உறுதியாய் இருக்கும்.

செங்கற்கள் இக்காலத்தில் நமக்குப் பல விதங்களில் பயன்படுகின்றன. சுவர்கள் கட்டவும், தளம் போடவும் செங்கற்கள் நம் நாட்டில் மிகுதியாக உபயோகிக்கப்படுகின்றன. பொடிச் செங்கல்லையும் சுண்ணாம்பையும் கலந்து கட்டடங்களுக்கு அஸ்திவாரம் போடலாம். செங்கற்கள் தயாரிப்பது ஒரு சிறந்த தொழிலாகும். களிமண் மிகுதியாகக் கிடைக்கும் கிராமங்களில் இந்தத் தொழிலை நன்றாக நடத்தலாம்.

(இ) காகிதம் செய்தல்

நாம் கல்வி கற்பதற்கு மிக அவசியமாக வேண்டுவது காகிதமே. முன் காலத்தில் பனையோலைகளில் எழுத்தாணிகளைக்கொண்டு எழுதிவந்தார்கள். சில நாடுகளில் உலோகத் தகடுகளிற்கூட எழுதி வந்தார்கள். இக்காலத்தில் காகிதங்கள் ஏராளமாகச் செய்யப்படுகின்றன.

நார், துணி, கந்தை, மூங்கில் போன்றவற்றிலிருந்தே காகிதம் தயார் செய்யப்படுகிறது. காகிதம் செய்வதற்கு உதவும் பொருள்கள் முதலில்சிறுசிறு துணுக்குகளாகச் செய்யப்படும். பிறகு அத்துணுக்குகள் ஒரு பெரிய பாத்திரத்தில் கொதிக்கவைக்கப்படும். அப்பொழுது அதனுடன் ஒருவகை இரசாயனப் பொருள் கலக்கப்படும். துணுக்குகள் நன்றாகக் கொதித்தால் அவை ஒன்ருகி, ஒரு கூழ் போல ஆகும். அக்கூழிலுள்ள அழுக்குகள் பிறகு நீக்கப்படும். எனினும், அக்கூழ் மங்கலாகவே காணப்படும். அத்தகைய கூழினால் அட்டைகள், மங்கலான காகிதங்கள் முதலியவை செய்யலாம்.

பயிற்சி :

1. கயிறு திரித்தல், பாய் முடைதல், கீற்றுப் பின்னுதல், தேங்காய் நெய் எடுத்தல், பானை செய்தல், வெல்லம் காய்ச்சுதல், சோப்புச் செய்தல், பொம்மைகள் செய்தல், வர்ணம் தீட்டுதல், பாற்பண்ணை வைத்தல் கோழிப் பண்ணை வைத்தல், தோட்டம் போடுதல் தேனீ வளர்த்தல், கம்பளி நெசவு, மரச்சாமான்கள் செய்தல் ஓடு செய்தல், பட்டுப் பூச்சி வளர்த்தல்: இவற்றுள் எந்நான்கைப் பற்றியேனும் கட்டுரைகள் வரைக. எல்லாவற்றைப் பற்றியும் உனக்குக் குறிப்புக்கள் தெரிந்திருக்க வேண்டும்.

2. கிராமங்களுக்குச் செல்ல நேரிடும் பொழுதெல்லாம் அவ்விடங்களில் நடைபெறும் தொழில்கள் எவை என்பதையும், அவை எவ்வாறு நடத்தப்படுகின்றன என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும்.

3. சர்க்கரை செய்தல் தஞ்சாவூர்ப் பொம்மைகள்: இவ்விரண்டு பொருள்களைப் பற்றி வகுப்பு மாணவர் சங்கத்தில் பேச்சுக்கள் நிகழ்த்துவதற்கு ஏற்ற குறிப்புக்கள் தயார் செய்க.

8. பண்டிகைகள், விழாக்கள் பற்றிய கட்டுரைகள் :

இந்தியாவில் வாழும் மக்கள் பல விதமான பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள். வருஷப் பிறப்பு, பொங்கல், தீபாவளி, கார்த்திகை முதலியவை இந்துக்களின் பண்டிகைகள். முகரம், ரம்ஸான் போன்றவை முஸ்லிம்களின் பண்டிகைகள். கிறிஸ்துமஸ், ஈஸ்டர் போன்றவை கிறிஸ்தவர்களின் பண்டிகைகள். நம் தென்னிந்தியாவில் தேர்த்திருவிழாக் கொண்டாடப்படுகின்றது. தமிழர்கள் பொங்கல் பண்டிகையை ஒரு திருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள். நாம் எல்லாரும் ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் தேதி சுதந்தர விழாவைக் கொண்டாடுகின்றோம். இவை கொண்டாடப்படுவதற்குரிய காரணங்களையும், கொண்டாடப்படும் விதத்தையும் நீ கட்டுரைகளாக எழுதப் பழகவேண்டும். அத்தகைய கட்டுரைகளில் மூன்று கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைப் போலவே ஏனைய பண்டிகைகளைப் பற்றியும், திருவிழாக்களைப் பற்றியும் நீ எழுதப் பழக வேண்டும்.

(அ) ஸரஸ்வதி பூஜை

ஸரஸ்வதிபூஜை இந்தியர் எல்லாருக்கும் பொது வான ஒரு திருவிழா ஆகும். பள்ளிக்கூடங்களில் நவ ராத்திரி விடுமுறை அல்லது பூஜை விடுமுறை என்று செப்டெம்பர் மாத முடிவிலோ, அக்டோபர் மாதத் தொடக்கத்திலோ விடுகிறார்கள் அல்லவா? அந்த விடுமுறையின் இறுதியில் ஸரஸ்வதி பூஜைத் திருவிழா வரும். கலைமகளே எல்லாக் கலைகளுக்கும் தெய்வம். கலைமகளைப் பூஜை செய்தால் கல்வியும் அறிவும் ஓங்கும் என்பது இந்துக்களின் கொள்கை.

ஸரஸ்வதி பூஜையன்று ஸரஸ்வதியின் திரு வுருவப் படத்தை வைத்தும், வீட்டிலுள்ள புத்தகங் களையெல்லாம் ஒழுங்காக அடுக்கி வைத்தும் வீடு களில் எல்லாரும் பூஜை செய்வார்கள். புத்தகங் களுக்கெல்லாம் அன்று சந்தனமும் குங்குமமும் இடப்பெறும். இசையில் வல்லவர்கள் இசைக் கருவிகளைப் பூஜை செய்வார்கள். ஸரஸ்வதி பூஜை செய்த நாளுக்கு மறு நாளை 'ஆயுத பூஜை' என் பார்கள். அன்று எல்லாரும் முதல் நாள் பூஜை செய்த புத்தகங்களை எடுத்துச் சிறிது படித்துப் பார்ப்பது வழக்கம். அன்று தொழிலாளர்கள் தத்தம் தொழிலுக்கு உதவும் கருவிகளைப் பூஜை செய்வார்கள். ஆயுத பூஜை அன்று குழந்தை களுக்குப் புதிதாகக் கல்வி கற்பிக்கத் தொடங்குதல் நம் நாட்டில் வழக்கமாகும். புதிதாகச் சங்கீதம் கற் றுக்கொள்ள விரும்புகின்றவர்கள் ஆயுத பூஜை அன்றே புதுப்பாடம் தொடங்குவார்கள்.

ஸரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை ஆகிய இரண்டு நாட்களும் பள்ளிக்கூட மாணவர்களுக்கு மிகச்

சிறந்த நாட்கள். பள்ளிக்கூடங்களில் ஸரஸ்வதி பூஜையன்று பூஜை நடத்தப்படுவதுண்டு. மைசூர் போன்ற இடங்களில் நவராத்திரி நாட்களையும், ஸரஸ்வதி பூஜையையும் மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இந்நாட்களை அவர்கள் 'தசரா' என்று குறிப்பிடுகின்றார்கள். கலைத் தெய்வமாகிய கலைமகளின் அருள் இருந்தால், கல்வி நன்றாக வரும் என்பது நம்மவர்களுடைய கொள்கை.

(ஆ) கிறிஸ்துமஸ் பண்டிகை

கிறிஸ்துமஸ் பண்டிகை கிறிஸ்தவர்களுக்கு மிக முக்கியமானது. ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் 25 - ஆம் தேதியன்று இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது. கிறிஸ்தவர்களின் கடவுள் இயேசு கிறிஸ்து நாதர். அவருடைய பிறந்த நாளை இந்த நாளில் கிறிஸ்தவர்கள் கொண்டாடுகிறார்கள். இயேசு நாதர் கிறிஸ்துமஸ் தினத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தார் என்பது கிறிஸ்தவர்களின் கொள்கை.

கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கிறிஸ்தவர்கள் எல்லாரும் மிகவும் நன்றாகக் கொண்டாடுகிறார்கள். கிறிஸ்தவர் அல்லாதவர்களுங்கூட அப்பண்டிகை அன்று மகிழ்ச்சியோடு அளவளாவுவார்கள். கிறிஸ்துமஸ் தினத்திற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னதாகவே கிறிஸ்தவர்கள் தங்கள் வீடுகளையும், மாதா கோவில்களையும் அலங்காரம் செய்யத் தொடங்கிவிடுவார்கள். 24 - ஆம் தேதி இரவு சில கிறிஸ்தவப் பாடகர்கள் வீடு வீடாகச் சென்று துதிப்பாடல்களைப் பாடி மக்களை மகிழ்விப்பார்கள்;

கிறிஸ்துமஸ் தினத்தன்று மாதா கோவில்களில் ஆராதனைகள் நடைபெறும். அன்று மாதா கோவிலுக்குப் போகாத கிறிஸ்தவரே இரார் என்று சொல்லலாம். அங்கு நண்பர்கள் ஒருவருக்கொருவர் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் கூறிக்கொள்வார்கள்; கிறிஸ்துமஸ் தினத்தன்று கிடைக்கும்படியாகத் தூரதேசத்தில் உள்ள உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை முன்னமே அனுப்பிவிடுவார்கள். கிறிஸ்துமஸ் பண்டிகை முதல், ஜனவரி முதல் தேதியாகிய வருஷப் பிறப்பு வரையில் கிறிஸ்தவர்கள் ஆடலிலும், பாடலிலும், காலங் கழிப்பார்கள். பல இடங்களில் விருந்து நடைபெறும். கிறிஸ்தவர்கள் அந்நாட்களை மகிழ்ச்சியிலேயே கழிப்பார்கள்.

(இ) சிதம்பரத்தில் ஆருத்திரா தரிசனம்

சிதம்பரம் என்பது ஒரு சைவத் திருத்தலம். அங்குள்ள கோவிலில் சிவபிரான் நடனமாடிய நிலையில் எல்லாருக்கும் காட்சி கொடுக்கிறார். அதனால், அக்கடவுளுக்கு 'நடராஜர்' என்பது பெயர். அக்கோவிலிலுள்ள அம்மனுக்குச் 'சிவகாம சுந்தரி அம்மை' என்பது பெயர். சிதம்பரம் தென்னிந்திய ரயில்வேயின் முக்கியப் பாதையில் இருக்கிறது. அவ்வூரின் அருகில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இருப்பது எல்லாருக்கும் தெரியும். அவ்வூர் தென்னார்க்காடு ஜில்லாவைச் சேர்ந்தது.

சிதம்பரத்தில் ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் திருவாதிரையன்று, ஆருத்திரா தரிசனத் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

வெளியூர்களிலிருந்து பலர் இந்தத் திருவிழாவைக் கண்டு களிக்க வருவர். அன்று அவ்வூரில் கூட்டம் தாங்கவே முடியாது. இரயில்வே கம்பெனிக் காரர்கள் பிரயாணிகளின் சௌகரியத்திற்காக அன்று பல விசேஷ இரயில்களை விடுவார்கள். ஆருத்திரா தரிசனத்தன்று பகலில் பக்தர் சிலர் நடராஜரையும், அம்மனையும் பல்லக்குகளில் ஏற்றிக் கோவிலைச் சுற்றி வருவார்கள். அதைத் தரிசனம் செய்வதற்காகவே மக்கள் கூட்டம் கூட்டமாக அங்குச் செல்கிறார்கள்.

திருவாதிரையன்று எல்லா ஊர்களிலும் சிவன் கோவில்களில் விசேஷ ஆராதனைகள் நடைபெறும். சுவாமி புறப்பாடு எங்கும் உண்டு. அந்நாளில் சிலர் தம் வீடுகளில் 'களி' என்னும் உணவைத் தயாரித்துக் கடவுளுக்குப் படைத்து உண்பது வழக்கம். மார்கழி மாதம் வரும் திருவாதிரையன்று தில்லைக்குச் செல்வதற்கே, 'நந்தனார்' என்னும் திருநாளைப் போவார் நாயனார் தம் பண்ணை முதலாளியினிடம் அனுமதி கேட்டார். இத்திருநாளைச் சைவர்கள் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

பயிற்சி :

1. உங்கள் ஊரில் என்னென்ன கோவில்கள் உள்ளன? அக்கோவில்களில் என்னென்ன திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன? அவற்றுள் ஏதேனும் ஒன்றைப் பற்றிச் சுருக்கமாக ஒரு கட்டுரை வரைக.

2. பொங்கல், மொகரம் ஈஸ்டர்: இவற்றுள் ஏதேனும் ஒன்றைப் பற்றிப் பதினைந்து வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

3. பண்டிகைகளும் திருவிழாக்களும் கொண்டாடப் படுவது ஏன்?

4. உங்கள் ஊரில் ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதி அன்று சுதந்தர விழாக் கொண்டாடப்படும் விதத்தைப் பதினைந்து வரிகளில் எழுதுக.

5. நீங்கள் பல திருமணங்களுக்குச் சென்றிருக்கிறீர்கள். ஏதேனும் ஒரு திருமணம் நடைபெற்ற விதத்தைச் சுருக்கி வரைக.

6. முற்காலத்தில் தமிழ் நாட்டில் கொண்டாடப் பட்ட திருவிழாக்கள் எவை என்பதையும் அவை கொண்டாடப்பட்ட முறைகளைப் பற்றியும் உங்கள் ஆசிரியரிடம் கேட்டு அறிந்துகொள்ளுங்கள்.

9. மாணவர் கழகத்தில் சொற்போர் நிகழ்த்துதல் :

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் சாதாரணமாக இரண்டு வகையான மாணவர் கழகங்கள் இருப்பதுண்டு: இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கென ஒரு கழகமும், உயர்நிலை வகுப்பு மாணவர்களுக்கென ஒரு கழகமும் இருக்கும். மிகப்பெரிய பள்ளிக்கூடங்களில் ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு கழகம் இருப்பதுண்டு. மாணவர் கழகங்களில் வாரந்தோறும் ஒவ்வொரு கூட்டம் நடைபெறும். அவற்றில் நீங்கள் பேசிப் பழகவேண்டுவது இன்றியமையாதது. இளமையிலிருந்தே நீங்கள் கூட்டங்களில் பேசிப் பழகவேண்டும். அப்பழக்கம் நீங்கள் பெரியவர்களான பிறகு பேருதவி செய்யும். மாணவர் கழகங்களில் சொற்போர்கள் நடைபெறுதல் வேண்டும். சொற்போர் என்பது என்ன என்பதை நீங்கள் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். ஏதேனும் ஒரு காரியமோ பொருளோ நல்ல

தென்று ஒருவர் கூறுவதும், பிறகு மற்றொருவர் அதை மறுத்துக் கூறுவதுமே சொற்போர் ஆகும். கீழே மாதிரிச் சொற்போர் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. அதைப்போல் நீங்கள் பல பொருள்களைப்பற்றி எழுதி, கழகக் கூட்டத்தில் படிக்கலாம். மனப்பாடம் செய்யக்கூடியவர்கள் எழுதியதை மனப்பாடம் செய்தும் பேசலாம்.

எடுத்துக்கொண்ட பொருளை ஒருவர் ஒட்டியும், மற்றொருவர் வெட்டியும் பேசுவதே சொற்போர் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

சொற்போர் :

சக்தி மிக்கவன் படை வீரனா, விஞ்ஞானியா ?

19-1-1949 புதன்கிழமை மாலை 4-30 மணிக்கு மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியின் முதற் பார மாணவர்களின் கழகக்கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது வடிவேலன் என்னும் மாணவன் 'படைவீரனே சத்தி மிக்கவன்,' என்று பேசினான். அதை மறுத்து மதுரைமுத்து என்பவன் 'விஞ்ஞானியே சத்தி மிக்கவன்,' என்று பேசினான். அவர்களுடைய பேச்சுப் பின்வருமாறு :—

வடிவேலன் சொற்பொழிவு

அறிவு மிக்க தலைவர் அவர்களே, நண்பர்களே, இன்று நம் கழகத்தில் வாதத்திற்காக எடுத்துக் கொண்ட 'பொருள் சக்திமிக்கவன் படை வீரனா விஞ்ஞானியா ?' என்பதாகும். படை வீரனே சக்தி மிக்கவன் என்று கூற நான் முன் வந்துள்ளேன்.

பொதுமக்களில் யாரைக் கேட்டாலும் அவர்கள் எல்லாரும் 'படை வீரனே சக்தி மிக்கவன்,' என்று

கூறுவார்கள் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. கைப் புண்ணைப் பார்ப்பதற்குக் கண்ணாடி எதற்கு ? போர் நடைபெற வேண்டுமானால், போர், வீரன் இல்லாமல் முடியுமா ? பகைவர் நாட்டின்மேல் குண்டுகளைப் போட்டுப் பகைவர்களைப் பணிய வைப்பவன் படை வீரனா, விஞ்ஞானியா என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். விஞ்ஞானி ஒரு தனியான அறையில் பாதுகாவலுடன் அமர்ந்து, பயமில்லாமல் எதையாவது கண்டுபிடிக்கிறான். அதனால் வெற்றி கிடைத்து விடுமா ? உயிருக்கு அஞ்சாமல் போர்க்களத்தில் நின்று போர் புரியும் வீரனல்லவா வெற்றி கிடைக்கிறது ? விஞ்ஞானி எதைத் தியாகம் செய்கின்றான் ? படை வீரனை எடுத்துக்கொள்ளுங்கள். அவன் தன் மனைவி, மக்கள், வீடு, வாசல் முதலிய எல்லாவற்றையும் துறந்து, தனது நாட்டிற்காகப் பாடு படுகின்றான். போர்க்களத்தில் அவனுக்கு நல்ல உணவு உண்டா ? நல்ல உடை உண்டா ? நல்ல தூக்கம் உண்டா ? அவன் தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் தன் நாட்டின் பொருட்டு—தன் நாட்டு மக்களின் பொருட்டு—அவர்களின் உயர்நிலையின்பொருட்டுப் பாடு படுகிறான்; இரத்தத்தைச் சிந்துகிறான். படை வீரர்கள் மிகுந்த நாட்டின்மீது பகைவர்கள் படையெடுத்து வரவே அஞ்சுவார்கள். கப்பற்போர், விமானப் போர், பீரங்கிப் போர் முதலிய போர்களைச் செய்பவன் போர் வீரனே. இவ்வளவு சிறந்த செயல்களைச் செய்யும் போர் வீரனே சக்தி மிக்கவன் என்பதில் உங்களுக்கு இன்னும் சந்தேகம் இருக்கிறதா ? நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள் !

அப்பொழுதுதான் உங்களுக்கு உண்மை புலப் படும்.

மதுரைமுத்துவின் சொற்பொழிவு

நுண்ணறிவு வாய்ந்த தலைவர்களே, அருமை நண்பர்களே, என் நண்பனாகிய வடிவேலன் பேசியதை நீங்கள் கேட்டுக்கொண்டிருந்தீர்கள். அவன், 'நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள்; அப்பொழுதுதான் உண்மை உங்களுக்குப் புலப்படும்', என்றான். அதையே நானும் சொல்கின்றேன். நுண்ணறிவு வாய்ந்த உங்களுக்குக் கட்டாயம் உண்மை புலப் பட்டுவிடும். போர் வீரன் போர் செய்வது உண்மையே. ஆனால், போர் செய்வதற்கேற்ற கருவிகளும் சாதனங்களும் இல்லாவிட்டால் அவனால் என்ன செய்ய முடியும்? போர் வீரனை ஓர் இயந்திரத்துக்கும் விஞ்ஞானியை அதனை இயக்குபவனுக்கும் ஒப்பிடலாம்: இயக்குபவன் இல்லாவிட்டால் இயந்திரம் என்ன செய்யும்? அதைப்போலவே விஞ்ஞானி இல்லாவிட்டால் போர் வீரனால் ஒன்றும் செய்ய முடியாது.

இக்காலம் விஞ்ஞானகாலம். உடல்வலிமையும், அஞ்சாமையும் மட்டும் இருந்தால் பயனில்லை. பகைவர்கள் எங்கிருந்து எவ்விதமாகத் தாக்குகிறார்கள் என்பதைப் பார்க்கவும் முடியாது. பகைவர்கள் யாரென்று கூடத் தெரிந்துகொள்ள முடியாது. இரவில் ஆகாயத்தில் நின்று குண்டு வீசும் விமானத்தை எப்படிக் கண்டு பிடிப்பது? உடல் வலிமை அப்பொழுது பயன் படுமா? அவ்விமானம் இருட்டில் இருக்கும் இடத்தைப்பார்ப்பதற்கு ஏற்றபெரிய

வெளிச்சத்தைக் கண்டு பிடித்து உதவுபவன் விஞ்ஞானிதானே? இவ்வாறே ஒவ்வொன்றிலும் விஞ்ஞானிதான் உதவி செய்கிறன். போர் வீரனல் போர்தான் செய்ய முடியும். விஞ்ஞானியால் பகைவரை அழிப்பதற்கு ஏற்ற கருவிகளும், சாதனங்களும் செய்ய முடியும். அவை மட்டுமோ? மக்களின் சுகவாழ்க்கைக்கு ஏற்ற வசதிகளைச் செய்பவன் விஞ்ஞானியே. இதோ, சுற்றுகிற மின்சார விசிறியைக் கண்டுபிடித்தவன் விஞ்ஞானி. விசிறி சுற்றுவதனல் நமக்குக் காற்று வருகிறது. மின்சாரவிளக்கு, தந்தி, ரேடியோ முதலிய சாதனங்களைக் கண்டு பிடித்தவன் விஞ்ஞானியே. விஞ்ஞானி மனம் வைத்தால் ஒருவரை அழிக்கவும் முடியும்; நன்மை செய்யவும் முடியும். ஒரு வித விஷ வாயுவைக் கண்டு பிடித்து வெளிப்படுத்தினல் போர் வீரர்களால் எதிர்த்து நிற்க முடியுமா? ஓர் அணுகுண்டைச் செய்து வீசினல், பகைவர் நாடே இருந்த இடம் தெரியாமல் போய்விடுமே! அந்த விஞ்ஞானி தன் அறிவை எல்லாம் மக்களுக்கு நன்மை செய்வதில் செலுத்தினல், நமக்கு எவ்வளவு நன்மைகள் உண்டாகும்! ஆகவே, சக்தி மிக்கவன் விஞ்ஞானிதான் என்பதில் உங்களுக்கு எள்ளளவும் சந்தேகமே வேண்டுவதில்லை. இதை என் நண்பன் வடிவேலனும் ஒப்புக் கொள்வான் என்றே நான் நம்புகிறேன். இவ்வளவு நேரம் பொறுமையுடன் என் உரையைக் கேட்டுக் கொண்டிருந்த உங்கள் எல்லாருக்கும் என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக!

பயிற்சி :

மாணவர் கழகத்தில் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை ஒரு சொற்போர் நிகழ்த்துதல் வேண்டும்.

கீழ்க்காண்பவை போன்ற பொருள்களைப் பற்றிச் சொற்போர்கள் நிகழ்த்தலாம். ஆகவே, அவற்றிற்கு ஏற்ற குறிப்புக்களைத் தயார் செய்து கொள்ளுங்கள்:

1. கல்விச் செல்வம் சிறந்ததா, பொருட்செல்வம் சிறந்ததா?
2. பரீட்சைகள் வேண்டுமா, வேண்டாவா?
3. உணவுப்பங்கீடு நல்லதா, கெட்டதா?
4. நகர வாழ்க்கை நல்லதா, கெட்டதா?
5. இயந்திரங்களால் நன்மை அதிகமா, தீமை அதிகமா?
6. இயற்கை எருச் சிறந்ததா, செயற்கை எருச் சிறந்ததா?

10. நாட்குறிப்புப் புத்தகம்

மாணவருள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாட்குறிப்புப் புத்தகம் வைத்துக்கொள்ள வேண்டும். தினந்தோறும் உங்கள் வாழ்க்கையில் எத்தனையோ முக்கியமான சம்பவங்கள் நடக்கின்றன. அவற்றையெல்லாம் நீங்கள் நினைவில் வைத்துக்கொண்டிருப்பது முடியாது. சில நாட்களில் அவற்றை மறந்தே போய்விடுவீர்கள். ஆகையால், அவற்றையெல்லாம் கோவையாக நாள்தோறும் எழுதுவது பெரும்பயன் அளிக்கும். இத்தகைய பழக்கம் நீங்கள் பெரியவர்களான பிறகு பேருதவி செய்யும். ஒரு நாளில் நடந்த,மாதிரி நாட்குறிப்புக் கீழே தரப்பட்டுள்ளது. இவ்வாறே நீங்கள் நாட்குறிப்புப் புத்தகத்தில் நாள்தோறும் எழுதி வர வேண்டும்.

மாதிரி நாட்குறிப்பு :

(திண்டுக்கல்லில் இருக்கும் ஒரு மாணவன் எழுதுவது)

காலை 6-45 மணி : (ஞாயிற்றுக் கிழமை 9-1-1949) எங்கள் உயர்நிலைப் பள்ளியின் விளையாட்டு மைதானத்தை அடைந்தேன். அங்கு மாணவர்களுள் பலர் வந்திருந்தனர்.

காலை 7-மணி : திண்டுக்கல்லை விட்டு எங்கள் மோட்டார் புறப்பட்டது.

காலை 9-மணி : மதுரையில் உள்ள மதுரைக் கல்லூரியை அடைந்தோம்; சிற்றுண்டி உண்ணத் தொடங்கினோம்.

காலை 9-45 மணி : திருமலை நாயக்கர் மகாலை அடைந்தோம்; அதைச் சுற்றிப் பார்க்கத் தொடங்கினோம்.

காலை 11-30 மணி : மதுரைக் கல்லூரிக்குத் திரும்பினோம்.

பகல் 12 மணி : நடுப்பகல் உணவு உட்கொண்டோம்.

மாலை 3 மணி : மோட்டாரில் ஏறி மதுரையின் பெருந்தெருக்களின் வழியே செல்லத் தொடங்கினோம்.

மாலை 3-30 மணி : மாரியம்மன் தெப்பக் குளத்தை அடைந்தோம்.

மாலை 4-30 மணி : மாரியம்மன் தெப்பக் குளத்தின் நடுவில் உள்ள மண்டபத்தில் சிற்றுண்டி அருந்தினோம்.

மாலை **5-15** மணி : மதுரையில் உள்ள மீனுட்சியம்மன் கோவிலுள் நுழைந்தோம்.

மாலை **6-30** மணி : மோட்டாரில் ஏறித் திண்டுக்கல்லுக்குப் புறப்பட்டோம்.

இரவு **8-45** மணி : திண்டுக்கல்லில் என் வீட்டை அடைந்தேன்.

பயிற்சி :

1. *உனது வீட்டில் உன் தமக்கையின் திருமணம் நடந்த நாள்*

2. *உங்கள் பள்ளிக்கூடத்தின் ஆண்டு விழா நடந்த நாள்*

3. *நீ உன் தந்தையாருடன் குற்ருலம் நீர் வீழ்ச்சிக்குச் செல்வது*

4. *சாரணப் படையுடன் நீ பக்கத்தில் உள்ள ஒரு மலையடிவாரத்திற்குச் சென்று நாள் முழுவதும் அங் கிருந்துவிட்டுத் திரும்பியது.*

11. பாடசாலைப் பத்திரிகைக்குக் கட்டுரை எழுதுதல் :

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பத்திரிகை நடத்தப்படுகின்றது. ஒவ்வொரு மாதமும் சில பள்ளிக்கூடங்களில் கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகின்றது. கையெழுத்துப் பத்திரிகை என்பது என்ன தெரியுமா? நீங்கள் எழுதிக் கொடுக்கும் கட்டுரைகளை எல்லாம் சேர்த்து ஒரு குறிப்புப் புத்தகம்போலத் தைத்துவிடுவது. பலபள்ளிக் கூடங்களில் ஆண்டிற்கு ஒரு முறை பத்திரிகை அச்சிடுகிருர்கள். ஒவ்வொரு வகுப்பும் ஒவ் வொரு கையெழுத்துப் பத்திரிகையை நடத்துவது நலம். பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதிக்கொண்

டிருப்பது நல்ல பழக்கமாகும். சுவை மிக்க சிறு கதைகள், பெரியார்களின் வரலாறுகள் முதலியவற்றைப் பள்ளிக்கூடப் பத்திரிகைக்கு நீங்கள் எழுதலாம். கட்டுரைகளைத் தெளிவாகவும் அழகாகவும் எழுதவேண்டும். ஒரு முறை எழுதி, அதனை ஆசிரியரிடம் காட்டித் திருத்திக்கொண்டு, பிறகு அதை நல்ல காகிதத்தில் எழுதிப் பத்திரிகைக்கு அனுப்புதல் வேண்டும். முன்பு பல விதக் கதைகளையும், கட்டுரைகளையும் படித்திருக்கிறீர்கள். அவற்றைப் போல எழுதுதல் போதுமானது. நீங்கள் எழுதுவதற்கேற்ற பொருள்களில் சில வருமாறு:

1. உங்கள் பள்ளிக்கூடத்தில் நடந்த இன்பச் செலவு (உல்லாசப் பிரயாணம்)

2. சென்னை, மைசூர், கோடைக்கானல், குற்றால நீர் வீழ்ச்சி, மேட்டூர் அணை, மாமல்லபுரம், செஞ்சிக் கோட்டை போன்ற இடங்களுக்கு நீங்கள் சென்றிருந்தால், அவ்விடங்களில் நீங்கள் கண்ட காட்சிகள்

3. கற்பனைக் கதைகள்—அழகிய சிறு கதைகள்

4. அழகிய சித்திரங்கள்

12. கடிதம் வரைதல் :

கடிதம் எழுத நீங்கள் கற்றுக்கொள்வது மிகவும் அவசியம். உங்கள் கடிதத்தைப் படிக்கின்றவர்களுக்கு உங்கள் கருத்து நன்றாக விளங்கும்படி எழுத வேண்டும். உங்கள் எழுத்தும் தெளிவாக இருக்க வேண்டும். கடிதங்களில் பல வகைகள் உள்ளன. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு விதமாக எழுத வேண்டும். நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எழுதும் கடிதப், முன் பின்

தெரியாத ஒருவருக்கு எழுதும் கடிதம், விடுமுறை அளிக்குமாறு ஆசிரியரை வேண்டிக்கொள்வது, திருமணக் கடிதம், தலைமை தாங்க வேண்டிக் கொள்ளும் கடிதம், வேலைக்கு மனுப்போடும் கடிதம், பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் கடிதம் என்பன போன்ற பல வகைக் கடிதங்கள் உள்ளன.

கடிதத்தின் உறுப்புக்கள் :

1. இருப்பிடமும் தேதியும்
2. முகவுரை
3. விளி
4. செய்தி அல்லது உடல்
5. கையெழுத்து
6. முகவரி (விலாசம்)

1. இருப்பிடமும் தேதியும் : உங்கள் கடிதத்தைப் பெற்றவர்கள், முதலில் கடிதம் எவ்வூரிலிருந்து வந்தது என்பதையும், எந்தத் தேதியில் எழுதப் பட்டது என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். ஆகவே, கடிதத்தின் வலப்பக்கத்தில், கடிதம் எழுதும் பொழுது நீங்கள் இருக்கும் இருப்பிடத் தையும், கடிதம் எழுதும் தேதியையும் குறிப்பிட வேண்டும். உங்கள் விலாசத்தையும் அங்குக் குறிப்பிட வேண்டும்.

2. முகவுரை : ஒரு வேலைக்கு மனுப்போடும் பொழுதோ, மேல் உத்தியோகஸ்தருக்கு ஏதேனும் விண்ணப்பம் எழுதும் பொழுதோ உங்கள் விலாசம் முழுவதையும் இடப்பக்கத்தில் குறிப்பிட வேண்டும். அதன் கீழ், யாருக்கு அனுப்புகின்றீர் களோ, அவருடைய விலாசத்தை எழுத வேண்டும். நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் எழுதும் கடிதங்களில் இத்தகைய முகவுரை வேண்டுவதில்லை.

3. விளி : கடிதத்தை யாருக்கு எழுதுகின்றீர்

க்ளோ, அவ்வரை விளிப்பது விளி. நண்பர்களாய் இருந்தால், 'நண்ப, நண்பர்காள்' என்றும் பெரியவர்களாய் இருந்தால், 'ஐய, ஐயன்மீர்,' என்றும், உறவினர்களாய் இருந்தால், 'தேவரீர் மாமா அவர்களுக்கு, தேவரீர் அண்ண அவர்களுக்கு' என்றும் விளிக்கலாம்.

4. செய்தி அல்லது உடல்: இப்பகுதியில் நீங்கள் எழுத விரும்பும் செய்திகளையெல்லாம் எழுத வேண்டும்.

5. கையெழுத்து: கடிதத்தின் செய்தி முடிந்த பின்பு உங்கள் கையெழுத்தை இடுதல் வேண்டும். கையெழுத்திடுவதற்கு முன்பு உங்கள் அன்புள்ள தம்பி, உன் அன்புள்ள, உனது நலத்தை விரும்பும், உங்கள் உண்மையுள்ள, உங்கள் கீழ்ப்படிதலுள்ள, என்பவை போன்றவற்றுள் ஏற்ற ஒன்றை இடுதல் வேண்டும்.

6. முகவரி (விலாசம்): கடிதம் பெறுகின்றவரின் பெயரைத் 'திருவாளர்' 'திரு' என்னும் அடைமொழிகளில் ஒன்றுடன் முதலில் எழுத வேண்டும். அவர் பெற்ற பட்டங்கள் (பி. ஏ., எம். ஏ., பி. ஏ., எல். டி., பி. எல்., போன்றவை) இருந்தால், அவற்றைப் பெயர் முடிவில் குறிப்பிட வேண்டும். இரண்டாவது வரியில் அவரது வீட்டு எண்ணும் தெருப்பெயரும் குறிப்பிட வேண்டும். அல்லாவிடில், அவர் செய்யும் உத்தியோகத்தைக் குறிப்பிடலாம். உத்தியோகத்தைக் குறிப்பிட்டால், அவர் உத்தியோகம் செய்யும் இடம் எங்கே உள்ளது என்பதை மறு வரியில் குறிப்பிட வேண்டும். முடிவில் அவர்

வசிக்கும் ஊரைக் குறிப்பிட வேண்டும். அவ்வூர் சிறிய கிராமமாய் இருந்தால், அவ்வூருக்கு அருகில் இருக்கும் தபால் நிலையம் உள்ள ஊரைக் குறிப்பிடவேண்டும். சிறு ஊராய் இருந்தால், அந்த ஊர் எந்த ஜில்லாவில் இருக்கிறது என்பதையும் குறிப்பிட வேண்டும். மாதிரிக்குச் சில விலாசங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(1) திருவாளர் அ. உலகநாதப் பிள்ளையவர்கள்,
பி. ஏ., பி. எல்.,
18, புதுத்தெரு, திருநெல்வேலி

(2) திருவாளர் மு. சம்பந்த முதலியார் அவர்கள்,
பி. ஏ., எல். டி.,
சரித்திர ஆசிரியர்,
போர்டு உயர்நிலைப் பள்ளி,
பட்டுக்கோட்டை.

(3) திருவாளர் வ. இராமலிங்கஞ் செட்டியார் அவர்கள்,
நெய்ம்மண்டி,
31, பெரிய கடைத் தெரு,
கும்பகோணம்.

பல வகை மாதிரிக் கடிதங்கள் :

1. ஒரு மாணவன் ஊரிலுள்ள தன் தந்தையாருக்கு எழுதுவது:

30, இராம கிருஷ்ண உயர்நிலைப்
பள்ளி மாணவர் விடுதி,
தியாகராயநகர்,
11—1—1949

தேவரீர் தந்தையார் அவர்களுக்கு:

வணக்கம்! இங்கு நான் சுகமாய் இருக்கிறேன்; என் பாடங்களை ஒழுங்ககாகப் படித்து வருகிறேன்.

அங்கு என் தாயார், தங்கை முதலியவர்களுடைய சுகத்தைப் பற்றியும், உங்கள் சுகத்தைப் பற்றியும் கடிதம் எழுதுமாறு வேண்டுகிறேன்.

எங்கள் வகுப்பு மாணவர் எல்லாரும் அடுத்த வாரம் மாமல்ல (மகாபலி) புரத்திற்கு உல்லாசப் பிரயாணம் செல்லப்போகிறோம். ஆசிரியர்களும் எங்களுடன் வரப்போகிறார்கள். உல்லாசப் பிர யாணச் செலவிற்கு ஒவ்வொரு மாணவனும் ஏழு ரூபாய் கொடுக்க வேண்டுமாம். அன்றியும், இங்கு அகில இந்திய சுதேசிப் பொருட்காட்சிச்சாலை மிகச் சிறப்பாக அமைந்துள்ளதாம். ஒரு நாள் ஆசிரியர் எங்களையெல்லாம் அழைத்துச் செல்வதாகக் கூறி யிருக்கிறார். ஆகவே, நீங்கள் எனக்கு வழக்கமாக அனுப்பும் தொகையுடன் பத்து ரூபாய் சேர்த்து அனுப்புமாறு வேண்டிக்கொள்கிறேன்.

தங்கை நன்றாகப் படிக்கிறாளா?

உங்கள் அன்புள்ள மகன்,

வீ. முருகேசன்.

முகவரி:

திருவாளர்,

வீராசாமித் தேவர்,

மிராசுதார்,

தம்பிக்கோட்டை,

தஞ்சை ஜில்லா.

2. நண்பனுக்குக் கடிதம் :

12, ஆண்டார் தெரு,
தெப்பக்குளம், திருச்சி,
9-12-1948.

அன்புடைய நண்பன் வேலனுக்கு:

இங்கு யானும், என் பெற்றோர்களும், தம்பியும் சுகம். அவ்வாறே அங்கு எல்லாருடைய சுகத்தையும் குறித்து எழுது.

உன்னிடமிருந்து நெடுநாளாகக் கடிதமே வாராமைக்குக் காரணம் என்ன? கடிதம் எழுதக் கூட உனக்கு நேரமில்லையா? எங்களுக்கு 23-12-1948 முதல் பள்ளிக்கூடத்தில் கிறிஸ்துமஸ் விடுமுறை தொடங்குகிறது. உங்களுக்கு எப்பொழுது விடுமுறை விடுகிறார்கள்? இவ்விடுமுறையிலாவது நீ இங்கு வந்து, என்னுடன் சில நாட்கள் தங்கக்கூடாதா? கட்டாயம் இவ்விடுமுறைக்கு நீ இங்கு வரவேண்டும். உன்னைப் பார்க்க நான் மிக ஆவலாய் இருக்கிறேன். உன்னிடம் பேச வேண்டிய செய்திகள் பல உள்ளன. ஆகவே, கட்டாயம் விடுமுறையின் போது வரவேண்டும்.

உன் அன்புள்ள நண்பன்,
வே. முத்துசாமி

முகவரி :

திரு. சு. நாராயணசாமி,
17, பச்சண்ண சந்து,
தஞ்சாவூர்.

3. சொற்பொழிவு நிகழ்த்த அழைக்கும் கடிதம் :

தமிழ் மாணவர் கழகம்

இந்து உயர்நிலைப்பள்ளி,
சென்னை, 12-2-1948.

அன்பு மிக்க ஐயன்மீர்,

வணக்கம்! எங்கள் கழகத்தின் ஆண்டுவிழாவை இந்த மாதத்தில் நடத்திவிட நாங்கள் முடிவு செய்துள்ளோம்: உங்களுடைய அரிய சொற்பொழிவை ஆண்டு விழா அன்று கேட்க நாங்கள் விரும்புகின்றோம். நீங்கள் மறுக்காமல் சொற்பொழிவு நிகழ்த்த ஒப்புக்கொள்ளுவீர்கள் என்பது எங்கள் நம்பிக்கை. உங்களுக்கு எந்த நாளில் ஓய்வு உள்ளதோ, அந்த நாளைக் குறிப்பிட்டு எழுதினால், நாங்கள் அந்த நாளிலேயே ஆண்டு விழாவை வைத்துக்கொள்ளுவோம். அருள்கூர்ந்து உங்கள் கருத்தை அறிவிக்குமாறு வேண்டுகின்றேன்.

உங்கள் அன்புள்ள
க. சிதம்பரம்,
செயலாளன்.

முகவரி:

திரு. ரா. பி. சேதுப் பிள்ளையவர்கள், பி.ஏ., பி.எல்.,
தமிழ்ப் பேராசிரியர்,
பல்கலைக் கழகம், சென்னை.

4. விடுமுறை அளிக்குமாறு ஆசிரியருக்குக் கடிதம் எழுதுதல்:

11, காக்காத் தோப்புத் தெரு,
மதுரை, 17-11-48.

மு. சேதுராமன்,
முதற்பாரம் பி. பிரிவு.

வகுப்பு ஆசிரியர்
முதற்பாரம், பி. பிரிவு
ஏ. ஆர். உயர்நிலைப்பள்ளி,
மதுரை.

ஐயா,

வணக்கம்! என் அண்ணன் திருமணம் கோயம்புத்தூரில் நடப்பதால், நான் என் பெற்றோர்களுடன் இன்றிரவு கோயம்புத்தூர் போகிறேன். ஆகவே, தயவு செய்து எனக்கு நான்கு நாட்கள் (18 19, 20, 23, தேதிகள்) விடுமுறை அளிக்குமாறு வேண்டுகிறேன்.

உங்கள் கீழ்ப்படிதலுள்ள மாணவன்,
மூ. சேதுராமன்

5. கழகக் கூட்டத்திற்கு அழைப்பு :

பேரன்புடையீர்,

வணக்கம்! எங்கள் பள்ளிக்கூடத்தில் 1-3-48 செவ்வாய்க்கிழமை மாலை 4-30 மணிக்குத் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடுகின்றோம். அதுபொழுது சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள், 'வள்ளுவரின் வாய்மொழி' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர் எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்க இசைந்துள்ளார்கள். உங்கள் வரவை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். கூட்டம் எங்கள் பள்ளிக்கூடத்தின் மேன்மாடத்தில் அமைத்துள்ள பேரறையில் நடைபெறும்.

உங்கள் அன்பன்,
வ. சம்பந்தன்,
செயலாளன்.

சென்னை,
24-2-48

சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப்பள்ளித்
தமிழ் மாணவர் கழகம்.

13. நிகழ்ச்சி நிரல் :

1. இறை வணக்கம்
2. சென்ற கூட்டத்து நிகழ்ச்சிக்குறிப்புப் படித்தல் (செயலாளன்)
3. தலைவர் பரிசு வழங்கல்
4. தலைவர் முன்னுரை
5. சொற்பொழிவு
6. தலைவர் பின்னுரை
7. நன்றி கூறல் (செயலாளன்)
8. 'வாழிய செந்தமிழ்' } குழுப் பாட்டு
'ஜன கணமன' }

பயிற்சி:

1. கடிதத்தின் உறுப்புக்கள் யாவை?

2. கடிதம் எழுதுபவரின் இருப்பிடமும், எழுதும் தேதியும் கடிதத்திற்குறிப்பிடப்பட வேண்டுவது ஏன்?

3. நண்பன், ஆசிரியர், புதியவர்: இவர்களை விளிக்கும் முறைகள் யாவை?

4. கீழ்க்காண்பனவற்றுள் கூறியவாறு தனித்தனி கடிதங்கள் வரைக :—

(அ) உங்கள் வகுப்பு மாணவர் சங்கத்தில் வந்து சொற்பொழிவாற்றுமாறு **பேராசிரியர் மு. வரதராசனுர் அவர்களை** அழைக்க.

(ஆ) உடல் நலம் குறைந்திருப்பதாகவும், நான்கு நாட்களுக்கு விடுமுறை அளிக்குமாறும் உங்கள் வகுப்பு ஆசிரியருக்கு ஒரு '**விடுமுறைக் கடிதம்**' எழுதுக.

(இ) உங்கள் பள்ளிக்கூடத்தில் நடைபெறும் கம்பர் விழாவிற் கலந்துகொள்ளுமாறு எல்லாரையும் அழைக்க.

(ஈ) செஞ்சிக்கோட்டைக்கு உல்லாசப் பிரயாணம் செல்ல மாணவர்கள் முடிவு செய்திருக்கும் செய்தியைப் பற்றித் தகப்பனருக்கு ஒரு கடிதம் எழுதுக.

(உ) உங்கள் கழகத்துத் தொடக்க விழாக் கூட்டத்தில் நடந்த நிகழ்ச்சிகளை வரிசைப்படி வரைக.

14. கதைக்கு ஏற்ற தலைப்பு அளித்தல்

கீழே காணப்படும் கதையைப் படித்துப் பாருங்கள்; அதற்கு ஒரு தலைப்பையும் யோசித்துக் கூறுங்கள். தலைப்பு, கதைக்கு ஏற்றவாறும், பொருத்தமாயும் இருக்க வேண்டும் :

ஒரு நாள் ஒரு நாய்க்கு மாமிசத் துண்டு ஒன்று கிடைத்தது. அதனால், அந்நாய் பெருமகிழ்ச்சி கொண்டது. வேறு நாய் அத்துண்டில் பங்கு கேட்குமோ என்ற அச்சம் அந்நாய்க்கு உண்டாகவே, அது விரைந்து ஓடியது. நெடுந்தூரம் சென்ற பின் அது ஓர் ஆற்றங்கரையை அடைந்தது. ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் இருந்தது. நாய் அப்பாலத்தின்மேற் போகும்பொழுது கீழே எட்டிப் பார்த்தது. ஆற்று நீர் தெளிந்திருந்ததால், அதனுடைய நிழல் அந்நீரில் தெரிந்தது, வேறொரு நாய் மாமிசத் துண்டுடன் நீரில் இருப்பது போலத் தோன்றியது. எனவே, அந்த நாய் நீரிற்கண்ட மாமிசத்துண்டையும் பெற விரும்பி வாயைத்திறந்தது. அந்தோ! பரிதாபம்! உள்ள மாமிசத்துண்டும் நீரில் விழுந்துவிட்டது. அதை மீன்கள் இழுத்துச் சென்றுவிட்டன. நாய் மிக்க வருத்தம் அடைந்தது.

112652

5.1.63

5B
3-42

NEW METHOD
TAMIL GRAMMAR AND COMPOSITION
(BOOK 1)

BY

VIDWAN A. M. PARAMASIVANANDA MUDALIAR B.O.L., M.LITT
Asst. Professor of Tamil, Pachaiyappa's College, Madras.

THE ORIENTAL PUBLISHING HOUSE
EDUCATIONAL PUBLISHERS,
286, ESPLANADE (APPAH BUILDINGS) MADRAS 1.

Copyright]

[Price As. 13